தமிழரசு
Tamilarasu
(Monthly)

கலைஞர் 100
1924 - 2023

செப்டம்பர் 2023 (September 2023)
விலை ரூ.30/– (Price Rs.30/-)

செய்தி – மக்கள் தொடர்புத்துறையின் வெளியீடு

மலர் (Vol.) : 54
இதழ் (Issue) : 3

கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்
தொடக்கவிழா

தொடங்கி வைப்பவர்

திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்
மாண் தமிழ்நாடு முதலமைச்ச

கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்

தமிழரசு

தமிழ்நாடு அரசு
செய்தித்துறையின் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு 2054
சோபகிருது வருடம்
ஆவணி - புரட்டாசி
செப்டம்பர் 2023

மலர் : 54 விலை ரூ.30 இதழ் : 3

ஆசிரியர் - வெளியிடுபவர்
த. மோகன், இ.ஆ.ப.,
இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்பு மற்றும் அலுவலால் அரசு இணைச் செயலாளர்

நிருவாக ஆசிரியர்
இரா. அண்ணா
இணை இயக்குநர் (வெளியீடுகள்)

முதன்மைப் பொறுப்பாசிரியர்
அ. மகேஸ்வரி
உதவி இயக்குநர்

பொறுப்பாசிரியர்கள்
க.அ. முகம்மது ரசூல்
எஸ். உதயா கதிரவன்
ச. மஞ்சுளா
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள்

உதவி ஆசிரியர்கள்
மு. மணிமேகலை
கு. சுபாஷ்
இரா. பாலாஜி
சி. சுஜிதா

நிருபர்கள்
எஸ்.ஆர்.எஸ். ஸ்ரீந்தர்
ஜெ. ஜெயசிம்ஹன்

ஓவியர்
இரா. உமாமகேஸ்வரி

இதழ் உதவியாளர்
நி. ஷீலா

கணினி வடிவமைப்பு
தி. ஜெய்சங்கர்
க.இரா. உமாமகேஸ்வரி

முதுநிலை அச்சுப்பிழைத் திருத்துபவர்
கோ. சந்திரசேகர்

தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம்,
எண்.5, இராஜீவ் காந்தி சாலை,
கானகம், தரமணி, சென்னை-600 113.
தொலைபேசி : 22542221/22542224
மின்னஞ்சல் : ddpub.tamilarasu@tn.gov.in
இணையதளம் : www.tndipr.gov.in

தமிழரசு இதழுக்கு
www.tamilarasu.org என்ற இணையதளத்தில்
சந்தா தொகையினை நேரடியாகச் செலுத்தலாம்.

மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கண் படின். (குறள்-217)

பிறருக்கு உதவிடும் பெருந்தன்மையாம் ஒப்புரவு உடையவனிடம், செல்வம் சேர்ந்தால் அது ஒரு நல்ல மரத்தின் எல்லா உறுப்புகளும் மருந்தாகப் பயன்படுவது போன்றதாகும்.

– திருக்குறள் **கலைஞர்** உரையிலிருந்து...

இந்த இதழில்...

★ 1 கோடியே 6 இலட்சத்து 50 ஆயிரம் மகளிர் பயன்பெறும் "கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்" 4

★ வடகிழக்குப் பருவமழை குறைவால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ரூ.181.40 கோடி வறட்சி நிவாரணம் 12

★ நெடுஞ்சாலைத்துறை சார்பில் ரூ.434.65 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள பாலங்கள் மற்றும் சாலைகள் 22

★ சமுதாய நலனுக்கான ஒரு சிறந்த திட்டம் "போதைப் பொருட்கள் இல்லாத தமிழ்நாடு" திட்டம் 25

★ கச்சத் தீவை மீட்டெடுத்துத் தமிழ்நாட்டு மீனவர்களின் மீன்பிடி உரிமையைக் காப்போம் 34

★ ரூ.4,276.44 கோடி மதிப்பீட்டில் பேரூரில் கடல் நீரைக் குடிநீராக்கும் நிலையம் 43

★ வேலூரில் ரூ.150 கோடி மதிப்பீட்டில் பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை 45

★ மாணவர்களாகிய நீங்கள் நல்லிணக்கத்தின் பண்பைத் தொடர்ந்து எடுத்துச் செல்லுங்கள் 47

★ 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் 17 இலட்சம் அரசு மாணவர்கள் பயன்பெறும் வகையில் "முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்" 51

★ இந்தியாவில் முதலாவதாகச் சென்னையில் தொழில்நுட்ப மையம் 61

★ மொழிபெயர்ப்பு இலக்கியங்களும் தமிழும்-கட்டுரை 74

முதலாம் பக்க அட்டை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
15.09.2023 அன்று காஞ்சிபுரம், பச்சையப்பன் ஆடவர் கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற விழாவில்,
"கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை"
தொடங்கி வைத்து வங்கிப் பற்று அட்டைகளை வழங்கினார்.

1 கோடியே 6 இலட்சத்து 50 ஆயிரம் மகளிர் பயன்பெறும் "கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்"

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தொடங்கி வைத்து ஆற்றிய உரை—15.09.2023

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளான 15.09.2023 அன்று காஞ்சிபுரம், பச்சையப்பன் ஆடவர் கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற விழாவில், 1 கோடியே 6 இலட்சத்து 50 ஆயிரம் மகளிர் பயன்பெறும் வகையில், மகளிருக்கு மாதந்தோறும் ரூ.1,000 வழங்கிடும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தைத் தொடங்கி வைத்தார். இத்திட்டத் தொடக்கத்தின் அடையாளமாக 13 மகளிருக்கு வங்கி பற்று அட்டைகளை (ATM Cards) வழங்கினார்.

நிதிநிலை அறிக்கையில் மகளிர் உரிமைத் தொகை திட்டம் பற்றிய அறிவிப்பு

தமிழ்நாடு அரசின் 2023-2024ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், "மகளிருக்குச் சொத்துரிமையும், உள்ளாட்சி அமைப்புகளில் தனி இடஒதுக்கீடு அளித்தது முதல், தற்போது கட்டணமில்லாப் பேருந்து பயணம் வழங்கியது வரை, மகளிரின் நலன் காத்து அவர்களது உரிமைகளை நிலைநாட்டுவதில் எப்போதும் அக்கறையுடன் இவ்வரசு செயல்பட்டு வருகிறது. அந்த வரிசையில், குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ரூ.1,000 வழங்கப்படும் என்ற தேர்தல் வாக்குறுதியில் அறிவித்தபடி, தகுதிவாய்ந்த குடும்பங்களின் குடும்பத் தலைவிகளுக்கு வரும் நிதியாண்டில் மாதம் ரூ.1,000 உரிமைத் தொகையாக வழங்கப்படும். வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தத் திட்டம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டான இந்த ஆண்டில், திராவிட இயக்க மாதம் எனச் சொல்லத்தக்க செப்டம்பர் மாதத்தில், தாய் தமிழ்நாட்டின் தலைமகன் - பேரறிஞர் பெருமகன் அறிஞர் அண்ணா அவர்களின்

பிறந்தநாளான செப்டம்பர் மாதம் 15ஆம் நாள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்படும்” என்று அறிவிக்கப்பட்டது.

மகளிர் உரிமைத் தொகை வழங்கும் திட்டம் குறித்துத் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் விளக்கம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், 27.03.2023 அன்று, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், இத்திட்டத்தைச் செயல்படுத்துவது குறித்து அளித்த விளக்கத்தில், “மகளிர் உரிமைத் தொகைத் திட்டம்” இரண்டு நோக்கங்களைக் கொண்டது. பிரதிபலன் பாராமல் வாழ்நாளெல்லாம் ஓயாமல் உழைத்துக்கொண்டிருக்கும் பெண்களின் உழைப்புக்குக் கொடுக்கும் அங்கீகாரம் முதன்மையானது. அடுத்து, ஆண்டுக்கு ரூ.12 ஆயிரம் உரிமைத் தொகை என்பது, பெண்களின் வாழ்வாதாரத்திற்கு உறுதுணையாக இருந்து, வறுமையை ஒழித்து, வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, சுயமரியாதையோடு சமூகத்தில் அவர்கள் வாழ்வதற்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என்பதாகும்.

மகளிரின் சமூகப் பங்களிப்பை அங்கீகரிக்கும் விதமாக அறிவிக்கப்பட்டிருக்கும் மாதம் ஆயிரம் ரூபாய் என்பது, குடும்பத் தலைவிகளுக்கு அவரவர் வங்கிக் கணக்கில் நேரடியாகச் செலுத்தப்படும். நடைபாதையில் வணிகம் செய்திடும் மகளிர், அதிகாலையில் கடற்கரை நோக்கி விரைந்திடும் மீனவ மகளிர், கட்டுமானத் தொழிலில் பணிபுரியும் மகளிர், சிறிய கடைகள், வணிகம், சிறுதொழில் நிறுவனங்களில் சொற்ப ஊதியத்தில் பணிபுரியும் மகளிர், ஒரே நாளில் ஒன்றுக்கு மேற்பட்ட இல்லங்களில் பணிபுரியக்கூடிய பெண்கள் எனப் பல்வேறு வகைகளில் தங்கள் விலைமதிப்பில்லா உழைப்பைத் தொடர்ந்து வழங்கி வரும் பெண்கள் இந்தத் திட்டத்தால் பயன்பெறுவார்கள் என்றும், இந்த மகத்தான ‘கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்’ ஏறத்தாழ ஒரு கோடி குடும்பத் தலைவிகளுக்கு, மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கிடும் வகையில் அமைந்திடும் என்றும் அறிவித்தார்.

சமுதாயத்தில் உள்ள விளிம்பு நிலை மக்களாகிய சாலையோரங்களில் குடியிருப்போர், பழங்குடியினர், தூய்மைப் பணியாளர்கள், இதர ஆதரவற்றோர் இந்தத் திட்டத்தில் பயன் அடைவதை மாவட்ட ஆட்சியர்கள் உறுதிசெய்ய வேண்டும் என்றும், அவர்களிடம் குடும்ப அட்டை, ஆதார் அட்டை போன்ற தரவுகள் இல்லையென்றாலும் கூட, அவற்றைப் பெறுவதற்கு உரிய வழிவகை செய்து, கலைஞர் மகளிர் உரிமைத் தொகை அவர்களுக்குக் கிடைப்பதற்கு உதவி புரிய வேண்டும் என்றும், எந்தவொரு தகுதியான பயனாளியும் விடுபட்டுவிடக் கூடாது என்றும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்கள், அரசு உயர் அலுவலர்களை அறிவுறுத்தி இருந்தார்.

தருமபுரியில் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வழங்கும் திட்டம் விண்ணப்பப் பதிவு முகாம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்

தருமபுரி மாவட்டம், தொப்பூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வழங்கும் திட்டப் பயனாளிகளின் விண்ணப்பங்களைப் பதிவு செய்யும் முகாமினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 24.07.2023 அன்று தொடங்கி வைத்தார்.

இந்தத் திட்டத்தில் மாநிலம் முழுவதும் விண்ணப்பங்கள் பெற 24.07.2023 முதல் 04.08.2023 வரை முதல் கட்டமாகவும், 05.08.2023 முதல் 14.08.2023 வரை இரண்டாவது கட்டமாகவும், மேற்சொன்ன இரண்டு கட்டங்களிலும், விடுபட்டவர்களுக்கு 18.08.2023 முதல் 20.08.2023 வரை சிறப்பு முகாம் வழியாகவும் விண்ணப்பங்கள் பெறப்பட்டுப் பதிவு செய்யப்பட்டன.

கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தில் இணைந்து கொள்ள 1 கோடியே 63 இலட்சம் விண்ணப்பங்கள் அரசிற்கு வந்துள்ளது. அவற்றில் தகுதியுள்ள 1 கோடியே 6 இலட்சத்து 50 ஆயிரம் விண்ணப்பங்கள் தேர்வு செய்யப்பட்டு, அவர்களுக்கு கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின்கீழ் மாதந்தோறும் ரூ.1,000 அவர்களது வங்கிக் கணக்கில் நேரடியாக செலுத்தப்படும்.

விண்ணப்பதாரர்களின் விண்ணப்ப முடிவு நிலைகுறித்தகுறுஞ்செய்திவிண்ணப்பதாரர்களின் பதிவு செய்யப்பட்ட கைப்பேசி எண்ணிற்கு 18.09.2023 முதல் அனுப்பி வைக்கப்படும்.

கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தை தொடங்கி வைத்தல்

பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த நாளான இன்று, அவர் பிறந்த காஞ்சிபுரத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், 1 கோடியே 6 இலட்சத்து 50 ஆயிரம் மகளிர் பயன்பெறும் வகையில், மாதந்தோறும் ரூ.1,000 வழங்கிடும் தமிழ்நாட்டின் வரலாற்றில் மிகப் பெரிய திட்டமான கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தைத்

தொடங்கி வைத்து, 13 மகளிருக்கு வங்கிப் பற்று அட்டைகளை வழங்கினார். இந்தத் திட்டத்திற்காக இந்த ஆண்டுக்கு 7 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை:

"தலைவர் என்பார் – தத்துவ மேதை என்பார் – நடிகர் என்பார் – நாடக வேந்தர் என்பார்– சொல்லாற்றல் சுவைமிக்க எழுத்தாற்றல் பெற்றார் என்பார் – மனிதரென்பார் – மாணிக்கமென்பார் – மாநிலத்து அமைச்சரென்பார் – அன்னையென்பார் – அருள்மொழிக் காவல் என்பார் -அரசியல்வாதி என்பார் – அத்தனையும் தனித்தனியே சொல்வதற்கு நேரமற்றோர் – நெஞ்சத்து அன்பாலே 'அண்ணா' என்ற ஒரு சொல்லால் அழைக்கட்டும் என்றே – அவர் அன்னை பெயரும் தந்தார்" – என்று 'காஞ்சி தந்த வள்ளுவன்' பேரறிஞர் அண்ணா பற்றி அடுக்கு மொழியில் கவிதை நடையில் சொன்னார், நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்!

அப்படிப்பட்ட பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களது பிறந்தநாளான இன்றைக்குக் கலைஞர் உரிமைத் தொகை எனும் வரலாற்றுச் சிறப்புமிக்க தொடக்கவிழாவிலே பங்கேற்றுச் சிறப்பித்துக் கொண்டிருக்கக்கூடிய,

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

அண்ணாவைத் தந்த தாய்மடியாம், கலைமிகு காஞ்சி மாநகருக்கு நான் வந்திருக்கிறேன். என்னுடைய அரசியல் பயணத்திற்கு எத்தனையோ உந்து சக்திகள் இருக்கலாம். எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்த மாதிரி இருந்தது இந்தக் காஞ்சி மாநகர்.

மிகவும் சின்ன வயதிலேயே கோபாலபுரம் பகுதியில் 'இளைஞர் தி.மு.க.' என்ற அமைப்பை ஏற்படுத்தி அந்த அமைப்பின் மூலமாக பொதுவாழ்வில் என்னை ஈடுபடுத்திக் கொண்டேன். அப்போது பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்துவது என்னுடைய வழக்கம்.

1971ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா துயில் கொண்டிருக்கக்கூடிய அவருடைய கல்லறையில் மலர்வளையம் வைத்து மரியாதை செய்து – வணங்கி, அண்ணா சதுக்கத்திலிருந்து 'அண்ணா சுடரை' கையில் ஏந்தி தொடர் ஓட்டமாக நானும், என்னுடைய நண்பர்களும் புறப்பட்டு, காஞ்சிபுரம் வந்து, இங்கே நடைபெற்றுக் கொண்டிருந்த கழக மாநாட்டு மேடையில் தலைவர் கலைஞர் அவர்களின் கையில் அண்ணா சுடரை நான் ஒப்படைத்தேன். அப்போது, தலைவர் கலைஞருக்குப் பக்கத்தில் அன்றைக்குப் பொதுச்செயலாளராக இருந்த மதிப்பிற்குரிய நாவலர் அவர்களும், பொருளாளராக இருந்த மரியாதைக்குரிய மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்களும் இருந்தார்கள்.

அன்றைக்கு 18 வயதில் அண்ணா சுடரை ஏந்தி இங்கே வந்து நான், இன்றைக்குத் தந்தைப் பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும், தலைவர் கலைஞர் அவர்களும் எடுத்து வந்த, சுயமரியாதை, சமத்துவம், சமூகநீதி, மாநில சுயாட்சி உள்ளிட்ட தமிழ்ச் சமுதாயத்தைக் காக்கும் திராவிடச் சுடரை ஏந்தி வந்திருக்கின்றேன். அவர்களுடைய கொள்கைகளை ஏற்று வாழ்வதில்தான் தமிழ்ச் சமூகத்தில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தப் போகின்ற "கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தைத்" தொடங்கி வைக்க இங்கே வந்திருக்கின்றேன்.

இத்திட்டம் தொடங்குவது, அதை நான் தொடங்கி வைப்பது, என் வாழ்நாளில் எனக்கு கிடைத்த மிகப்பெரிய பேறாக நான் கருதுகிறேன்.

தாய்த் தமிழ்நாட்டிற்குத் "தமிழ்நாடு" என்று பெயர் சூட்டிய பேறறிஞர் அண்ணா அவர்கள் இனி இந்தப் பெயரை யாராலும் நீக்க முடியாது. இந்தப் பெயர் நீட்டிக்கும் காலமெல்லாம் இந்த நாட்டை அண்ணாத்துரைதான் ஆள்கிறான் என்றார்.

அதேபோல், இன்றைக்கு இந்த மகளிர் உரிமைத் திட்டத்தைத் தொடங்கும் இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் சொல்கிறேன், இன்னும் எத்தனை ஆண்டுகளுக்குப் பெண்கள் உரிமைத் தொகை பெறுகிறார்களோ அத்தனை ஆண்டுகளுக்கும் இந்த ஸ்டாலின்தான் ஆள்கிறான் என்று பொருள்.

விடியல் பயணம் திட்டம்

இந்த இரண்டரை ஆண்டில் எத்தனை திட்டங்கள்! மகளிருக்குக் கட்டணமில்லாப் பேருந்து வசதிகளைத் தருகின்ற 'விடியல் பயணம்' திட்டம், பசியோடு பள்ளிக்கு வருகின்ற குழந்தைகளுக்குக் காலை உணவுத் திட்டம், உயர்கல்வி கற்க வருகின்ற மாணவியருக்கு ஆயிரம் ரூபாய் வழங்குகின்ற புதுமைப்பெண் திட்டம், இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கும், நான் முதல்வன் திட்டம், இந்தத் திட்டங்களைத் தொடங்கிய நாட்களில் எப்படிப்பட்ட மகிழ்ச்சியை நான் அடைந்தேனோ, அதைவிட அதிகமான மகிழ்ச்சியில் இப்போது இருக்கின்றேன்.

சமீபத்தில் ஒரு வீடியோவை பார்த்தேன். அதில் ஒரு நிருபர், மக்களிடம் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தில் ரூ.1,000 கொடுக்கப்பட்ட பிறகு என்ன செய்வீர்கள், என்று கேட்கிறார்.

"காசு இல்லாததால் மருந்து மாத்திரை சாப்பிடுறதில்ல.. இனி மாத்திரை வாங்குவேன்" என்று ஒரு பாட்டி சொல்கிறார்கள். இன்னொரு பெண்மணி சொன்னார்கள், என்ன சொன்னார்கள் என்றால், "தினமும் ஒருவேளைதான் சாப்பிடுகிறேன்.. இந்த ஆயிரம் ரூபாய் கிடைச்சா... காலையில ரெண்டு இட்லி சாப்பிடுவேன்" என்று சொன்னார்கள்.

இந்த இரண்டு பதிலும் எனக்கு நெகிழ்ச்சியைத் தந்தாலும், காலத்திற்கும் எண்ணி நான் பெருமைப்படுகிற மாதிரியான ஒரு பதிலை, நாம் எந்த நோக்கத்தில் இந்தத் திட்டத்தை செயல்படுத்துகிறோமோ அதை ஒரு வரியில் சொல்கின்ற மாதிரி இன்னொரு பெண்மணி ஒன்று சொன்னார்...

"சுருக்குப் பையில் பணம் இருந்தது என்றால் நிமிர்ந்து நடந்து போவேன்" என்று அவர் சொன்னார். அதாவது, "சுருக்குப் பையில் பணம் இருந்தது என்றால் நிமிர்ந்து நடப்பேன்" என்று அவர் சொன்னார். இதைவிட இந்தத் திட்டத்திற்கும், எனக்கும் வேறு என்ன பெருமை வேண்டும்?

அண்ணா பிறந்தநாளில், கலைஞர் நூற்றாண்டில் செயல்படுத்துகின்ற இந்தத் திட்டத்திற்கு, இதைவிட என்ன பாராட்டு இருக்க முடியும்? இந்தக் கூட்டத்தில் இருக்கின்ற உங்கள் ஒவ்வொருவரிடமும் ஒரு பதில் இருக்கும். பதில் வேறு வேறாக இருந்தாலும் பயன் ஒன்றுதான்.

பெண்கள் உழைப்புக்குக் கொடுக்கும் அங்கீகாரம்

இந்த ஆயிரம் ரூபாய் உங்கள் வாழ்க்கைக்கு உதவியாக இருக்கப் போகின்றது. நாள்தோறும் உதிக்கும் உதயசூரியன் போல உங்களுடைய இந்த உதயசூரியன் ஆட்சியும் உங்களுக்குப் புத்துணர்ச்சியை வழங்க இந்த ஆயிரம் ரூபாய் பயன்படப்போகின்றது. இது தி.மு.க.வுடைய தேர்தல் அறிக்கையில் அறிவித்த வாக்குறுதி! மிகவும் முக்கியமான வாக்குறுதி!

"இது நிறைவேற்ற முடியாத வாக்குறுதி, பொய்யான வாக்குறுதியைக் கொடுத்து மக்களை ஏமாற்றிவிட்டார்கள். இவர்களால் தர முடியாது" என்று பொய் பரப்புரையைத் தங்களுடைய உயிர்மூச்சாக வைத்து வாழுகின்ற சிலர் சொன்னார்கள். ஆட்சிக்கு வந்தவுடன் கொடுத்திருப்போம். ஆனால் நிதி நிலைமை சரியாக இல்லை. அதனால்தான், நிதி நிலைமையை ஓரளவுக்குச் சரி செய்துவிட்டு இப்போது கொடுக்கின்றோம். இதையும் சிலரால் தாங்கிக்கொள்ள முடியவில்லை! பொய்களையும், வதந்திகளையும் கிளப்பி இந்தத் திட்டத்தை முடக்க நினைத்தார்கள். அறிவித்துவிட்டால், எதையும் நிறைவேற்றிக் காட்டுவான் இந்த ஸ்டாலின் என்று தமிழ்நாட்டு மக்களான உங்களுக்கு நன்றாகத் தெரியும். சொன்னதைச் செய்வான் கலைஞரின் மகன் என்பதற்கு இதுதான் சாட்சி. இந்த விழா காஞ்சிபுரத்தில் மட்டுமல்ல – தமிழ்நாடு முழுவதும் இருக்கக்கூடிய மாவட்டங்களில், நகரங்களில் நடந்துகொண்டு இருக்கிறது.

நான் காஞ்சிபுரம் வந்திருப்பது மாதிரியே, அமைச்சர்கள் எல்லோரும் அனைத்து மாவட்டங்களுக்கும் சென்று விழாக்களில் கலந்து கொண்டு இருக்கிறார்கள். நான் போட்ட ஒரு கையெழுத்து, பலரது வாழ்க்கையை மாற்றப் போகிறது என்ற அந்த உரிமையை எனக்குக் கொடுத்தவர்களே நீங்கள்தான்!

தமிழ்நாட்டு மக்களான நீங்கள் உதயசூரியன் சின்னத்தையும்,எங்கள் கூட்டணிக்கட்சிகளுடைய சின்னங்களையும் வாக்கு இயந்திரத்தில் அழுத்துனதாலதான் முதலமைச்சர் பொறுப்பில் உட்கார்ந்து உங்களுக்குத் தேவையானதை செய்து கொண்டு இருக்கிறேன்.

மக்கள் கொடுத்த வாய்ப்பைப் பயன்படுத்துகிறேன். மக்களுக்காகத்தான் பயன்படுத்துவேன். இந்த இரண்டு திட்டங்கள், நான் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய இந்தத் திட்டம், இரண்டு நோக்கங்களைக் கொண்ட திட்டம். ஒன்று, பலனை எதிர்பாராமல் வாழ்நாளெல்லாம் உழைக்கக்கூடிய பெண்களுடைய உழைப்புக்குக் கொடுக்கும் அங்கீகாரம்!

சமூக சீர்திருத்த காலம்

இரண்டாவது நோக்கம், ஆண்டுக்கு 12 ஆயிரம் ரூபாய் உரிமைத் தொகை கிடைக்கப் போகின்றது. இது பெண்களுடைய வாழ்வாதாரத்துக்கு உறுதுணையாக இருந்து, வறுமையை ஒழித்து, வாழ்க்கைத்தரத்தை உயர்த்தி, சுயமரியாதையோடு சமூகத்தில் பெண்கள் வாழ உறுதுணையாக இருக்கும்.

இந்த இரண்டும் 'திராவிட மாடல்' ஆட்சியோட நோக்கங்கள். தந்தைப் பெரியாரிடம், பேரறிஞர் அண்ணாவிடம், தலைவர் கலைஞர் அவர்களிடம் நாங்கள் கற்ற பாடங்களுடைய அடிப்படையில்தான் இந்தத் திட்டத்தைத் தீட்டி இருக்கிறோம். வரலாற்றுப் பக்கங்களைப் புரட்டிப் பார்த்தால், தாய்வழிச் சமூகமுறைதான் மனித குலத்தில் முதலில் வழிநடத்தி வந்திருக்கிறது.

உழவுக் கருவிகளைக் கண்டுபிடித்து, வேளாண் சமூகமாக மாறினால்கூட பெண்களுடைய உழைப்பு ஆண்களுக்கு நிகராகவே இருந்தது. ஆனால்கா லப்போக்கில், மதத்தின் பெயராலும், பழமையான மரபுகளின் பெயராலும், பல்வேறு ஆதிக்க வர்க்கங்களாலும், பெண்கள் வீட்டுக்குள்ளேயே முடக்கப்பட்டார்கள்.

பெண்களுக்குக் கல்வியறிவு மறுக்கப்பட்டது. பெண்குலத்தினுடைய உழைப்பு நிராகரிக்கப்பட்டது. பெண்களை அடிமையாக நினைக்கின்ற – நடத்துகின்ற காலம் ஒன்று இருந்தது. கீழ் வகுப்பைச் சேர்ந்தவர்களும், பெண்களும் இழிவானவர்கள்" என்றெல்லாம்கூட எழுதி வைத்திருந்தார்கள்.

இன்றைக்கு மானமும், அறிவும் உள்ள யாரும் அந்த மாதிரி பேசுவதில்லை. பெண் உடல்ரீதியாக எதிர்கொள்கின்ற இயற்கை சுழற்சியைக்கூட தீட்டு என்று சொல்லி வீட்டுக்குள்ளேயே முடக்கி வைத்தார்கள். ஓரமாக ஒதுக்கி வைத்தார்கள். படிக்கக் கூடாது – வேலைக்குப் போகக் கூடாது – வீட்டுப்படியைத் தாண்டக் கூடாது – அடுப்பூதும் பெண்ணுக்குப் படிப்பெதற்கு? என்று பழமைவாத சிந்தனைகளை வைத்துப் பெரும்பான்மை பெண்ணினத்தை முடக்கி வைத்தார்கள். இது அடித்தட்டு வகுப்பைச் சேர்ந்த பெண்கள் மட்டுமில்லை, உயர் வகுப்பைச் சேர்ந்த பெண்களும் அனுபவித்த துன்பம்!

8 வயதில், 10 வயதில் குழந்தைகளுக்குத் திருமணம் செய்து வைத்தார்கள். இவையெல்லாம் இன்றைக்கு மாறி இருக்கிறது. ஆனாலும், குழந்தைத் திருமணங்களை ஆதரித்துப் பேசுகின்ற பிற்போக்குவாதிகளும் இருக்கத்தான் செய்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்குத் திராவிட இயக்கத்தின் மேல் வெறுப்பு, தீராத கோபம்... ஏனென்றால்..? சிறுமிகளுக்குத் திருமணம் செய்து வைக்க முடியாது. அப்படி செய்தால், அது சட்டப்படி குற்றம். கைம்பெண் விரும்பினால் மறுமணம் செய்துகொள்ளலாம். மறுமணம் செய்துகொள்ளக் கூடாது என்று யாரும் சொல்ல முடியாது.

பெண் குழந்தைகள் அனைவரும் படிக்க பள்ளி – கல்லூரிக்கு வந்துவிட்டார்கள். இனி, உனக்குப் படிப்பு எதுக்கு என்று சொல்ல முடியாது. நீ வேலைக்குப் போகக்கூடாது என்று யாரும் தடுக்க முடியாது. இந்தச் சமூக சீர்திருத்த காலத்தை உருவாக்கியதுதான் திராவிட இயக்கம்!

இன்றைக்குப் பள்ளிகளில், கல்லூரிகளில் ஆண்களைவிட பெண்கள்தான் அதிகமாகப் படிக்கிறார்கள். அதுவும் நன்றாகப் படிக்கிறார்கள். அனைத்து வேலைகளுக்கும் பெண்கள் வந்துவிட்டார்கள். இந்தப் பாலினச் சமத்துவத்தைக் கொண்டு வந்து பெண்ணும், ஆணும் சரிநிகர் என்று உயர்த்தியதுதான் நம்முடைய திராவிட மாடல்!

இன்னும் சொல்லவேண்டும் என்றால், தந்தை பெரியார் சொன்ன மாதிரி, ஆணை விடவும் உயர்ந்தவர்களாகப் பெண்களை உயர்த்துவதுதான் திராவிட மாடல்! ஏழைத் தாய்மார்களின் குழந்தைகள் இன்றைக்கு மருத்துவர்களாக, பொறியாளர்களாக, ஆசிரியர்களாக வலம் வருவதைப் பார்க்கின்றபோது பெருமையாக இருக்கிறது. இந்தச் சமூகத்தில் வெற்றிபெற்ற ஒவ்வொரு சாதனையாளருடைய பின்னாலும், பெண்களுடைய உழைப்பு இருக்கின்றது என்று யாரும் மறுக்க முடியாது.

கிராம பொருளாதாரத்தைச் சுமக்கும் முதுகெலும்பு

“எங்கள் அம்மா இல்லை என்றால் நான் இல்லை” என்று எத்தனையோ சாதனை மாணவிகள் பேட்டி தருவதைத் தொலைக்காட்சியில், பத்திரிகைகளில் பார்த்திருக்கின்றோம். படித்திருக்கின்றோம். பூட்டிய இரும்புக் கூட்டின் கதவைத் திறந்து, பெண் அடிமைத்தனத்தைத் தகர்த்து, பெண்களுக்கான சமூக, பொருளாதார விடுதலையை மீட்க எத்தனையோ சமூக சீர்திருத்தவாதிகள் முன்வந்தாலும், இருபதாம் நூற்றாண்டில், தந்தை பெரியாருடைய சுயமரியாதை இயக்கம்தான் வீறுகொண்ட போராட்டங்களின் மூலமாகப் பெண் விடுதலைக்குப் பாதை அமைத்தது. அதனால்தான் 1938ஆம் ஆண்டில் ‘தமிழ்நாட்டுப் பெண்கள் மாநாட்டில்’ ‘பெரியார்’ என்ற பட்டத்தைப் பெண்கள் எல்லோரும் சேர்ந்து கொடுத்தார்கள். இன்றைக்கும் ஏழைக் குடும்பங்களையும், கிராமப் பொருளாதாரத்தையும் சுமக்கும் முதுகெலும்பாகப் பெண்கள்தான் இருக்கிறார்கள். ஒவ்வொரு நாளும் தன் திறனுக்கேற்ற பணிபுரிந்து பொருள் ஈட்டும் ஒவ்வொரு ஆணுக்குப் பின்னாலும் அவருடைய தாய், சகோதரி, மனைவி என அந்த ஆணின் வீட்டுப் பெண்களுடைய பல மணிநேர உழைப்பு மறைந்திருக்கிறது.

ஒரு ஆணினுடைய வெற்றிக்காகவும், தங்கள் குழந்தைகளுடைய கல்வி, உடல்நலம் காக்கவும், ஒரு நாளைக்கு எத்தனை மணிநேரம் பெண்கள் உழைத்திருப்பார்கள்? அதற்கெல்லாம் ஊதியம் கணக்கிட்டுக் கொடுத்தால் எவ்வளவு கொடுப்பது? ஆனால் ‘ஹவுஸ் ஒய்ஃப்’ என்று சிலர் சாதாரணமாகச் சொல்லிவிடுவார்கள்.

‘உங்கள் மனைவி வேலைக்குப் போகிறார்களா?’ என்று கேட்டால், “இல்லை” என்று மட்டும் சொல்லாமல் “வீட்டில் சும்மாதான் இருக்கிறார்கள்” என்று சிலர் சொல்வார்கள். வீட்டில் சும்மாவா நீங்கள் இருக்கிறீர்கள்? வீட்டில் பெண்களால் சும்மா இருக்க முடியுமா? வீட்டில் பார்க்கின்ற வேலைகளை யாரும் கணக்கில் எடுத்துக்கொள்வதில்லை. ஆனால் மகளிருக்கான உரிமையைக் கொடுக்கவேண்டும், அவர்கள் உழைப்பை அங்கீகரிக்க வேண்டும் என்று உருவாக்கிய திட்டம்தான் இந்தக் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்.

தாயின் கருணை! மனைவியின் உறுதுணை! மகளின் பேரன்பு! இவையெல்லாம் ஒருவருக்குக்

கிடைத்துவிட்டால், அதைவிட வேறு செல்வம் தேவையில்லை! உண்மையில், உலகை வழி நடத்துவது தாய்மையும், பெண்மையும்தான்!என்னுடையதாய் தயாளு அம்மையார், கருணையே வடிவானவர்கள். சிறிய வயதில் நான் ஏதாவது நிகழ்ச்சி நடத்தினால் அன்னைக்கு மழை வரக் கூடாது என்று வேண்டிக்கொள்வார்.

என்னுடைய அரசியல் வாழ்க்கையில் சிறு சிறு சம்பவங்களைகூட துவக்க காலத்தில் என் அம்மாவிடம் சொல்லித்தான், தலைவர் கலைஞரிடம் சொல்லச் சொல்வேன். இன்றைக்கு அவர்கள் வயது முதிர்ந்த நிலையில், கோபாலபுரம் இல்லத்தில் ஓய்வெடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். நான் சென்று பார்க்கின்றபோது என் அம்மா முகத்தில் ஏற்படுகின்ற மகிழ்ச்சிக்கு இணையானது வேறு எதுவும் கிடையாது.

அதேபோலதான் என்னுடைய மனைவி துர்காவும். என்னுடைய பாதி என்று சொல்கின்ற அளவுக்கு என்கூட இருக்கிறார்கள். திருமணமாகி ஐந்தாவது மாதத்தில் மிசாவில் நான் கைது செய்யப்பட்டு, ஓராண்டுக் காலம் சிறையில் அடைக்கப்பட்டேன். என் மனைவி அரசியல் குடும்பத்திலிருந்து வந்தவர்கள் இல்லை. முதலில் அவருக்கு இது அதிர்ச்சியாக இருந்தது. அப்புறம் பொதுவாழ்க்கையில் இதெல்லாம் சகஜம், இயல்பு என்று புரிந்து தன்னைப் பக்குவப்படுத்திக் கொண்டார்கள். என் வாழ்க்கையில் எத்தனையோ மேடு – பள்ளங்கள்! எல்லாவற்றிலும் எனக்கு உற்ற துணையாக, உறுதுணையாக இருந்து என்னுடைய மிகப்பெரிய சக்தியாக இருக்கிறது என்னுடைய மனைவி துர்கா அவர்கள்தான்.

மகளிர் நலம் காத்த மாண்பாளர்

அடுத்து, என்னோட மகள் செந்தாமரை. அவர்களை அன்பின் வடிவம் என்றுதான் சொல்லமுடியும். நான் எந்தப் பொறுப்பில் இருந்தாலும், தான் உண்டு, தன்னுடைய வேலைகள் உண்டு என்று அவர் இருப்பார். ஒரு அரசியல்வாதியினுடைய மகள் என்ற சாயல் தன் மேல் விழுந்துவிடக் கூடாது என்று உன்னிப்பாக அதில் உஷாராக இருப்பார். சுயமாக வளர வேண்டும் என்று நினைப்பார். அந்த வகையில் நான் ரொம்ப கொடுத்து வைத்தவன்.

கருணைமிகு தாய் – தூணாக விளங்கும் மனைவி - தன்னம்பிக்கை கொண்ட என்னுடைய மகள் – இந்த மூன்றும் எனக்குக் கிடைத்திருக்கிறது. இதே மாதிரியான பேருள்ளம் கொண்டவர்கள்தான் நீங்கள் எல்லோரும்! மகளிர் அனைவரும்! இத்தகைய மகளிரின் நலம் காத்த மாண்பாளர் என்றால் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள்தான்.

★ பெண்களுக்குச் சொத்தில் சம உரிமை தந்தார்.

★ தலைவர் கலைஞர் அளித்த பணியிடங்களில் பெண்களுக்கு 30 விழுக்காடு இடஒதுக்கீட்டை, இப்போது 40 விழுக்காடு ஆக்கியிருக்கிறோம்.

★ உள்ளாட்சித் தேர்தலில் பெண்களுக்கு 33 விழுக்காடு இடஒதுக்கீடு தந்தவர் கலைஞர்.

இன்றைக்கு அது 50 விழுக்காடாக உயர்த்தப்பட்டு, அதற்கும் மேலாகப் பெண்கள் இப்போது மாநகராட்சி, நகராட்சி, ஊராட்சி, ஒன்றிய தேர்தல்களில் வெற்றி பெற்று, மக்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

★ ஏழைப் பெண்களுக்கு இலவச எரிவாயு இணைப்புடன் கூடிய எரிவாயு அடுப்புகள் வழங்கினார்.

★ ஒடுக்கப்பட்ட சமூகப் பெண்களுக்கு முதலில் பள்ளிக்கல்வி வரை இலவசக் கல்வியும், அதன் பிறகு கல்லூரி கல்வி வரை இலவசக் கல்வியும் வழங்கினார்.

★ ஒன்று முதல் 5ஆம் வகுப்பு வரையிலான அரசுப் பள்ளி ஆசிரியர்களாக, மகளிரை நியமித்தார்.

★ டாக்டர் முத்துலட்சுமி நினைவு மகப்பேறு உதவித்திட்டம்.

★ மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் பெயரில் நினைவு திருமண உதவித்திட்டம்.

★ டாக்டர் தருமாம்பாள் நினைவு கைம்பெண் மறுமணத் திட்டம்.

- ★ அஞ்சுகம் அம்மையார் நினைவு கலப்புத் திருமண உதவித்திட்டம்.
- ★ ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு ஏழைக் கைம்பெண்களின் மகள்களுக்கான திருமண உதவித்திட்டம்.

இப்படி எண்ணற்றத் திட்டங்களைக் கொண்டு வந்து மகளிர் முன்னேற்றத்திற்கு வழிவகை செய்தவர்தான் நம்முடைய தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். அவருடைய பெயரில் 'மகளிர் உரிமைத் திட்டம்' செயல்படுவது என்பது மிக, மிக, மிகப் பொருத்தமானது. அதுவும் அவருடைய நூற்றாண்டில் இது தொடங்கப்பட்டிருக்கிறது.

இந்தியாவே உன்னிப்பாகக் கவனிக்கும் திட்டங்கள்

தந்தை பெரியார் - பேரறிஞர் அண்ணா- தமிழினத் தலைவர் கலைஞர் ஆகிய மூவரும் வகுத்துத் தந்த பாதையில் செயல்படுகின்ற அரசுதான் நம்முடைய திராவிட மாடல் அரசு. மகளிருக்காக ஏராளமான திட்டங்களைச் செயல்படுத்திக் கொண்டு வருகிறது.

விடியல் பயணம், புதுமைப்பெண் திட்டம், நகைக்கடன் தள்ளுபடி, மகளிர் சுயஉதவிக் குழுக்கள் சுழல்நிதி – கடனுதவிகள் என்று மகளிருக்காக ஏராளமான திட்டங்களை நம்முடைய திராவிட மாடல் அரசு செயல்படுத்தி வருகிறது.

இது எல்லாவற்றிக்கும் மகுடம் சூட்டக்கூடிய வகையில்தான் இந்தத் திட்டம், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம். 1 கோடியே 6 இலட்சத்து 50 ஆயிரம் மகளிருக்கு இனி மாதந்தோறும் ரூ.1,000 வழங்கப்பட இருக்கிறது. இது உங்களுக்கான உதவித் தொகை இல்லை, உங்களுடைய உரிமைத் தொகை! மீண்டும், மீண்டும் சொல்லுகிறேன். இது உதவித் தொகை இல்லை, உங்களுடைய உரிமைத் தொகை!

உங்களில் ஒருவனான இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் சமூகத்தில் உங்கள் உழைப்பிற்கான அங்கீகாரமாக வழங்குகின்ற தொகை. தமிழ்நாட்டில் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய முதியோர் ஓய்வூதியம், அமைப்புச் சாராத் தொழிலாளர்கள் ஓய்வூதியம், கைம்பெண், ஆதரவற்ற பெண்களுக்கான ஓய்வூதியத் திட்டங்களில் ஏற்கெனவே பயன்பெற்று வரும் 39 இலட்சத்து 14 ஆயிரத்து 81 பயனாளிகளுக்கு, 12 ஆண்டுகளுக்குப் பிறகு, அவர்கள் பெற்று வந்த மாத ஓய்வூதியத்தை ஆயிரம் ரூபாயிலிருந்து ஆயிரத்து இருநூறு ரூபாயாக உயர்த்தி வழங்க உத்தரவிட்டிருக்கிறேன். இதற்காக, கூடுதலாக ரூ.940 கோடி நிதியை நமது அரசு ஒதுக்கியிருக்கிறது. மொத்தத்தில் பார்த்தால், இன்று மகளிர் உரிமைத் தொகையைப் பெறும் ஒரு கோடியே 6 இலட்சத்து 50 ஆயிரம் பேர் மட்டும் அல்லாமல், உயர்த்தி வழங்கப்படும் ஓய்வூதியம் பெறும் 39 இலட்சம் பேரையும் கணக்கில் எடுத்துக்கொண்டால், மொத்தத்தில் ஒரு கோடியே 45 இலட்சம் குடும்பங்கள் தமிழ்நாடு அரசினுடைய மாத ஓய்வூதியத் திட்டங்களால் பயன் பெற்று வருகிறார்கள்.

நாம் கொண்டு வந்த திட்டங்களை இன்றைக்கு இந்தியாவே உன்னிப்பாகக் கவனிக்கிறது. மற்ற மாநிலங்கள் பின்பற்றத் துடிக்குது. இந்தியா கூட்டணிக் கூட்டங்களுக்கு நான் மற்ற மாநிலங்களுக்குப் போகும்போது அங்கே வரக்கூடிய அரசியல் தலைவர்களும், பிற மாநிலத்தினுடைய முதலமைச்சர்களும் சந்திக்கின்றபோது நம்முடைய அரசு கொண்டு வருகின்ற திட்டங்களைப் பற்றி ஆர்வமாகக் கேட்கிறார்கள். விசாரிக்கிறார்கள். தங்களுடைய மாநிலத்தில் செயல்படுத்துவதற்கு நினைக்கிறார்கள்.

கடந்த வாரம் ஜி-20 நாடுகளின் மாநாடு டெல்லியில் நடைபெற்றது. அதை முன்னிட்டு இந்திய நாட்டின் குடியரசுத் தலைவர் அவர்கள் ஒரு சிறப்பு விருந்து கொடுத்தார்கள். அதில் நானும் கலந்து கொண்டேன். அப்போது, சில ஒன்றிய அமைச்சர்கள் கூட நமது சிறப்புத் திட்டங்கள் பற்றி விசாரித்தார்கள். இவை எல்லாம் ஏதோ எனக்குத் தனிப்பட்ட கிடைத்திருக்கக்கூடிய பாராட்டுக்களாக நான் கருதவில்லை. தமிழ்நாடு அரசுக்கும், நம்முடைய மக்களுக்கும் கிடைத்திருக்கக்கூடிய பாராட்டுகளாகத்தான் நான் கருதுகிறேன்!

பசிப்பிணியும் போக்கி வருகிறோம் அறிவுப்பசியையும் தணித்து வருகிறோம். இன்னார் படிக்க வேண்டும், இன்னார் படிக்கக் கூடாது என்கின்ற நிலையை மாற்றி, இன்னார் உயரவேண்டும், இன்னார் உயரக் கூடாது என்கின்ற நிலையை மாற்றி, எல்லாருக்கும் எல்லாம் கிடைக்க வழிவகை செய்கின்ற திராவிட மாடல் ஆட்சி, கோடிக்கும் மேற்பட்ட பெண்களுக்குக் கலைஞர் பெயரில் உரிமைத் தொகை மூலமாக வழங்கிக் கொண்டு வருகிறோம். பெண்களுக்குச் சமூக – பொருளாதார – அரசியல் வலிமையை வழங்குவது.

என் அருமைச் சகோதரிகளே! உங்கள் சகோதரன் நிறைவாகச் சொல்ல விரும்புகிறேன்.

உங்கள் கனவுகளை நிறைவேற்றும் ஆட்சி இது. உங்கள் கவலைகளைப் போக்கும் ஆட்சி இது. தொல்லை, இனி இல்லை. வானமே உங்களது எல்லை!

வடகிழக்குப் பருவமழை குறைவால்

பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ரூ.181.40 கோடி வறட்சி நிவாரணம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் வழங்கினார் – 04.09.2023

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 04.09.2023 அன்று, தலைமைச் செயலகத்தில், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை சார்பில், ரூ.62.42 கோடிச் செலவில் கட்டடப்பட்டுள்ள கட்டடங்களைத் திறந்து வைத்து, சிறிய வகை வேளாண் இயந்திரங்களின் பயன்பாட்டினை ஊக்குவிக்கும் வகையில் விவசாயிகளுக்கு ரூ.35 கோடி மதிப்பிலான 3,907 பவர்டில்லர்கள், 293 விசை களையெடுப்பான் கருவிகள் வழங்கிடும் விதமாக மூன்று விவசாயிகளுக்கு பவர்டில்லர்கள், விசை களையெடுப்பான் கருவிகளுக்கான ஆணைகளை வழங்கினார். மேலும், வடகிழக்குப் பருவமழை குறைவாகப் பெய்ததால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ரூ.181.40 கோடி மிதமான வேளாண் வறட்சி நிவாரணம் வழங்கும் பணியினைத் தொடங்கி வைக்கும் விதமாக மூன்று விவசாயிகளுக்கு நிவாரண நிதி வழங்குவதற்கான செயல்முறை ஆணைகளை வழங்கினார்.

வேளாண்மைத் துறைக்கு அதிக முக்கியத்துவம் அளித்திடும் வகையில் தமிழ்நாட்டின் வரலாற்றில் முதல்முறையாக, விவசாயப் பெருமக்களை அழைத்து, அவர்களது கருத்துகளைக் கேட்டறிந்து வேளாண்மைத் துறைக்கெனத் தனி நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்து, உழவர்களின் நலனைப் பேணும் வகையில் வேளாண்மைத் துறை என்ற பெயரினை வேளாண்மை – உழவர் நலத்துறை எனப் பெயர் மாற்றமும் செய்து, வேளாண் பெருமக்களின் வருவாயினைப் பன்மடங்காக

உயர்த்திட கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம், முதலமைச்சரின் மானாவாரி நில மேம்பாட்டு இயக்கம், நெல் ஜெயராமன் பாரம்பரிய நெல் ரகங்கள் பாதுகாப்பு இயக்கம், விவசாயிகளுக்கு 1,50,000 கூடுதல் இலவச விவசாய மின் இணைப்புகள் வழங்கியது, விவசாயிகள் தங்கள் விளை நிலங்களின் மண்வளத்தினை அறிந்திட தமிழ் மண் வளம் இணையதளம், வேளாண்மை இயந்திரமயமாக்குதல் திட்டம், உழவர் பெருமக்களுக்கு வேளாண் உபகரண தொகுப்புகள் வழங்கும் திட்டம், பயிர் பாதுகாப்புத் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களைத் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

வேளாண்–உழவர் நலத்துறை சார்பில் கட்டப்பட்டுள்ள கட்டடங்களைத் திறந்து வைத்தல்

சென்னை – கிண்டி, வேளாண் தொழில்நுட்பப் பசுமைப் பூங்காவில் தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியத்திற்கான ரூ.32.64 கோடிச் செலவில் கட்டப்பட்டுள்ள நிருவாகக் கட்டடம், திருப்பூர் மாவட்டம் – தாராபுரத்தில் ரூ.4 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள ஒழுங்குமுறை விற்பனைக்கூடம், திருவண்ணாமலை மாவட்டம் – தெள்ளானந்தலில் ரூ.3.20 கோடிச் செலவில் கட்டப்பட்டுள்ள சமையல் எண்ணெய்களுக்கான இயந்திரங்களுடன் கூடிய நவீன சிப்பம் கட்டும் அமைப்பு, சந்தை ஊக்குவிப்பு மையம், விழுப்புரம் மாவட்டம் – மேல்மலையனூர், வல்லம், செஞ்சி, கடலூர் மாவட்டம் – குமராட்சி, கீரப்பாளையம், காட்டுமன்னார்கோவில், கள்ளக்குறிச்சி மாவட்டம் – உளுந்தூர்பேட்டை, அரியலூர் மாவட்டம் – அரியலூர் ஆகிய இடங்களில் ரூ.22.58 கோடிச் செலவில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையங்கள், என மொத்தம் ரூ.62.42 கோடிச் செலவில் கட்டப்பட்டுள்ள வேளாண் – உழவர் நலத்துறை கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

விவசாயிகளுக்கு பவர்டில்லர்கள், விசை களையெடுப்பான் கருவிகள் வழங்கும் திட்டத்தைத் தொடங்கி வைத்தல்

2023-2024ஆம் ஆண்டிற்கான வேளாண்மை-உழவர் நலத்துறை நிதிநிலை அறிக்கையில் “தமிழ்நாட்டில் நாளுக்கு நாள் குறைந்து வரும் விவசாயிகளின் நில உடமையினைக் கருத்தில் கொண்டு, சிறிய வகை வேளாண் இயந்திரங்களின் பயன்பாட்டினை ஊக்குவிக்கும் அவசியம் கருதி தமிழ்நாடு அரசின் தொலைநோக்குத் திட்டமான கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்ட கிராமங்களில், ஒரு கிராமத்திற்கு இரண்டு பவர்டில்லர் இயந்திரங்கள் என்ற அடிப்படையில் வரும் நிதியாண்டில், 2,504 கிராமங்களுக்கு ரூ.43 கோடி மானியத்தில் பவர்டில்லர்கள் வழங்கப்படும்” என்று அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பிற்கிணங்க, குறைந்த அளவு பரப்பில் வேளாண்மையில் ஈடுபடும் விவசாயிகள் சிறிய வகை வேளாண் இயந்திரங்களைக்

கொண்டு உழவுப்பணிகள் மற்றும் இதர வேளாண் பணிகளை மேற்கொள்ள ஏதுவாக, முதற்கட்டமாக ரூ.35 கோடி மானியத்தில் 3,907 விவசாயிகளுக்கு பவர்டில்லர்கள், 293 விவசாயிகளுக்கு விசை களையெடுப்பான் கருவிகள், என மொத்தம் 4,200 விவசாயிகளுக்கு இக்கருவிகள் வழங்கப்படுகின்றன.

இதனைத் தொடங்கி வைக்கும் விதமாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இரண்டு விவசாயிகளுக்கு பவர்டில்லர்கள், ஒரு விவசாயிக்கு விசை களையெடுப்பான் கருவி வழங்குவதற்கான ஆணைகளை வழங்கினார்.

2022ஆம் ஆண்டு வடகிழக்குப் பருவமழை குறைவாகப் பெய்ததால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு மிதமான வேளாண் வறட்சி நிவாரண நிதி வழங்குவதற்கான ஆணைகள் வழங்குதல்

கடந்த 2022ஆம் ஆண்டு வடகிழக்குப் பருவமழை காலத்தில் குறைவாக மழை பெய்த காரணத்தினால் புதுக்கோட்டை, சிவகங்கை, இராமநாதபுரம், தென்காசி, விருதுநகர், தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் மிதமான வறட்சி ஏற்பட்டது. இதன் காரணமாக 3,52,797 ஏக்கர் பரப்பில் பயிரிடப்பட்ட வேளாண் பயிர்கள் 33 சதவீதத்திற்கு மேல் பாதிக்கப்பட்டது.

பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் வருவாய், வேளாண் துறை அதிகாரிகள் கணக்கீடு செய்து 33 சதவிகிதம் மற்றும் அதற்குமேல் பாதிக்கப்பட்ட பரப்பினை உறுதி செய்தனர். அதனடிப்படையில், மாவட்ட ஆட்சியர்களிடமிருந்து பெறப்பட்ட கருத்துரையைப் பரிசீலித்துப் பாதிக்கப்பட்ட 1,87,275 விவசாயிகளுக்கு ரூ.181.40 கோடி நிவாரணம் வழங்க அரசாணை வெளியிடப்பட்டது.

இந்த அரசாணையின்படி, இராமநாதபுரம் மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட 1,34,305 விவசாயிகளுக்கு ரூ.132.71 கோடியும், சிவகங்கை மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட 25,847 விவசாயிகளுக்கு ரூ.25.77 கோடியும், தென்காசி மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட 17,096 விவசாயிகளுக்கு ரூ.13.85 கோடியும், புதுக்கோட்டை மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட 6,746 விவசாயிகளுக்கு ரூ.6.63 கோடியும், விருதுநகர் மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட 3,220 விவசாயிகளுக்கு ரூ.2.40 கோடியும், தூத்துக்குடி மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட 61 விவசாயிகளுக்கு ரூ.4.43 இலட்சமும், என மொத்தம் ரூ.181.40 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மாவட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியினை விவசாயிகளின் வங்கிக்கணக்கில் வரவு வைத்திட புதுக்கோட்டை, சிவகங்கை, இராமநாதபுரம், தென்காசி, விருதுநகர், தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களின் மாவட்ட ஆட்சியர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

வடகிழக்குப் பருவமழை குறைவாகப் பெய்ததால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு மிதமான வேளாண் வறட்சி நிவாரணம் வழங்கும் பணியினைத் தொடங்கி வைக்கும் விதமாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மூன்று விவசாயிகளுக்கு நிவாரண நிதி வழங்குவதற்கான ஆணைகளை வழங்கினார்.

கேலோ இந்தியா மற்றும் தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் வென்ற வீரர்களுக்கு ரூ.2.24 கோடிக்கான உயரிய ஊக்கத் தொகை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார் - 04.09.2023

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 04.09.2023 அன்று, தலைமைச் செயலகத்தில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் கேலோ இந்தியா, தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் வென்ற 134 வீரர் – வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத்தொகையாக ரூ.2.24 கோடி வழங்கிடும் அடையாளமாக 10 விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத்தொகைக்கான காசோலைகளை வழங்கினார்.

விளையாட்டுத் துறையில் இந்தியாவிலேயே சிறந்த மாநிலமாகத் தமிழ்நாட்டை உருவாக்கிடவும், அகில இந்திய அளவிலும் பன்னாட்டு அளவிலும் நடைபெறும் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் பங்கு கொண்டு வெற்றி பெறும் வகையில் அவர்களுக்கு உரிய பயிற்சி அளித்தல், உயரிய ஊக்கத்தொகை வழங்குதல், விளையாட்டிற்கான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் எனப் பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளைத் தமிழ்நாடு அரசு எடுத்து வருகிறது.

கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டி 2022 மத்தியப் பிரதேச மாநிலத்தில் 30.01.2023 முதல் 11.02.2023 வரை நடைபெற்றது. இப்போட்டியில் இந்தியாவின் அனைத்து மாநிலங்களும், யூனியன் பிரதேசங்களும் கலந்து கொண்டன.

கேலோ இந்தியா போட்டியில் ஆண்கள் தடகளப் போட்டியில் 3 தங்கம், 5 வெள்ளி, 3 வெண்கலப் பதக்கங்கள் வென்ற 7 வீரர்களுக்கு உயரிய ஊக்கத் தொகையாக ரூ.13.50 இலட்சமும்;

ஆண்கள் கூடைப்பந்து போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்ற 12 வீரர்களுக்கு உயரிய ஊக்கத் தொகையாக ரூ.9 இலட்சமும்;

ஆண்கள் வாள்வீச்சுப் போட்டியில் வெள்ளி, வெண்கலப் பதக்கம் வென்ற 8 வீரர்களுக்கு உயரிய ஊக்கத் தொகையாக ரூ.5 இலட்சமும்;

ஆண்கள் ஜூடோ போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்ற வீரருக்கு உயரிய ஊக்கத் தொகையாக ரூ.1 இலட்சமும்;

ஆண்கள் படகுப்போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்ற 2 வீரர்களுக்கு உயரிய ஊக்கத் தொகையாக ரூ.1.50 இலட்சமும்;

ஆண்கள் நீச்சல் போட்டியில் 1 தங்கம், 6 வெள்ளி, 7 வெண்கலப் பதக்கங்களும் வென்ற 4 வீரர்களுக்கு உயரிய ஊக்கத் தொகையாக ரூ.13 இலட்சமும்;

ஆண்கள் டென்னிஸ் போட்டியில் 2 தங்கம், 2 வெள்ளி, 1 வெண்கலப் பதக்கங்கள் வென்ற 4 வீரர்களுக்கு உயரிய ஊக்கத் தொகையாக ரூ.6.25 இலட்சமும்;

ஆண்கள் பளுதூக்கும் போட்டியில் 2 தங்கம், 1 வெள்ளிப் பதக்கங்கள் வென்ற 3 வீரர்களுக்கு உயரிய ஊக்கத் தொகையாக ரூ.5.50 இலட்சமும்;

ஆண்கள் யோகாசனப் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்ற வீரருக்கு உயரிய ஊக்கத் தொகையாக ரூ.1.50 இலட்சமும்;

பெண்கள் தடகளப் போட்டியில் 1 தங்கம், 5 வெண்கலப் பதக்கங்கள் வென்ற 6 வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத் தொகையாக ரூ.5 இலட்சமும்;

பெண்கள் இரட்டையர் இறகுப்பந்து போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்ற 2 வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத் தொகையாக ரூ.2.25 இலட்சமும்;

பெண்கள் குத்துச்சண்டைப் போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்ற வீராங்கனைக்கு உயரிய ஊக்கத் தொகையாக ரூ.1 இலட்சமும்;

பெண்கள் சைக்கிளிங் போட்டியில் 3 வெள்ளி, 1 வெண்கலப் பதக்கங்கள் வென்ற 3 வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத் தொகையாக ரூ.4 இலட்சமும்;

பெண்கள் வாள்வீச்சுப் போட்டியில் 4 வெள்ளி, 1 வெண்கலப் பதக்கங்கள் வென்ற 4 வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத் தொகையாக ரூ.4 இலட்சமும்;

பெண்கள் மல்லர் கம்பம் போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்ற வீராங்கனைக்கு உயரிய ஊக்கத் தொகையாக ரூ.1 இலட்சமும்;

பெண்கள் படகுப் போட்டியில் வெள்ளிப் பதக்கங்கள் வென்ற 6 வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத் தொகையாக ரூ.5.25 இலட்சமும்;

பெண்கள் துப்பாக்கிச் சுடுதல் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற வீராங்கனைக்கு உயரிய ஊக்கத் தொகையாக ரூ.2 இலட்சமும்;

பெண்கள் நீச்சல் போட்டியில் 2 தங்கம், 5 வெண்கலப் பதக்கங்கள் வென்ற 4 வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத் தொகையாக ரூ.7 இலட்சமும்;

பெண்கள் வாலிபால் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்ற 14 வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத் தொகையாக ரூ.10.50 இலட்சமும்;

பெண்கள் பளுதூக்கும் போட்டியில் 3 வெள்ளி, 1 வெண்கலப் பதக்கங்கள் வென்ற 4 வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத் தொகையாக ரூ.5.50 இலட்சமும்;

பெண்கள் யோகாசனப் போட்டியில் 1 தங்கம், 2 வெண்கலப் பதக்கங்கள் வென்ற 3 வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத் தொகையாக ரூ.3.50 இலட்சமும்;

64ஆவது தேசிய துப்பாக்கிச்சுடும் சாம்பியன்ஷிப் போட்டி 2021இல் 4 தங்கம், 23 வெள்ளி, 17 வெண்கலப் பதக்கங்கள் வென்ற 17 வீரர்கள், வீராங்கனைளுக்கு உயரிய ஊக்கத் தொகையாக ரூ.68.25 இலட்சமும்;

12ஆவது தேசிய வில்வித்தை சாம்பியன்ஷிப் போட்டி 2022இல் 4 தங்கம், 8 வெள்ளி, 7 வெண்கலப் பதக்கங்கள் வென்ற 15 வீரர்கள், வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத் தொகையாக ரூ.23.50 இலட்சமும்;

தேசிய குத்துச்சண்டை சாம்பியன்ஷிப் போட்டி 2021இல் 3 வெண்கலப் பதக்கங்கள் வென்ற 3 வீரர்களுக்கு உயரிய ஊக்கத் தொகையாக ரூ.4.50 இலட்சமும்;

தேசிய குத்துச்சண்டை சாம்பியன்ஷிப் போட்டி 2021–2022இல் 1 தங்கம், 1 வெள்ளி, 4 வெண்கலப் பதக்கங்கள் வென்ற 6 வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத் தொகையாக ரூ.13 இலட்சமும்;

2023ஆம் ஆண்டிற்கான சதுரங்க கிராண்ட் மாஸ்டர் பட்டம் வென்ற திரு.எம்.பிரனேஷ் அவர்களுக்கு உயரிய ஊக்கத் தொகையாக ரூ.5 இலட்சமும், 2019ஆம் ஆண்டிற்கான பெண்கள் சர்வதேச சதுரங்க மாஸ்டர் பட்டம் வென்ற ரக்ஷித்தா ரவி அவர்களுக்கு உயரிய ஊக்கத் தொகையாக ரூ.3 இலட்சமும்;

என மொத்தம், 134 விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத் தொகையாக மொத்தம் ரூ.2.24 கோடி வழங்கிடும் அடையாளமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 10 விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத் தொகைக்கான காசோலைகளை வழங்கினார்.

பஞ்சாப் மாநிலம், பாட்டியாலாவில் நடைபெற்ற Clay Pigeon Trap தேசிய ஜுனியர் துப்பாக்கி சுடும் சாம்பியன்ஷிப் போட்டி – 2021இல் வெண்கலப் பதக்கம் வென்றதற்காகச் செல்வி நிலா ராஜா பாலு அவர்கள் தனக்கு வழங்கப்பட்ட உயரிய ஊக்கத்தொகையான ரூ.1.12 இலட்சத்திற்கான காசோலையை, மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களால் அறிவிக்கப்பட்ட சென்னையில் துப்பாக்கிச் சுடும் தளம் அமைக்கும் பணிக்காக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் வழங்கினார். மேலும், செல்வி நிலா ராஜா பாலு அவர்கள் தில்லியில் நடைபெற்ற 65ஆவது தேசிய துப்பாக்கிச்சுடும் சாம்பியன்ஷிப் போட்டி 2022இல் ஜூனியர் பிரிவில் தங்கப் பதக்கம் வென்று சாதனை படைத்தவர் ஆவார்.

தமிழக விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் ஒலிம்பிக், சர்வதேச அளவிலான போட்டியில் கலந்து கொண்டு பதக்கங்கள் வென்றிட தமிழ்நாடு அரசின் ஒலிம்பிக் தங்க வேட்டை திட்டத்தின்கீழ் முதல்முறையாக சர்வதேச அளவில் புகழ்பெற்ற வெளிநாட்டு விளையாட்டுப் பயிற்சியாளர்கள் நியமிக்கப்பட்டு தமிழக விளையாட்டு வீரர்களுக்கு பயிற்சி அளிக்கவுள்ளனர். அதன்படி தமிழ்நாடு அரசால் நியமிக்கப்பட்டுள்ள வெளிநாட்டுப் பயிற்சியாளர்கள் – ரோமோனிய நாட்டைச் சேர்ந்த தடகளப் பயிற்சியாளர் திரு. பெட்ராஸ் பெட்ரோசியன் (Bedros Bedrosian), டச்சு நாட்டைச் சேர்ந்த ஹாக்கி பயிற்சியாளர் திரு. எரிக் வோனிக் (Eric Wonink), அமெரிக்க நாட்டைச் சேர்ந்த டென்னிஸ் பயிற்சியாளர் திரு. சஞ்சய் சுந்தரம் ஆகியோர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்கள்.

சென்னை, காந்தி மண்டப வளாகத்தில் டாக்டர் ப.சுப்பராயன் அவர்களுக்குத் திருவுருவச் சிலை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் திறந்து வைத்தார்–05.09.2023

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 05.09.2023 அன்று, செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் 'கப்பலோட்டிய தமிழன்' வ.உ.சிதம்பரனார் அவர்களின் 152ஆவது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை, கிண்டி, காந்தி மண்டப வளாகத்தில் உள்ள வ.உ.சி அவர்களின் திருவுருவச் சிலைக்கு அருகில் வைக்கப்பட்டிருந்த அவரது திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். மேலும், சென்னை காந்தி மண்டப வளாகத்தில், சென்னை மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் டாக்டர் ப.சுப்பராயன் அவர்களுக்குப் புதியதாக அமைக்கப்பட்டுள்ள திருவுருவச் சிலையையும் திறந்து வைத்தார்.

தமிழகத்தின் புகழ்சால் பெருந்தகையாளர்கள், தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டுத் தமிழ்நாட்டிற்குப் பெருமைத் தேடித்தந்த அறிஞர் பெருமக்கள், சமூகநீதி, விடுதலை உணர்வுகளை ஊட்டிவளர்த்த கவிஞர்கள், இசை மேதைகள், தமிழ்நாட்டின் தியாக வரலாற்றுக்கு உன்னத சாட்சியங்களாக விளங்கும் தியாகிகள், மேதைகள், அறிஞர்களின் நினைவுகளைப் போற்றிப் பெருமைப்படுத்தும் வகையிலும், தமிழ்ச் சமுதாயத்திற்கு அவர்களின் பங்களிப்பைப் பெருமைப்படுத்தும் வகையிலும், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் நினைவகங்கள், திருவுருவச் சிலைகள், அரங்கங்கள், நினைவுத் தூண்கள், நினைவுச் சின்னம் ஆகியவை அமைக்கப்பட்டு, சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டு, பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

தாய்நாட்டின் விடுதலைக்காகத் தமிழகத்திலிருந்து பங்கேற்ற தலைவர்களில் முதன்மையானவர் வ.உ.சிதம்பரனார் அவர்கள். வ.உ.சி. அவர்களின் சுதந்திரப் போராட்ட நடவடிக்கைகளால் ஆத்திரமடைந்த ஆங்கிலேய அரசால் அவருக்கு இரட்டை ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு, கோவை சிறையில் அடைத்துச் செக்கிழுக்க வைக்கப்பட்டார். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் செக்கிழுத்த செம்மல் வ.உ.சிதம்பரனார் அவர்களின் புகழுக்குப் பெருமை சேர்க்கின்ற வகையில், அன்னாரின் 150ஆவது பிறந்த நாளில் முத்தான 14 அறிவிப்புகளை வெளியிட்டு, அவை சிறப்பான முறையில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. நம் தாய்நாட்டின் விடுதலைக்காகப் பாடுபட்ட வ.உ.சிதம்பரனார் அவர்களின் பிறந்த நாள் ஆண்டுதோறும் தமிழ்நாடு அரசின் சார்பில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

அந்த வகையில், கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனாரின் 152ஆவது பிறந்த நாளை முன்னிட்டுச் சென்னை, கிண்டி, காந்தி மண்டப வளாகத்தில் உள்ள அன்னாரின் திருவுருவச் சிலைக்கு அருகில் வைக்கப்பட்டுள்ள அவரது திருவுருவப் படத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

2021-2022ஆம் ஆண்டிற்கான செய்தி மக்கள் தொடர்புத் துறையின் மானியக் கோரிக்கையில், தமிழுக்கும் தமிழக மக்களுக்கும் அயராது உழைத்தவரும், சமூகநீதிக் கோட்பாடுகளுக்குச் சட்டவடிவம் கொடுத்தவருமான, சென்னை மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் டாக்டர் ப. சுப்பராயன் அவர்களதுச் சேவைகளை நினைவு கூரும் வகையில், அன்னாருக்கு சென்னையில் முழு உருவச்சிலை அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பிற்கிணங்க, சென்னை, கிண்டி, காந்தி மண்டப வளாகத்தில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள சென்னை, மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் டாக்டர் ப.சுப்பராயன் அவர்களின் திருவுருவச் சிலையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்து, அதன் அருகில் வைக்கப்பட்டிருந்த அவரது திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் வழங்கினார்–05.09.2023

முனைவர் க. இராமசாமி அவர்களுக்குக் கலைஞர் செம்மொழித் தமிழ் விருது

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 05.09.2023 அன்று தலைமைச் செயலகத்தில், 2023ஆம் ஆண்டிற்கான செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தால் வழங்கப்படும் கலைஞர் மு. கருணாநிதி செம்மொழித் தமிழ் விருதிற்குத் தேர்வு செய்யப்பட்ட இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனத்தின் முன்னாள் துணை இயக்குநர் முனைவர் க.இராமசாமி அவர்களுக்குக் கலைஞர் மு.கருணாநிதி செம்மொழித் தமிழ் விருதுடன் ரூ.10 இலட்சம் பரிசுத் தொகையும், பாராட்டுச் சான்றிதழும், வெண்கலத்தாலான கலைஞர் மு.கருணாநிதி அவர்களின் திருவுருவச்சிலையும் வழங்கிக் கௌரவித்தார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பெருமுயற்சியால் இந்தியாவில் முதன்முறையாகத் தமிழ் மொழியானது 2004ஆம் ஆண்டு செம்மொழியாக அறிவிக்கப்பட்டது. செம்மொழித் தமிழுக்கெனத் தனித்தன்மையுடன் ஒரு நிறுவனம் தொடங்கப்பட வேண்டும் என்ற முத்தமிழறிஞர் அவர்களின் கனவினை நிறைவேற்ற, நடுவண் அரசினைத் தொடர்ந்து வலியுறுத்தியதின் அடிப்படையில், 2006இல் இந்திய மொழிகளுக்கான நடுவண் நிறுவனத்தின் ஓர் அங்கமாக இந்நிறுவனம் அமைக்கப்பட்டது. பின்னர் 2008ஆம் ஆண்டில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் எனத் தன்னாட்சி பெற்ற நிறுவனமாகச் சென்னையில் அமைக்கப்பட்டது. செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆவார்.

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் முக்கியத்துவம் கருதி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் 24.07.2008 அன்று, தம் சொந்த நிதி ஒரு கோடி ரூபாயை வைப்புத் தொகையாக அளித்து, 'கலைஞர் மு. கருணாநிதி செம்மொழித் தமிழாய்வு அறக்கட்டளை'யை நிறுவினார்.

இந்த அறக்கட்டளையின் மூலமாக ஆண்டுதோறும் 'கலைஞர் மு. கருணாநிதி செம்மொழித் தமிழ் விருது' வழங்கப்படுகிறது. இவ்விருது இந்தியாவிலேயே மிக உயரிய வகையில் ரூ.10 இலட்சம் பரிசுத் தொகையும், பாராட்டுச் சான்றிதழும், கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் திருவுருவச் சிலையும் அடங்கியதாகும்.

தொல்லியல், கல்வெட்டியல், நாணயவியல், இலக்கியம், மொழியியல், படைப்பிலக்கியம், இலக்கியத் திறனாய்வு, மொழிபெயர்ப்பு, நுண்கலைகள் ஆகிய துறைகளில் செம்மொழித் தமிழாய்வுக்குச் சிறந்த பங்களிப்பை வழங்கியுள்ள ஆய்வாளருக்கு இவ்விருது வழங்கப்படுகிறது.

அறக்கட்டளை தொடங்கப்பட்டபின் 2009ஆம் ஆண்டிற்கான முதல் விருது பின்லாந்து நாட்டு அறிஞர் பேராசிரியர் அஸ்கோ பர்ப்போலா அவர்களுக்கு 2010, ஜூன் 23 அன்று கோவையில் நடைபெற்ற உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டில் அன்றைய குடியரசுத் தலைவர் அவர்களால் வழங்கப்பட்டது.

அதன் பின்னர், 2010ஆம் ஆண்டு முதல் 2019ஆம் ஆண்டு வரையிலான பத்து ஆண்டுகளுக்குரிய கலைஞர் மு.கருணாநிதி செம்மொழித் தமிழ் விருதுகள் 22.01.2022 அன்று நடைபெற்ற விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களால் வழங்கப்பட்டன. மேலும், 2020, 2021, 2022ஆம் ஆண்டுகளுக்கான விருதுகளை 22.08.2023 அன்று செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் நடைபெற்ற விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டன.

அதன் தொடர்ச்சியாக, 2023ஆம் ஆண்டுக்கான கலைஞர் மு.கருணாநிதி செம்மொழித் தமிழ் விருதுக்குச் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் தலைவராக விளங்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அமைக்கப்பெற்ற விருதுத் தேர்வுக் குழுவினரால் முனைவர் க.இராமசாமி அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அரியலூர் மாவட்டத்தைச் சேர்ந்த, இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனத்தின் முன்னாள் துணை இயக்குநரும், செம்மொழித் தமிழாய்வு நிறுவனத்தின் முன்னாள் பொறுப்பு அலுவலருமான முனைவர் க.இராமசாமி அவர்களுக்குக் கலைஞர் மு.கருணாநிதி செம்மொழித் தமிழ் விருதினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கிக் கௌரவித்தார்.

அதனைத் தொடர்ந்து, செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் தொல்காப்பியமும் சங்க இலக்கியமும், பண்டைய தமிழ்ச் செவ்விலக்கியங்களும் நடுகற்களும், மணிமேகலை வழக்குச் சொல்லகராதி, சங்க இலக்கியத்தில் கடல் வணிகமும் பண்பாட்டுப் பரிமாற்றங்களும் ஆகிய நூல்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டார்.

படமும் / செய்தியும்

"முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் குறித்த ஓவியத்திற்குப் பாராட்டு"

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களை, 04.09.2023 அன்று தலைமைச் செயலகத்தில், தென் கொரியாவில் நடைபெற்ற சர்வதேச சிறார் கலைப்போட்டியில் வெற்றி பெற்ற செல்வி ஹான்னா அவர்கள் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். அப்போது, "முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்" குறித்துத் தான் வரைந்த ஓவியத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் வழங்கினார்.

நெடுஞ்சாலைத் துறை சார்பில் ரூ.434.65 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள
பாலங்கள் மற்றும் சாலைகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் திறந்து வைத்தார் - 07.09.2023

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 07.09.2023 அன்று, தலைமைச் செயலகத்தில், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை சார்பில், நாமக்கல் மாவட்டத்தில் ரூ.280.73 கோடிச் செலவில் கடின புருவங்களுடன் கூடிய இருவழித்தடமாக மேம்படுத்தப்பட்ட மோகனூர் - நாமக்கல் – சேந்தமங்கலம் – இராசிபுரம் சாலை, திருவொற்றியூரில் பக்கிங்காம் கால்வாயின் குறுக்கே ரூ.58.64 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள நான்கு வழித்தட உயர்மட்டப் பாலம், திருப்பூர் மாவட்டத்தில், ரூ.53.40 கோடி செலவில் நான்கு வழித்தடமாக அகலப்படுத்தி மேம்படுத்தப்பட்ட பல்லடம் – தாராபுரம் சாலை, கோயம்புத்தூர் நகரில், கோயம்புத்தூர் – மேட்டுப்பாளையம் சாலை, கணபதி மணியகாரம்பாளையம் சாலை சந்திப்பில் ரூ.41.88 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நான்கு வழித்தடச் சாலை மேம்பாலம் ஆகியவற்றைத் திறந்து வைத்தார்.

பொருளாதாரத்தின் அங்கங்களான விவசாயம், தொழில், வணிகம், சுற்றுலா போன்ற துறைகளின் மேம்பாட்டிற்குச் சாலை உட்கட்டமைப்பு முக்கிய பங்கு வகிக்கிறது. மாநிலத்தில் புதிய சாலைகள் மற்றும் பாலங்கள் அமைத்தல், சாலைகள், பாலங்களைப் பராமரித்தல், கிராமப்புறங்களுக்கு இணைப்புச் சாலைகள் அமைத்தல் போன்ற முக்கியப் பணிகளை நெடுஞ்சாலைத் துறை மேற்கொண்டு வருகிறது. இதன்மூலம், தமிழ்நாடு அரசு, நெடுஞ்சாலைத் துறை வாயிலாகத் தரமான, பாதுகாப்பான சாலைக் கட்டமைப்பினைச் சிறந்த முறையில் உருவாக்கி, பராமரித்து வருகிறது.

மோகனூர் – நாமக்கல் – சேந்தமங்கலம் – இராசிபுரம் சாலையைக் கடின புருவங்களுடன் கூடிய இருவழித்தடச் சாலையாகத் தரம் உயர்த்துதல்

சென்னை கன்னியாகுமரி தொழிற்தடத் திட்டத்தின் கீழ், ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதி உதவியுடன் ரூ.280.73 கோடிச் செலவில், நாமக்கல் மாவட்டம், மோகனூர் – நாமக்கல் – சேந்தமங்கலம் –

இராசிபுரம் சாலையில் (மா.நெ – 95) 31.50 கிலோ மீட்டர் நீளத்திற்கு கடின புருவங்களுடன் கூடிய இருவழித்தடமாக தரம் உயர்த்தப்பட்ட சாலையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இத்திட்டத்தில், 5 புறவழிச்சாலைகள், மழைநீர் வடிகால்கள், 53 குறு, 3 சிறு பாலங்கள், சாலைப் பாதுகாப்பினை உறுதிசெய்ய தெருவிளக்குகள், கண்காணிப்புக் கேமராக்கள், பொதுமக்களின் வசதிக்காக பேருந்து நிறுத்தங்களில் குடிநீர், கழிப்பறை வசதிகள் ஆகியன அமைக்கப்பட்டுள்ளன.

மேலும், இத்திட்டத்தில், முத்துகாப்பட்டி, சேந்தமங்கலம், காளப்பநாயக்கன்பட்டி, பேளுக்குறிச்சி, சிங்களாந்தபுரம் ஆகிய முக்கிய ஊர்களுக்கு புறவழிச்சாலை அமைக்கப்பட்டுள்ளதால் கனரக வாகனங்கள் போக்குவரத்து நெரிசல், பயண நேரம் ஆகியன குறையும். நாமக்கல்லின் முக்கியச் சுற்றுலா தளமான கொல்லிமலைக்குச் சென்னை, பெங்களூரு, கோயம்புத்தூர் ஆகிய நகரங்களில் இருந்து வரும் வாகனங்கள் எளிதாகச் செல்ல முடியும். மேலும், நாமக்கல் மாவட்டத்தில் உள்ள 21க்கும் மேற்பட்ட கிராமங்களில் இருந்து விவசாய விளைப்பொருட்களை எளிதாக எடுத்துச்செல்ல முடியும்.

திருவொற்றியூர் – பொன்னேரி – பஞ்செட்டி சாலையில் பக்கிங்காம் கால்வாயின் குறுக்கே உயர்மட்டப் பாலம், சாலையை அகலப்படுத்தும் பணி

சென்னைப் பெருநகர வளர்ச்சி திட்டத்தின் கீழ், ரூ.58.64 கோடி செலவில் சென்னை மாவட்டம், திருவொற்றியூர் – பொன்னேரி – பஞ்செட்டி சாலையில் பக்கிங்காம் கால்வாயின் குறுக்கே கட்டப்பட்டுள்ள உயர்மட்டப் பாலம், சாலையை இரண்டு வழித்தடத்திலிருந்து நான்கு வழித்தடமாக அகலப்படுத்தப்பட்ட சாலை ஆகியவற்றை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

திருவொற்றியூர் – பொன்னேரி – பஞ்செட்டி சாலையில் ஏற்கெனவே வலுவிழந்த நிலையில் இருந்த 5.50 மீட்டர் அகலம் கொண்ட குறுகிய பாலம், தற்போது அகலப்படுத்தப்பட்டு மறுகட்டுமானம் செய்யப்பட்டுள்ளது. இப்பகுதியைச் சுற்றிலும் சி.பி.சி.எல் (CPCL), ஐ.ஓ.சி.எல் (IOCL), எம்.எஃப்.எல் (MFL) போன்ற தொழிற்சாலைகள் இயக்குவதால் இச்சாலையில் கனரக வாகனங்கள் பெருமளவில் இயக்கப்படுகின்றன. இப்புதிய பாலத்தால் இப்பகுதியில் ஏற்படும் போக்குவரத்து நெரிசல், விபத்துக்கள் குறையும். திருவொற்றியூரிலிருந்து மணலி, மாதவரம், மீஞ்சூர், கோயம்பேடு செல்லும் வாகனங்கள் எளிதாகச் செல்ல முடியும். மணலியிலிருந்து தண்டையார்பேட்டை, கொருக்குப்பேட்டை, இராயபுரம், சென்னை செல்லும் வாகனங்களும் எளிதாகச் செல்ல முடியும்.

பல்லடம் - தாராபுரம் சாலை இருவழித்தடத்திலிருந்து நான்கு வழித்தடமாக மாற்றியமைக்கும் பணி

திருப்பூர் மாவட்டம், பல்லடம் - தாராபுரம் சாலை இருவழித்தடத்திலிருந்து நான்கு வழித்தடமாக ரூ.53.40 கோடி செலவில் அகலப்படுத்தி மேம்படுத்தப்பட்ட சாலையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.

இத்திட்டத்தில் 8 கிலோ மீட்டர் நீளத்திற்கான சாலை நான்கு வழித்தடமாக அகலப்படுத்தி மேம்படுத்தும் பணியுடன், குறுக்கு வடிகால் கட்டுதல், பேருந்து நிறுத்தம் அமைத்தல், மழைநீர் வடிகால் அமைத்தல், சாலை மையத்திட்டு அமைத்தல் போன்ற பணிகளும் மேற்கொள்ளப்பட்டன.

காற்றாலை மின் உற்பத்தி நிறுவனங்கள், கோழிப் பண்ணைகள், தேனீ வளர்ப்பு, உற்பத்தித் தொழில்கள் ஆகியவை அருகாமையில் அமைந்துள்ள இச்சாலையானது, திருப்பூர் மாவட்டத்தில் போக்குவரத்துச் செறிவு அதிகம் உள்ள சாலைகளில் ஒன்றாகும். பல்லடம் – தாராபுரம் சாலையில் அமைந்துள்ள நகரப்பகுதி, சிற்றூர்களில் வசிக்கும் மக்களின் உயிர்நாடியாக இச்சாலை விளங்குவதால், இதன் அருகிலுள்ள கிராமங்களில் உள்ள மக்கள் காய்கறிகள், பணப்பயிர்களைப் பயிரிட்டு, பருவகாலங்களில் அருகிலுள்ள சந்தைப்படுத்தும் இடங்களுக்கு இச்சாலை வழியாக எடுத்துச் செல்லப்படுகின்றன. இந்தச் சாலையானது கோவை, ஊட்டி, கொடைக்கானல் போன்ற பல்வேறு சுற்றுலாத் தலங்களுக்கும், பழனி போன்ற புனிதத் தலங்களுக்கும் செல்லும் சுற்றுலாப் பயணிகளின் இணைப்பை மேலும் மேம்படுத்துகிறது.

கோயம்புத்தூர் நகரில், கவுண்டம்பாளையத்தில் மேம்பாலம் அமைக்கும் பணி

கோயம்புத்தூர் நகரில், தேசிய நெடுஞ்சாலை எண்.67இல் (நாகப்பட்டினம் – கூடலூர் – மைசூர் சாலை) கோயம்புத்தூர் – மேட்டுப்பாளையம் சாலை, கணபதி மணியகாரம்பாளையம் சாலை சந்திப்பில்

658 மீட்டர் நீளத்திற்கு ரூ.41.88 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ள மேம்பாலத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இப்பாலத்தினால் ஜி.என் மில்ஸ் சந்திப்பு, 4 இதர சந்திப்புக்களில் ஏற்படும் போக்குவரத்து நெரிசல், விபத்துக்கள் குறையும். மேலும், துடியலூரிலிருந்து சாய்பாபா காலனி, இரயில் நிலையம், மணிக்கூண்டு, அரசு மருத்துவமனை, காந்திபுரம், உக்கடம், பொள்ளாச்சி, பழனி செல்லும் வாகனங்கள் எளிதாகச் செல்ல முடியும். ஜி.என் மில்ஸ் பாலத்தின் தள அளவில் காசிநஞ்சகவுண்டன்புதூர், கணபதி, உருமாண்டம்பாளையம், சின்ன வேடம்பட்டி, மணியக்காரன்பாளையம், சரவணம்பட்டி செல்லும் வாகனங்கள் எளிதாகச் செல்ல முடியும்.

தெரிந்து கொள்வோம்...

சென்னை உயர்நீதிமன்றத் தீர்ப்புகளைத் தமிழில் மொழிபெயர்த்து வழங்க நிதி ஒதுக்கீடு செய்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பு

- 1968ஆம் ஆண்டு ஜனவரி மாதம், பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழ்நாடு முதலமைச்சராக இருந்தபோதுதான் வரலாற்றுச் சிறப்புமிக்க 'இருமொழிக் கொள்கை' தீர்மானம் தமிழ்நாடு சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்டது. அன்றில் இருந்து இன்று வரை தமிழ்நாட்டில் இருமொழிக் கொள்கையே பின்பற்றப்பட்டு வருவதோடு, பல துறைகளிலும் தமிழின் பயன்பாட்டை ஊக்குவிக்கும் வகையிலும், காலத்திற்கேற்பத் தமிழை வளர்த்தெடுக்கவும் தமிழ்நாடு அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

- தமிழைச் சட்ட ஆட்சிமொழியாகக் கொண்டு வர வேண்டும் என்ற நோக்கத்தில், அதற்காகத் தயாராகும் வகையில், மாநிலச் சட்ட ஆட்சிமொழி ஆணையம், சட்டத்துறையின் தமிழ்ப்பிரிவு மூலமாகத் தமிழில் சட்டச் சொற்களஞ்சியம் தயாரித்து அச்சிடுவது, மாநில, ஒன்றியச் சட்டங்கள், அவசரச் சட்டங்கள், அவற்றின்கீழ் வகுக்கப்பட்ட விதிகள், அறிவிக்கைகளையும் தமிழில் மொழிபெயர்த்தல் ஆகிய பணிகளைத் தமிழ்நாடு அரசின் சட்டத்துறை செய்து வருகிறது.

- சென்னை உயர்நீதிமன்றத்தில் தமிழ் வழக்காடு மொழியாக வேண்டும் என்று ஓங்கிக் குரல் கொடுத்து அதற்கான முயற்சிகளை எடுத்து வந்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். அவரது நூற்றாண்டு விழாவைக் கொண்டாடிவரும் இந்தத் தருணத்தில் தமிழைச் சட்ட ஆட்சி மொழியாக்கும் அவரது கனவை நனவாக்கவும், அனைத்து மக்களுக்கும் சென்னை உயர்நீதிமன்றத் தீர்ப்புகள் சென்றடைய வேண்டும் என்ற நோக்கத்தோடும் மாநிலச் சட்ட ஆட்சிமொழி ஆணையத்தின் மூலமாகச் சென்னை உயர்நீதிமன்றத் தீர்ப்புகளைத் தமிழில் மொழிபெயர்த்து அவற்றைப் பொதுமக்கள், வழக்கறிஞர்களது பயன்பாட்டிற்காகக் கொண்டுசெல்ல வேண்டும் என்று கலைஞர் அவர்களின் வழிநடக்கும் நமது அரசு முடிவு செய்துள்ளது.

- இப்பணிக்காக மாநிலச் சட்ட ஆட்சிமொழி ஆணையத்திற்கு முதற்கட்டமாக மூன்று கோடி ரூபாயும், பின்னர் தேவைக்கேற்பவும் நிதி ஒதுக்கீடு செய்யவும் உத்தரவிட்டுள்ளேன். "தொண்டு செய்வாய்த் தமிழுக்குத் துறைதோறும் துறைதோறும் துடித்தெழுந்தே" என்று பாவேந்தர் காட்டிய வழியில் செம்மொழித் தமிழுக்குச் சட்டத்துறையிலும் உரிய இடத்தைப் பெற்றுத் தருவோம்!

சமுதாய நலனுக்கான ஒரு சிறந்த திட்டம்

“போதைப் பொருட்கள் இல்லாத தமிழ்நாடு” திட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற “போதைப் பொருட்கள் இல்லாத தமிழ்நாடு” விழாவில் ஆற்றிய உரை – 11.08.2023

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 11.08.2023 அன்று சென்னை, கலைவாணர் அரங்கத்தில் காவல்துறை சார்பில் நடைபெற்ற “போதைப் பொருட்கள் இல்லாத தமிழ்நாடு” நிகழ்ச்சியில், நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்கள், தேசிய மாணவர் படை, பள்ளி, கல்லூரி மாணவர்கள் போதைப் பொருட்கள் ஒழிப்பு குறித்த உறுதிமொழியை ஏற்றுக்கொண்டனர். மேலும், காணொலிக் காட்சி வாயிலாகத் தமிழ்நாடு முழுவதிலிருந்தும் கலந்துகொண்ட பள்ளி, கல்லூரி மாணவர்களால் இந்த உறுதிமொழி ஏற்கப்பட்டது.

போதைப் பொருட்கள் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்திடவும், பள்ளிகள், கல்லூரிகளில் போதைப் பொருட்கள் தடுப்பு விழிப்புணர்வு பிரச்சாரங்களை அதிகப்படுத்திடவும், போதைப் பொருட்கள் எந்த வடிவில் வந்தாலும் அதை அடியோடு ஒழிக்கத் தீவிரமாக நடவடிக்கை மேற்கொள்ளவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காவல்துறைக்கு உத்தரவிட்டார்.

அதன் அடிப்படையில் போதை ஒழிப்புத் தொடர்பான, தொடர்ச்சியான விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகத் தமிழ்நாடு காவல்துறை சார்பில், 11.08.2022 அன்று சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற “போதைப் பொருட்கள் இல்லாத தமிழ்நாடு” தொடக்க விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்கள்,

தேசிய மாணவர் படை, பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களைக் கொண்டு போதைப் பொருட்கள் ஒழிப்பு குறித்த உறுதிமொழி ஏற்கப்பட்டது. மேலும், போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவு மற்றும் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு ஆகியவற்றை இணைத்து புதியதாக உருவாக்கப்பட்டுள்ள "அமலாக்கப் பணியகம் – குற்றப் புலனாய்வுத் துறை" என்ற புதிய பிரிவை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

அதன் தொடர்ச்சியாகக் கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற "போதைப் பொருட்கள் இல்லாத தமிழ்நாடு" விழாவில், நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்கள், தேசிய மாணவர் படை, பள்ளி, கல்லூரி மாணவர்கள் போதைப் பொருட்கள் ஒழிப்பு குறித்த உறுதிமொழி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

உறுதிமொழி

"போதைப் பழக்கத்தால் ஏற்படும் தீய விளைவுகளை நான் முழுமையாக அறிவேன். நான் போதைப் பழக்கத்திற்கு ஆளாகமாட்டேன். மேலும் எனது குடும்பத்தினரையும், நண்பர்களையும் போதைப் பழக்கத்திற்கு ஆளாகாமல் தடுத்து அவர்களுக்கு அறிவுரைகளை வழங்குவேன். போதைப் பழக்கத்திற்கு உள்ளானவர்களை மீட்டெடுத்து அவர்களை நல்வழிப்படுத்த எனது பங்களிப்பை முழுமையாகத் தருவேன்.

போதைப் பொருட்களின் உற்பத்தி, நுகர்வு, பயன்பாடு ஆகியவற்றிற்கு எதிரான தடுப்பு நடவடிக்கைகளின் மூலம் போதைப் பொருட்களைத் தமிழ்நாட்டில் வேரறுக்க அரசுக்குத் துணை நிற்பேன். மாநிலத்தின் வளர்ச்சிக்கும் மக்களின் நல்வாழ்விற்கும் நான் அர்ப்பணிப்புடன் பங்காற்றுவேன் என்று உளமார உறுதி கூறுகிறேன்."

அதனைத் தொடர்ந்து அமலாக்கப் குற்றப்புலனாய்வுத் துறையினால் தயாரிக்கப்பட்டுள்ள போதைப் பொருட்கள் ஒழிப்பு குறித்த விழிப்புணர்வு பிரச்சாரக் குறும்படத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டார். போதைப் பொருட்களால் ஏற்படும் தீமைகளை விளக்கிடும் இவ்விழிப்புணர்வுக் குறும்படம் தமிழ்நாடு முழுவதும் உள்ள திரையரங்குகளில் திரையிடப்படும். மேலும், போதை ஒழிப்பு குறித்த விழிப்புணர்வு மாணவர்களை எளிதாகச் சென்றடைய அவர்களைக் கவரும் வகையில் பாடல் காணொலியும் வெளியிடப்பட்டது.

தொடர்ந்து, தமிழ்நாடு முழுவதும் பல்வேறு வழக்குகளில் காவல்துறையினரால் பறிமுதல் செய்யப்பட்ட சுமார் 13,000 கிலோ கஞ்சா, போதைப் பொருட்கள் அனைத்து வழிமுறைகளையும் பின்பற்றி இன்று அழிக்கப்பட்டது.

"போதைப் பொருட்கள் இல்லாத தமிழ்நாடு" உருவாக்கிடும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக, மாநிலத்தில் உள்ள அனைத்துப் பள்ளி, கல்லூரிகளில் சுமார் 20,000க்கும் மேற்பட்ட போதைக்கு எதிரான மாணவர் குழுக்களும் (Anti-Drug Clubs), நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்கள் (NSS), தேசிய மாணவர் படை (NCC), இதர மாணவர்கள் இயக்கங்களின் மூலம் போதைப் பொருட்களுக்கு எதிரான விழிப்புணர்வுப் பிரச்சாரத்தினை தொடர்ச்சியாக மேற்கொள்ள சிறப்புத் தன்னார்வலர் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

போதைப் பொருட்களுக்கு எதிராக எடுக்கப்பட்ட துரித நடவடிக்கைகளின் காரணமாக 2022, 2023 ஆண்டுகளில் 22,447 குற்றவாளிகளுக்கு எதிராக 16,023 வழக்குகள் பதியப்பட்டு 42,337 கிலோ கஞ்சா, 1,234 கிலோ ஹெராயின், 74,412 போதை மாத்திரைகள், 223 கிலோ பிற போதைப் பொருட்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

மேலும், போதைப் பொருள் தடுப்புச் சட்டப்பிரிவு வழக்குகளில், குற்றவாளிகள் மற்றும் அவரது குடும்பத்தினரின் வங்கிக் கணக்குகள் முடக்கப்பட்டு, அவர்களின் பெயரிலுள்ள சொத்துக்களைக் கையகப்படுத்தும் தொடர் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதுவரை சுமார் ரூ.18.15 கோடி மதிப்புள்ள அசையும், அசையா சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

இந்த நிகழ்ச்சியின்போது, நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்கள், தேசிய மாணவர் படையைச் சேர்ந்த பள்ளி, கல்லூரி மாணவர்களுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கலந்துரையாடினார்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

போதைப் பொருட்கள் இல்லாத தமிழ்நாடு - என்ற அக்கறை மிகுந்த நோக்கத்தோடு கடந்த ஆண்டு இந்தத் திட்டம் தமிழ்நாடு அரசால் தொடங்கப்பட்டது.

போதைப் பொருள்கள் புழக்கத்தைத் தடுக்க வேண்டும். போதைப் பொருள் விற்பனை, கடத்தலில் ஈடுபடுகிறவர்கள் மேல் நடவடிக்கை எடுக்க வேண்டும். போதைப் பொருள் புழக்கத்தால் ஏற்படுகின்ற தீமைகளைப் பற்றி இளம் தலைமுறையினர் இடையே விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். இதுதான் இந்தத் திட்டத்தினுடைய நோக்கங்கள்.

அதன் காரணமாக, தமிழ்நாட்டில் இத்தகைய குற்றச்சம்பவங்கள் வெகுவாகக் குறைந்து கொண்டு வருகின்றன. அதற்காக, முழுவதுமாகத் தடுத்துவிட்டோம் என்று சொல்ல வரவில்லை. குறைந்து கொண்டு வருகிறது என்றுதான் நான் சொல்கிறேன். இந்தளவுக்குக் குறைய, அக்கறையுடனும், பொறுப்புடனும் செயல்பட்டு வருகின்ற காவல்துறை அதிகாரிகள் எல்லோருக்கும் என்னுடைய நன்றியை முதலில் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த ஆர்வமும், அக்கறையும் குறையாமல் செயல்பட்டு, முற்றிலுமாகப் போதைப் பொருட்கள் நடமாட்டத்தைத் தடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இந்தத் திட்டத்தைக் கடந்த ஆண்டு தொடங்கியபோது, இது சமுதாய நலனுக்கான ஒரு சிறந்த திட்டம் என்று மருத்துவர்களும், பொதுமக்களும் வரவேற்றார்கள். போதைப் பழக்கத்தால், சீரழிந்து இருக்கின்ற மாணவர்களையும், இளைஞர்களையும் மீட்டெடுக்க வேண்டிய பெரும்பணி தமிழ்நாடு அரசுக்கு இருக்கிறது என்று சொன்னார்கள். அவர்கள் நம்பிக்கைக்கேற்ப இந்த விஷயத்தில், தமிழ்நாடு அரசு தொடர்ந்து செயல்பட்டு வந்து கொண்டிருக்கிறது.

போதைப் பழக்கம் என்பது, அதைப் பயன்படுத்துகிறவர்கள் மட்டுமல்லாமல், அவர்கள் குடும்பத்தினருக்கும், சமூகத்துக்கும் கடுமையான பாதிப்புக்களை ஏற்படுத்துகின்ற ஒரு கொடிய நோய்.

தனி மனிதருடைய வாழ்க்கையில் மட்டுமில்லை, மாநில வளர்ச்சியிலேயும் மிகப்பெரிய பாதிப்பை அது ஏற்படுத்தும். போதைப் பொருளைச் சார்ந்திருக்கக் கூடியவர்களுக்கும், போதைக்கு அடிமையானவர்களும் ஒட்டுமொத்த சமூகத்துக்கும் பெரும் சுமையாக இருக்கிறார்கள். அதனால்தான், ஆட்சிக்கு வந்த நாளிலிருந்து, கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்களைத் தடுக்கின்ற நடவடிக்கையில் நாங்கள் தீவிரமாக இறங்கி இருக்கிறோம்.

கடந்த ஆண்டு இந்தத் திட்டத்தைத் தொடங்கி வைத்து நான் பேசும்போது, 'போதைப் பொருள் விற்பனை சங்கிலியை உடைக்க வேண்டும்; பள்ளி, கல்லூரிகளின் அருகே போதைப் பொருள் விற்பனையைத் தடுக்க தீவிர நடவடிக்கை எடுக்கப்படும்" என்று சொன்னேன்.

"இந்த நடவடிக்கையில் நான் சர்வாதிகாரி போல செயல்படுவேன்" என்று கொஞ்சம் கடுமையாகவே பேசியிருந்தேன். அந்த அடிப்படையில்தான் அரசும் நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறது. போதைப் பொருள் விற்பனையில் தொடர்ந்து ஈடுபடக்கூடிய யாராக இருந்தாலும், அவர்கள் மேல் குண்டர் தடுப்புச் சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்க உத்தரவு வழங்கப்பட்டிருக்கிறது.

கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம், 10ஆம் நாளன்று, முதன்முறையாக மாநில அளவிலான மாநாட்டைப் "போதைப் பொருள் இல்லா தமிழ்நாடு" என்ற கழக அமைப்பை ஏற்படுத்தி ஒரு கருப்பொருளில் நடத்தினோம்.

அந்த மாநாட்டில் சில முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டு, போதைப் பொருள், போதைப் பொருள் விற்பனையாளர்களை ஒழிப்பதற்கான புதிய உத்திகள் வகுக்கப்பட்டது.

2022 ஆகஸ்ட் 11 அன்று, மாபெரும் போதைப் பொருள் எதிர்ப்பு உறுதிமொழி ஏற்கும் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டு, 70 இலட்சத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் போதைக்கு எதிராக உறுதிமொழி எடுத்துக் கொண்டார்கள்.

இந்தத் திட்டம் மிகவும் வெற்றிகரமாக அமைந்ததோடு, போதைப்பொருளுக்கு எதிரான போருக்கு ஒரு புதிய உத்வேகத்தை அளிக்கிறதாக இருந்தது. நம்முடைய அரசினுடைய இந்த முயற்சிக்கு, ஊடகங்கள் மற்றும் பொதுமக்களிடமும் நல்ல வரவேற்பு கிடைத்தது.

தென்மாவட்டங்கள் உள்பட பல மாவட்டங்களில், பள்ளி, கல்லூரிகள், முக்கிய இடங்களில் கஞ்சா விற்பனை நடந்தால், பொதுமக்கள் தகவல் தெரிவிக்கப் புகார் எண்களும் வெளியிடப்பட்டது.

போதைப் பொருள் புழக்கத்தைக் கட்டுப்படுத்த, வழக்குகள் பதிதல், கைது, போதைப் பொருட்கள் பறிமுதல், சொத்துக்கள் முடக்கம் என்று பல்வேறு நடவடிக்கைகளைச் செய்து கொண்டு வருகிறோம்.

போதைப் பொருள், உளவெறி ஊட்டும் பொருட்கள் சட்டத்தின் (NDPS) கீழ் பதியப்பட்டிருக்கின்ற வழக்குகளில் தொடர்புடைய முந்தைய குற்றவாளிகளின் நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்காக, 2019 முதல் இந்த வழக்குகளில் தொடர்புடைய குற்றவாளிகளை கண்டுபிடித்து, கண்காணித்துக் கைது செய்து கொண்டு வருகிறோம்.

அதோடு, நிதி தொடர்பான விசாரணை / சொத்துக்கள், வங்கிக் கணக்குகளை முடக்குதல் போன்ற நடவடிக்கைகளையும் அரசு மேற்கொண்டு வருகிறது. போதைப் பொருள் விற்பனை, கடத்தலில் ஈடுபட்ட குற்றவாளிகளுக்கு எதிராக நிதி தொடர்பான விசாரணை நடத்தப்பட்டு, உரிய சட்டத்தின்கீழ் அவர்களின் அசையும், அசையா சொத்துக்கள் முடக்கப்படுகின்றன.

ஆகஸ்ட் 11,2022 முதல், 154 குற்றவாளிகளுக்கு எதிராக நிதி தொடர்பான விசாரணை மேற்கொள்ளப்பட்டு, அவர்களிடமிருந்து ரூ.18.15 கோடி மதிப்புள்ள 45 அசையும் / அசையா சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டிருக்கின்றன.

இதுவரை தமிழ்நாட்டு வரலாற்றில் இல்லாத அளவுக்கு 16 ஆயிரம் கிலோ கைப்பற்றப்பட்ட போதைப் பொருள்கள் அழிக்கப்பட்டிருக்கின்றன. இத்தகைய நடவடிக்கை எடுத்த DGP, போதைப் பொருள் தடுப்பு நுண்ணறிவு ADGP திரு.மகேஷ்குமார் அகர்வால் உள்ளிட்ட கடைநிலை காவல்துறை அதிகாரிகள் வரை அனைவரையும் நான் பாராட்டுகிறேன். வாழ்த்துகிறேன். உங்களுக்கு என்னுடைய Salute.

இந்த ஓராண்டில், NDPS சட்டவழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டவர்களில் 5,184 வங்கிக் கணக்குகள் முடக்கப்பட்டிருக்கின்றன.

கஞ்சா சாகுபடி இல்லாத தமிழ்நாடு என்ற நிலையை தமிழ்நாடு இப்போது தொடர்ந்து பராமரித்துக் கொண்டு வருகிறது. ஆந்திரப் பிரதேசம், ஒரிசா, தெலுங்கானா, இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்களிலிருந்து கஞ்சா கடத்தப்படுவதுதான், தமிழ்நாட்டுக்குக் கஞ்சா நுழைய முக்கிய ஆதாரமாக இருக்கிறது.

இதையெல்லாம் கவனத்தில் வைத்து, அதைத் தடுக்கின்ற வகையில் பல்வேறு நடவடிக்கைகளை நாம் மேற்கொண்டு வருகிறோம். ஒரு சில மாநிலங்களில் இருப்பதுபோல மோசமான நிலைமை தமிழ்நாட்டில் இல்லையென்றாலும், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகப் போதைப் பொருள் தடுப்பு – விழிப்புணர்வு ஆகிய நடவடிக்கைகளை நாம் முடுக்கி விட்டிருக்கிறோம்.

நான் பல ஆய்வுக் கூட்டங்களில் தெரிவித்த ஒரு கருத்தை, மீண்டும் மீண்டும் உங்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

❖ ஒவ்வொரு காவலரும் தனது காவல் நிலைய எல்லையில் போதை மருந்து விற்பனையை முற்றிலுமாகத் தடை செய்ய உறுதி எடுத்துக் கொள்ள வேண்டும்.

❖ கஞ்சா விளைவிப்பதை முற்றிலுமாகத் தடுத்தாக வேண்டும்.

- ❖ மலையடிவாரங்களில் கண்காணிக்க வேண்டும்.
- ❖ அண்டை மாநிலங்களிலிருந்து கடத்தி வருவதைத் தடுத்தாக வேண்டும்.
- ❖ எல்லை மாவட்டங்களினுடைய சோதனைச் சாவடிகளை அதிகப்படுத்த வேண்டும்.
- ❖ கடலோர மாவட்டங்களில் கண்காணிப்பை அதிகப்படுத்த வேண்டும்.
- ❖ காவல்துறையினருடைய ரோந்து அதிகரிக்க வேண்டும்.
- ❖ அனைத்துத் துறைகளும் ஒருங்கிணைந்து செயல்படவேண்டும்.
- ❖ போதைப் பொருள்கள் அதிகம் விற்பனையாகின்ற இடங்களில் நிரந்தரமாகக் கண்காணிக்க வேண்டும்.
- ❖ பள்ளி, கல்வி நிறுவனங்களுக்கு அருகில் போதைப் பொருள் விற்கப்படுவதைத் தடுக்க வேண்டும்.

ஒவ்வொரு பள்ளி, கல்லூரிகளில் 'போதைப் பொருள் எதிர்ப்பு மன்றம்' அமைத்து, அந்தக் கல்வி நிறுவனத்தைப் போதைப் பொருள் இல்லாத வளாகமாக அறிவிக்க ஆணையிடப்பட்டிருக்கிறது.

மாநிலம் முழுவதும் பள்ளி, கல்லூரிகளில் 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட போதைப் பொருள் தடுப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இது ஆரோக்கியமான, பொறுப்புள்ள அடுத்த தலைமுறையை உருவாக்கும் என்று நான் நம்புகிறேன்.

போதைப் பொருள் நடமாட்டத்தைத் தடுத்து நிறுத்த, என்னுடைய தலைமையில் அடிக்கடி ஆய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு, உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

சிறப்பாகச் செயல்படுகிற காவல்துறை அதிகாரிகள், காவலர்களை ஊக்குவிக்கின்ற வகையில், போதைப் பொருள் உற்பத்தி, சட்டவிரோதக் கடத்தலை ஒழிப்பதில், சிறப்பாகச் செயல்படுகிறவர்களுக்கு 'தமிழ்நாடு முதலமைச்சரின் காவல் பதக்கம்' என்ற சிறப்புப் பதக்கம் வழங்கப்படும் என்று அறிவித்தேன்.

அதனடிப்படையில், இந்த ஆண்டு, ஜூன் 26ஆம் தேதி, "சர்வதேச போதைப் பொருள் பயன்பாடு, சட்டவிரோதக் கடத்தலுக்கு எதிரான நாள்" அன்று ஆறு காவல்துறை அதிகாரிகள் / காவலர்களுக்கு இந்தப் பதக்கம் வழங்கப்பட்டிருக்கிறது.

அரசினுடைய போதை ஒழிப்புச் செயல்பாடுகளைப் பரவலாக எடுத்துக் கொண்டு செல்வதற்காக, எல்லா கல்வி நிறுவனங்களிலும், மாபெரும் போதைப் பொருள் எதிர்ப்பு உறுதிமொழிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அரசு அலுவலர்கள், கல்வி நிறுவனங்கள், மாணவர்கள் என்று நாம் எல்லோரும் போதைப் பொருள் இல்லாத தமிழ்நாட்டிற்காக அர்ப்பணிப்புடன் செயல்பட வேண்டும்.

பள்ளி மாணவர்கள் நிறைய பேர் இங்கு வந்திருக்கிறீர்கள். உங்களுக்குப் பள்ளியில் Health is Wealth என்று சொல்லிக் கொடுத்திருப்பார்கள். இதை நீங்கள் எப்போதும் ஞாபகத்தில் வைத்துக் கொண்டிருக்க வேண்டும். ஆசிரியர்களும் இதை எப்போதும் ஞாபகப்படுத்திக் கொண்டிருக்க வேண்டும். நீங்கள் என்ன தான் பணம் சம்பாதித்தாலும் நல்ல உடல்நிலை இருந்தால்தான் உங்களால் தொடர்ந்து உழைக்கவும் முடியும், சம்பாதித்த பணத்தை வைத்து சந்தோஷமாக இருக்கவும் முடியும். இதுதான் மாணவர்களுக்கு ஆசிரியர்கள் அறிவுரையாக வழங்கவேண்டும் என்று இந்தத் தருணத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

போதை ஒழிப்பைப் பொறுத்தவரை, தடுப்பு நடவடிக்கைகளும், விழிப்புணர்வுப் பிரச்சாரமும் ஒருசேர நடக்க வேண்டும். காவல் துறையும், பொதுமக்களும் ஒரே நோக்கத்துடன் செயல்பட வேண்டும்.

இந்த நான்கும்
நேர்கோட்டில்
இணைந்தால்
போதை இல்லாத
தமிழ்நாட்டை
நிச்சயம் உருவாக்கலாம்!
உருவாக்குவோம்!

“ஊட்டச்சத்தை உறுதி செய்” திட்டத்தின் மூலம் பயன்பெற்ற குழந்தைகளின் பெற்றோர்களிடம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நலம் விசாரித்தார்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 12.08.2023 அன்று, தலைமைச் செயலகத்தில், தமிழ்நாட்டில் 6 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் ஊட்டச்சத்துக் குறைபாட்டைப் போக்கும் வகையில் “ஏற்றமிகு ஏழு திட்டங்கள்” கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட “ஊட்டச்சத்தை உறுதி செய்” திட்டத்தின் மூலம் பயன்பெற்ற வருண் (வயது 4), நுசாய்பா (வயது 2), சாய்திரன் (2½ வயது) ஆகிய குழந்தைகளின் பெற்றோர்களிடம் அக்குழந்தைகளின் உடல்நலம் குறித்து விசாரித்தறிந்தார். மேலும், இத்திட்டத்தின்கீழ்க் குழந்தைகளின் வளர்ச்சியைக் கண்டறிவதற்கான சிறப்பு மருத்துவ முகாம்களின் போது இருதயத்தில் பாதிப்புக் கண்டறியப்பட்டு, அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்ட ஹர்ஷித் (வயது 2), தேஜாஸ்ரீ (வயது 2, 8 மாதம்) ஆகிய குழந்தைகளின் பெற்றோர்களிடம் அக்குழந்தைகளுக்கு மேற்கொள்ளப்பட்ட இருதய அறுவை சிகிச்சை குறித்த விவரங்களைக் கேட்டறிந்து, நலம் விசாரித்தார். அப்போது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், அக்குழந்தைகளின் பெற்றோர்களிடம் சத்துப் பெட்டகம், குழந்தைகளுக்கான விளையாட்டுப் பொருட்களை வழங்கினார்.

ஆரோக்கியமான குழந்தைகளே, நாட்டின் வளமான எதிர்காலம் என்பதைக் கருத்தில் கொண்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், 07.05.2022 அன்று, சட்டப்பேரவையில் விதி 110இன் கீழ் வெளியிட்ட அறிவிப்பில், 6 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளை நலமுடன்

வளர்த்தெடுக்கும் நோக்கத்துடன், மாநில அளவில் குழந்தைகளுக்கு மருத்துவப் பரிசோதனைகள் செய்ய இருக்கிறோம் என்றும், மருத்துவ உதவி தேவைப்படும் குழந்தைகளுக்கு மருத்துவ உதவியும், ஊட்டச்சத்துத் தேவைப்படும் குழந்தைகளுக்குச் சிறப்பு ஊட்டச்சத்துத் திட்டம் ஒன்றும் செயல்படுத்திட அரசு முடிவெடுத்துள்ளது என்றும் அறிவித்தார்.

இத்திட்டமானது, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள், சுகாதாரத்துறை ஒன்றிணைந்து, 6 வயதிற்குட்பட்ட குழந்தைகளில் கடுமையான, மிதமான ஊட்டச்சத்துக் குறைபாடுடைய குழந்தைகளுக்குச் சிறப்பு மருத்துவப் பரிசோதனைகள் மேற்கொண்டு மருத்துவ உதவி தேவைப்படும் குழந்தைகள், ஊட்டச்சத்துத் தேவைப்படும் குழந்தைகள் ஆகியோரைப் பிரித்தறிந்து, குழந்தைகளின் ஊட்டச்சத்துக் குறைபாட்டினை நீக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

'ஊட்டச்சத்தை உறுதி செய்' திட்டத்தின்கீழ், குழந்தைகளின் வளர்ச்சியைக் கண்டறிவதற்கான சிறப்பு மருத்துவ முகாமை நீலகிரி மாவட்டம், தொட்டபெட்டா ஊராட்சி முத்தோரை குழந்தைகள் மையத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், 21.05.2022 அன்று, தொடங்கி வைத்தார்.

இத்திட்டத்தின் கீழ், 6 வயது வரையுள்ள மிதமான, கடுமையான ஊட்டச்சத்துக் குறைபாடுடைய 9.3 இலட்சம் குழந்தைகள் RBSK குழுவினரால் மருத்துவப் பரிசோதனை செய்யப்பட்டு, அதில் 43,200 குழந்தைகளுக்கு அறுவை சிகிச்சை உட்பட வெவ்வேறு மருத்துவச் சிகிச்சைகள் மாவட்ட ஆரம்ப சிகிச்சை மையங்களில் அளிக்கப்பட்டன.

6 மாதம் முதல் 6 வயதுடைய கடுமையான ஊட்டச்சத்துக் குறைபாடுடைய குழந்தைகளுக்கு உண்பதற்குத் தயாராக உள்ள சிகிச்சை உணவு (Ready to Use Therapeutic Food - RUTF) 8 வாரங்களுக்கு அளிக்க ரூ.18.68 கோடி நிதி ஒப்பளிப்பு செய்து அரசாணை வெளியிடப்பட்டது. அதேபோன்று, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையினால் ஊட்டச்சத்துக் குறைபாடுடைய 0-6 மாதக் குழந்தைகளின் தாய்மார்களுக்கு ரூ.8.68 கோடிச் செலவில் சத்துப் பெட்டகம் (Nutri Kit) வழங்கவும் ஆணையிடப்பட்டது. இத்திட்டத்தைச் சென்னை, அண்ணா நூற்றாண்டு நினைவு நூலக அரங்கத்தில் 28.02.2023 அன்று நடைபெற்ற விழாவில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், ஏற்றமிகு ஏழு திட்டங்களின்கீழ், ஊட்டச்சத்துக் குறைபாடுள்ள குழந்தைகள் மற்றும் தாய்மார்களுக்குச் சிறப்பு ஊட்டச்சத்து பெட்டகங்களை வழங்கி தொடங்கி வைத்தார்.

6 மாதம் முதல் 6 வயதுடைய கடுமையான ஊட்டச்சத்துக் குறைபாடுடைய 92,015 குழந்தைகளுக்குச் சிறப்பு சிகிச்சை, உணவு அளிக்கப்பட்டதில் 61,788 (66.6%) குழந்தைகள் ஊட்டச்சத்து நிலையில் முன்னேற்றம் அடைந்துள்ளனர். அதேபோன்று, 0-6 மாதக் கடுமையான ஊட்டச்சத்துக் குறைபாடுடைய 14,901 குழந்தைகளின் பாலூட்டும் தாய்மார்கள் பிறப்பு கூடுதல் சத்து உட்கொண்டதினால் 13,319 (89.4%) குழந்தைகளின் வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க அளவில் முன்னேற்றம் காணப்பட்டுள்ளது.

அனைத்துக் குழந்தைகளின் வளர்ச்சி தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டம், ஊட்டச்சத்துக் குறைபாடுடைய குழந்தைகளின் வளர்ச்சியில் முன்னேற்றத்தினைக் கொண்டு வந்ததோடு மட்டுமல்லாமல் குழந்தையின் வளர்ச்சியில் குறிப்பாக, முதல் 6 மாதத்தில் ஊட்டச்சத்தின் முக்கியத்துவத்தைப் பற்றி மிகுந்த விழிப்புணர்வினை உருவாக்கியுள்ளது. மேலும், இத்திட்டத்தின்கீழ் பிறவியிலேயே கண்டறியப்பட்ட இருதய நோய், பிறவியிலேயே கண்டறியப்பட்ட மூளை வளர்ச்சி குறைபாடு, பிறவிப் பார்வை குறைபாடு, பிறவிக் காது கேளாமை, பிறவிக் கால் ஊனம் போன்ற பிறவி குறைபாடுகளையுடைய 3,038 குழந்தைகளுக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டுத் தற்பொழுது அவர்கள் நலமாக உள்ளனர்.

மதுரையில் பின்னணிப் பாடகர் “கலைமாமணி” டி.எம்.சௌந்தரராஜன் அவர்களுக்கு நூற்றாண்டு விழா திருவுருவச் சிலை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், பின்னணிப் பாடகர் “கலைமாமணி” டி.எம்.சௌந்தரராஜன் அவர்களின் நூற்றாண்டு விழாவினையொட்டி, மதுரை, முனிச்சாலை சந்திப்பில் உள்ள மாநகராட்சி கிழக்கு மண்டல அலுவலக வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள “கலைமாமணி” டி.எம்.சௌந்தரராஜன் அவர்களின் திருவுருவச் சிலையை 16.08.2023 அன்று திறந்து வைத்தார்.

தமிழ்த் திரைப்படப் பின்னணிப் பாடகர் “கலைமாமணி” டி.எம்.சௌந்தரராஜன் அவர்கள் 1923ஆம் ஆண்டு மதுரையில் பிறந்தார். தனது இளம் வயதிலேயே இசைப் பயிற்சி பெற்று 1950ஆம் ஆண்டு முதல் அரை நூற்றாண்டுக் காலம் தமிழ்த் திரையுலகில் சிறப்புமிக்க பாடகராக மக்களின் அன்பையும், ஆதரவையும் பெற்றுத் திகழ்ந்தார். 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பாடல்களைப் பாடி, தமிழ்நாட்டு மக்களால் டி.எம்.எஸ். என்று அழைக்கப்பட்டு அனைவரின் உள்ளங்களிலும் நீங்கா இடம் பிடித்தார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் “ஏழிசை மன்னர்” என்ற பட்டம் திரு.டி.எம்.சௌந்தரராஜன் அவர்களுக்கு வழங்கப்பட்டது. மேலும், 1974-1975ஆம் ஆண்டுக்கான கலைமாமணிவிருதும், 2003ஆம் ஆண்டு பத்மஸ்ரீ பட்டமும் பெற்றார். திரைப்படப்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார் - 16.08.2023

பாடல்கள் மட்டுமன்றி, ஏராளமான பக்திப் பாடல்களையும் பாடி தன் குரல் வளத்தால் உலகமெங்கும் உள்ள தமிழர்களின் வாழ்வோடு கலந்திருந்த திரு. டி.எம்.சௌந்தரராஜன் அவர்கள் 25.05.2013 அன்று மறைந்தார்.

பின்னணிப் பாடகர் "கலைமாமணி" டி.எம்.சௌந்தரராஜன் அவர்களின் புகழுக்குச் சிறப்புச் சேர்க்கின்ற வகையில், அவரது நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, சென்னையில் அவர் வாழ்ந்த இல்லம் அமைந்துள்ள மந்தைவெளி மேற்கு வட்டச் சாலைக்கு, "டி.எம்.சௌந்தரராஜன் சாலை" என்று, 24.03.2023 அன்று, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் பெயரிடப்பட்டது. மேலும், அவர் பாடிய புகழ்பெற்ற பாடல்களை நினைவுகூரும் வகையில் இன்னிசைக் கச்சேரியும் சென்னை, கலைவாணர் அரங்கத்தில் அன்றையதினம் நடைபெற்றது.

2023-2024 ஆம் ஆண்டிற்கான செய்தி மற்றும் விளம்பரத் துறை மானியக் கோரிக்கையில், பிரபல பின்னணிப் பாடகர் திரு. டி.எம்.சௌந்தரராஜன் அவர்களின் நூற்றாண்டு விழாவினையொட்டி அவரது புகழைச் சிறப்பிக்கும் வகையில் மதுரை மாநகரில் திருவுருவச் சிலை அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பிற்கிணங்க, மதுரை, முனிச்சாலை சந்திப்பில் உள்ள மாநகராட்சி கிழக்கு மண்டல அலுவலக வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள "கலைமாமணி" டி.எம்.சௌந்தரராஜன் அவர்களின் திருவுருவச் சிலையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், 16.08.2023 அன்று திறந்து வைத்து, அங்கு வைக்கப்பட்டிருந்த அவரது திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். "கலைமாமணி" டி.எம்.சௌந்தரராஜன் அவர்களின் திருவுருவச் சிலையினைத் திறந்து வைத்தமைக்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு திரு. டி.எம்.சௌந்தரராஜன் அவர்களின் குடும்பத்தினர் நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

ரூ.5,000 கோடி மதிப்பிலான
கோயில் சொத்துக்கள் மீட்பு

"எல்லார்க்கும் எல்லாம்" என்ற திராவிட மாடல் ஆட்சியில் அனைத்துத் துறைகளும் அதிவேகமாக வளர்ந்து வருகிறது.

குறிப்பாக இந்து சமய அறநிலையத் துறையின் செயல்பாடுகள் அனைத்திலும் சிறப்பாக இருக்கின்றன.

ரூ.5,000 கோடி மதிப்பிலான கோயில் சொத்துக்களை இரண்டு ஆண்டு காலத்தில் மீட்டது தி.மு.க. அரசு.

இன்றைய நாள், 1000ஆவது கோயில் குடமுழுக்கு விழாவை மேற்கு மாம்பலம் காசிவிசுவநாதர் கோயிலில் நிகழ்த்தியிருக்கிறது இந்து சமய அறநிலையத்துறை.

இறைநம்பிக்கையாளர் அனைவரும் போற்றும் இணையற்ற ஆட்சியாக தி.மு.க. அரசு செயல்பட்டு வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களின்
சமூக வலைத்தளப்பதிவு - 10.09.2023

கச்சத்தீவை மீட்டெடுத்துத் தமிழ்நாட்டு மீனவர்களின் மீன்பிடி உரிமையைக் காப்போம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 18.08.2023 அன்று, இராமநாதபுரம் மாவட்டம், மண்டபத்தில் நடைபெற்ற தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையம், மீனவச் சங்கங்கள் இணைந்து நடத்தும் மீனவர் நல மாநாடு மற்றும் மீனவர்களுக்கு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில், 14,000 பயனாளிகளுக்கு ரூ.88.90 கோடி மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கிடும் அடையாளமாக 60 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

மீன் வளத்தைப் பாதுகாத்தல், நிலைக்கத்தக்க மீன்பிடிப்பு, மீன் வளர்ப்பு நடைமுறைகளை ஊக்குவித்தல் ஆகியவற்றின் மூலம் மீன் உற்பத்தியை அதிகரிக்கச் செய்தல், மீன்பிடிப் படகுகளைப் பாதுகாப்பாக நிறுத்துவதற்கும், மீன்பிடி இடத்திலிருந்து அதன் நுகர்வு வரை சுகாதாரமான முறையில் கையாளப்படுவதை உறுதி செய்வதற்கும் மீன்பிடித் துறைமுகங்கள், மீன் இறங்குதளங்கள், கரையோர வசதிகள், மீன் சந்தைகள் போன்ற நவீன உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், மீன்பிடித் தடைக்காலங்களில் மீனவர்களுக்கு நிதியுதவி, மீன்பிடிப் படகுகளுக்கு வரிவிலக்களிக்கப்பட்ட டீசல் எரியெண்ணெய் வழங்குதல், பாரம்பரிய மீன்பிடிக் கலன்களுக்கு மண்ணெண்ணெய் மானிய விலையில் வழங்குதல், புதிய சூரை மீன்பிடி தூண்டில், செவுள் வலை விசைப்படகுகளை வாங்கிட மீனவர்களுக்கு 50 விழுக்காடு மானியம் வழங்குதல் போன்ற பல்வேறு திட்டங்களைத் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் சார்பில் இராமநாதபுரம், இராமேஸ்வரம், கீழக்கரை, திருவாடனை, ஆர்.எஸ்.மங்கலம் ஆகிய வட்டங்களைச் சேர்ந்த பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பில் மானியத்தில் சூரை மீன்படகு கட்டுதல், பிரதமரின் மத்ஸ்ய சம்பதா யோஜனா திட்டங்கள், கிசான் கடன் அட்டைகள், கடற்பாசி வளர்ப்பு, மீனவர் நலவாரிய அட்டைகள், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை சார்பில் புதிய தொழில்முனைவோர் தொழில் மேம்பாட்டுத் திட்டத்தில் நிதியுதவி, கூட்டுறவுத் துறை சார்பில் பயனாளிகளுக்கு மகளிர் சுயஉதவிக் குழு



கடனுதவி, கே.சி.சி. கடற்பாசி வளர்ப்புக் கடனுதவி, மகளிர் திட்டத்தின் சார்பில் கூட்டுப் பொறுப்புக் குழு கடனுதவி, மகளிர் சுயஉதவிக் குழு கடனுதவி என மொத்தம் 14,000 பயனாளிகளுக்கு மொத்தம் ரூ.88.90 கோடி மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கிடும் அடையாளமாக 60 பயனாளிகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

முன்னதாக, மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறைச் சார்பில் அமைக்கப்பட்டுள்ள கண்காட்சி அரங்கங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் பகுதியில் மீனவர்கள் நல மாநாட்டை நடத்த இருப்பதாகவும் – அதில் நீங்கள் கலந்துகொள்ள வேண்டும் என்றும் மாண்புமிகு அமைச்சர்கள் திரு.தங்கம் தென்னரசு அவர்களும், திரு. அனிதா ராதாகிருஷ்ணன் அவர்களும், திரு. இராஜ கண்ணப்பன் அவர்களும், அதேபோல் சட்டமன்ற உறுப்பினர் திரு. காதர்பாட்சா முத்துராமலிங்கம் விடுத்த அன்பான அழைப்பை ஏற்று நான் இங்கே வந்திருக்கிறேன்.

தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன் வளக் கூட்டுறவு இணையமும், மீனவச் சங்கங்களும் இணைந்து இந்த மாநாட்டை நடத்துகிறார்கள். பொதுவாக, அரசு நிகழ்ச்சிகளில் மீனவச் சங்கங்களை இணைத்துக் கொள்ளமாட்டார்கள். மீனவர்கள் மாநாடாக இருந்தால், அதில் அரசு அதிகாரிகள் இடம்பெற மாட்டார்கள். ஆனால், இங்கே இரண்டு தரப்பையும் இணைத்து இந்த மாநாட்டை அமைச்சர்கள் ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

1,076 கிலோ மீட்டருக்கு மிக நீளமான கடற்கரையைக் கொண்ட மாநிலம் நம்முடைய தமிழ்நாடு. நமது கப்பல்கள் பல்வேறு உலக நாடுகளுக்குப் பல நூறு ஆண்டுகளுக்கு முன்பே சென்றிருப்பதைத் தாலமியின் நிலவியல் கையேடு சொல்கிறது.

கட்டுமரம், நாவாய், தோணி, வத்தை, வள்ளம், மிதவை, ஓடம், தெப்பம், டிங்கி, பட்டுவா, வங்கம், அம்பி, திமில் - என்று வகை வகையாகக் கலம் செலுத்தியவர்கள் தமிழர்கள்.

நம்மைச் சூழ்ந்துள்ள அனைத்துக் கடல்களிலும் தமிழர்கள் கலம் செலுத்தியிருக்கிறார்கள். உலகப் பயணிகள் எல்லோரும் தமிழ்நாட்டுக் கடலோரத்தை நோக்கி வந்தார்கள். அந்த வகையில், தமிழ்நாட்டை உலகத்தோடு இணைத்தது கடல். கடல் ஆழமானது மட்டுமல்ல, வளமானது. மீன்பிடித் தொழிலில் இந்தியாவில் ஐந்தாவது பெரிய மாநிலமாகத் தமிழ்நாடு இருக்கிறது. அந்தளவுக்குத் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு மீனவர்கள் பங்களிக்கிறார்கள்.

"கடல் ஏன் உப்பாக இருக்கிறது? கடல் கடந்து போன தமிழனின் கண்ணீரால்" என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள்.

கடல் கடந்து போன தமிழனின் கண்ணீரால் மட்டுமல்ல – கடலோரத்தில் வாழும் தமிழனின் கண்ணீராலும்தான் உப்பாக இருக்கிறது என்பதை உணர்ந்த நம்முடைய கழக அரசு, தனது ஆட்சிக் காலத்தில் ஏராளமான திட்டங்களைத் தீட்டி வந்திருக்கிறது.

★ மீனவர் நல வாரியம்

★ மீன்பிடித் தடைக்கால நிவாரணம்

★ கன்னியாகுமரி, நெல்லை, தூத்துக்குடி மாவட்ட மீனவர்களுக்கு மானிய விலையில் மண்ணெண்ணெய் வழங்குகிறது போன்றவை கலைஞர் ஆட்சியில்தான் செய்யப்பட்டது.

மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறைச் சார்பில் கடந்த இரண்டு வருடமாக ஏராளமானத் திட்டங்கள் தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் துறையைக் கவனித்து வரும் நம்முடைய அமைச்சர் திரு. அனிதா ராதாகிருஷ்ணன் அவர்கள் துறை அமைச்சராக மட்டுமல்ல, மீனவ நண்பனாகவே அவர் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்.

இந்த இரண்டு ஆண்டு காலத்தில் இந்தத் துறையில் மட்டுமே நம்முடைய ஆட்சி செய்திருக்கின்ற சில சாதனைகளை உங்களிடத்தில் நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

உங்களுக்கு இது நன்றாகவே தெரிந்திருக்கும், ஏற்கெனவே பேசியவர்கள் குறிப்பிட்டார்கள் என்றாலும், ஊடகத்தினர் மற்றும் பொதுமக்களும் தெரிந்திருக்க வேண்டும் என்பதற்காக இதை நான் சொல்ல விரும்புகிறேன்.

★ மீன்வளத் துறையின் பெயரை மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை என்று மாற்றினோம்.

★ மீன்பிடிக் குறைவுக் கால நிவாரணத்தை 5 ஆயிரம் ரூபாயிலிருந்து 6 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி, 1 இலட்சத்து 80 ஆயிரம் குடும்பங்கள் இதனைப் பெற்று வருகிறார்கள்.

★ தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக் கழகத்தில் மீன்வள இளங்கலைப் படிப்பில் மீனவ மாணவர்களுக்கான இடஒதுக்கீட்டை 5 விழுக்காட்டிலிருந்து 20 விழுக்காடாக உயர்த்தி இருக்கின்றோம்.

★ காணாமல் போகும் மீனவக் குடும்பங்களுக்கு வழங்கப்படும் தினசரி உதவித் தொகையை 250 ரூபாயிலிருந்து 350 ஆக உயர்த்தி வழங்கி வருகிறோம்.

★ இயற்கை மரணமடையும் மீனவர் நல வாரிய உறுப்பினர் குடும்பங்களுக்கு வழங்கப்படும் உதவித்தொகையை 15 ஆயிரம் ரூபாயிலிருந்து 25 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி இருக்கிறோம்.

★ மீனவ கிராமங்களில் கடல் அரிப்புத் தடுத்திடவும், மீன்பிடிப் படகுகளை பாதுகாப்பாக நிறுத்திடவும், கடல் அரிப்புத் தடுப்புச் சுவர்களையும், மீன்பிடி இறங்கு தளங்களையும், தூண்டில் வளைவுகளையும் அமைத்துக் கொடுத்திருக்கின்றோம்.

★ மீன்பிடித் தடைக்கால நிவாரண உதவியாக மீனவக் குடும்பங்களுக்கு ரூ.5,000 வீதம் வழங்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் ஒன்றரை இலட்சத்துக்கும் மேற்பட்ட மீனவர் குடும்பங்கள் இதனால் பயனடைகிறார்கள்.

★ கடல் மீனவர் சேமிப்பு, நிவாரணத் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறோம். 14 கடலோர மாவட்டங்களைச் சார்ந்த 2 இலட்சத்து 7 ஆயிரம் மீனவர்களுக்கு மாநில அரசின் பங்களிப்பு நிவாரணமாக ரூ.62.19 கோடி வழங்கப்பட்டது.

★ கடல் மீனவ மகளிர் சேமிப்பு, நிவாரணத் திட்டம் நடைமுறையில் இருக்கிறது. இதன் மூலமாக 2 இலட்சம் மீனவ மகளிர் பயன்பெற்று வருகிறார்கள்.

★ மீனவர்களுக்கு மிக முக்கியமானத் தேவை டீசல் எரிபொருள். மீன்பிடி விசைப்படகுகளுக்கு ஆண்டொன்றிற்கு 18,000 லிட்டர்; நாட்டுப் படகுகளுக்கு ஆண்டொன்றிற்கு 4,000 லிட்டர் விற்பனை வரி விலக்களிக்கப்பட்ட டீசலை நம்முடைய அரசு வழங்கி வருகிறது.

★ அதேபோல் தூத்துக்குடி, நெல்லை, கன்னியாகுமரி மாவட்டங்களைச் சேர்ந்த மீனவர்களுடைய இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டுப் படகுகளுக்கு மானிய விலையில் மண்ணெண்ணெய் வழங்கப்பட்டு வருகிறது.

★ நாட்டுப் படகுகளுக்கு இயந்திரங்கள் வாங்குவதற்கு 40 விழுக்காடு மானியமாக வழங்கப்படுகிறது.

★ 10 மீட்டர் நீளமுள்ள கண்ணாடி நாரிழைப் படகு, இயந்திரம், வலைகள், பனிக்கட்டி பெட்டி ஆகியவற்றை வாங்குவதற்கு மானியம் வழங்கப்படுகிறது.

★ புதிய தூண்டில் மீன்பிடிப்பு மற்றும் செவுள் வலை சூரை மீன்பிடிப் படகு கட்டிட 50 விழுக்காடு மானியம் தரப்படுகிறது.

★ தமிழ்நாட்டில் கடற்பாசி வளர்ப்பை ஊக்குவிக்க ரூ.127.71 கோடி மதிப்பீட்டில் பல்நோக்குக் கடற்பாசிப் பூங்கா அமைக்கப்பட்டு வருகிறது.

★ இராமநாதபுரம், தஞ்சாவூர், புதுக்கோட்டை, தூத்துக்குடி, கன்னியாகுமரி மாவட்டங்களைச் சேர்ந்த 1,311 மீனவ மகளிருக்குக் கடற்பாசி வளர்ப்பு மேற்கொள்ள கடற்பாசி வளர்ப்பு மிதவைகள், கயிறுகளை ரூ.1.42 கோடி மானியத்தில் வழங்கியுள்ளது.

★ திருவள்ளூர், இராமநாதபுரம், தூத்துக்குடி மாவட்டங்களைச் சார்ந்த மீனவர்களுக்குக் கடலில் மிதவைக் கூண்டுகளை அமைக்க மானியம் வழங்கப்பட்டிருக்கிறது.

★ திருவள்ளூர், செங்கல்பட்டு, கடலூர், விழுப்புரம், புதுக்கோட்டை, இராமநாதபுரம், கன்னியாகுமரி மாவட்டங்களில் கடல் மிதவைக் கூண்டுகள் அமைக்கப்பட்டு வருகிறது.

★ தமிழ்நாட்டில் இறால் வளர்ப்பை ஊக்குவிக்க, மொத்தம் 100 ஹெக்டேர் பரப்பளவுகளில் புதிய இறால் வளர்ப்புப் பண்ணைகள் அமைக்க ரூ.14 கோடி அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

★ நவீனத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, குறைந்த அளவு நீர்ப் பயன்பாட்டில் இறால் வளர்ப்பு மேற்கொள்ள ஏதுவாக மொத்தம் 25 உயிர்க்கூழ் இறால் வளர்ப்பு அலகுகள் அமைக்க ரூ.4.50 கோடி மானியமாக வழங்கப்பட்டு வருகிறது.

★ மயிலாடுதுறை, இராமநாதபுரம் மாவட்டங்களில் தலா ஒரு கடல் மீன்குஞ்சு பொரிப்பகம் அமைக்க மொத்தம் ரூ.30 இலட்சம்

அக்காள்மடம் மீனவர் குடியிருப்புப் பகுதிக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேரில் சென்று மீனவப் பெருமக்களிடம் கலந்துரையாடல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 17.08.2023 அன்று, இராமநாதபுரத்திலிருந்து இராமேஸ்வரம் செல்லும் வழியில், இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரம் வட்டம், பாம்பன் ஊராட்சி, அக்காள்மடம் மீனவர் குடியிருப்புப் பகுதிக்கு நேரில் சென்று, அங்குள்ள மீனவர் குடும்பத்தினருடன் கலந்துரையாடினார்.

இராமநாதபுரம் மாவட்டம், மண்டபத்தில் 18.08.2023 அன்று நடைபெற்ற தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையம் மற்றும் மீனவச் சங்கங்கள் இணைந்து நடத்தும் மீனவர் நல மாநாடு, மீனவர்களுக்கு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் கலந்து கொள்வதற்காக இராமநாதபுரத்திலிருந்து இராமேஸ்வரம் செல்லும் வழியில், அக்காள்மடம் மீனவர் குடியிருப்புப் பகுதிக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேரில் சென்று மீனவப் பெருமக்களிடம் அவர்களது தேவைகள் குறித்துக் கேட்டறிந்தார். அப்போது, அப்பகுதி மக்கள் குடியிருப்புப் பட்டா வேண்டுமென்று கோரிக்கை வைத்தனர். பட்டா வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார். மேலும், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் பயன்பெற விண்ணப்பித்து இருக்கிறீர்களா என்று அங்குள்ள பெண்களிடம் கேட்டறிந்தார். அத்துடன் பொதுமக்கள் அளித்த கோரிக்கை மனுக்களையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், அக்காள்மடம் மீனவர் குடியிருப்புப் பகுதியில் உள்ள மாணவச் செல்வங்களுடன் கலந்துரையாடி, அவர்களது படிப்பு விவரங்கள் குறித்துக் கேட்டறிந்தார்.

மானியம் வழங்க அரசு ஒப்புதல் வழங்கியிருக்கிறது. பணிகளும் வேகமாக நடைபெற்று வருகின்றன.

★ உள்நாட்டு மீன்வளத்தைப் பெருக்க ஏராளமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

★ மீனவச் சமுதாயத்தைச் சார்ந்த மாணவர்கள் அகில இந்திய குடிமைப் பணித் தேர்வுகளில் வெற்றிபெற 6 மாத சிறப்புப் பயிற்சியை நடத்தி இருக்கிறோம். இதில் 41 மாணவர்கள் பயனடைந்திருக்கிறார்கள்.

★ மீனவச் சமுதாயத்தைச் சார்ந்த மாணவர்கள் கடல்சார் படிப்புகளைப் பயில தமிழ்நாடு அரசு 88 பேருக்கு மொத்தம் ரூ.27.75 இலட்சம் உதவித்தொகை வழங்கியிருக்கிறது.

★ மீனவச் சமுதாயத்தைச் சார்ந்த 1,000 நபர்களுக்குக் கடலோர உயிர் பாதுகாப்புப் பயிற்சி ரூ.47.20 இலட்சம் செலவில் வழங்கப்பட்டிருக்கிறது.

★ தமிழ்நாடு மீனவர் நலவாரியம் மூலம் 9,547 பயனாளிகளுக்கு நிவாரண உதவியாக ரூ.12.43 கோடி வழங்கப்பட்டுள்ளது.

★ கடந்த இரண்டு ஆண்டுகளில் மொத்தம் 42 மீன்வள உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்கள் மொத்தம் ரூ.431.42 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டு என்னால் தொடங்கி வைக்கப்பட்டிருக்கிறது.

★ 109 மீன்வள உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்களின்கீழ் மீன்பிடித் துறைமுகங்கள், மீன்பிடி இறங்கு தளங்கள், கடற்கரைப் பாதுகாப்பு, அரசு மீன்பண்ணை கட்டுமானம், அலுவலகக் கட்டுமானம் போன்ற பணிகள் நடந்து வருகின்றன. இதன் மொத்த மதிப்பு ரூ.1,296.03 கோடி.

இதுவரை செய்த சாதனைகள் நிறைவேற்றிய திட்டங்களோடு பட்டியலை நான் இப்போது சொன்னேன்.

அடுத்து, 14 ஆயிரம் பயனாளிகள் பயன்பெறும் வகையில் ரூ.88.90 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் இந்த விழாவின் மூலமாகக் கொடுக்கப்பட இருக்கின்றன. அதுமட்டுமல்ல, இங்கே, இத்தனை மீனவர்கள் வந்திருக்கிறீர்கள். இப்படி வந்திருக்கக்கூடிய நேரத்தில், அறிவிப்பு எதுவும் வெளியிடாமல் சென்றால் நன்றாக இருக்குமா? அதனால், நமது மீனவர்கள் எதிர்பார்த்து வரும் சில முக்கியமான அறிவிப்புகளை வெளியிட விரும்புகிறேன்...

முதல் அறிவிப்பு,

★ மீனவர்களுக்கான வீடு கட்டும் திட்டத்தின் கீழ் 5 ஆயிரத்து 35 பேருக்கு வீடுகளுக்குப் பட்டா வழங்கப்படும்.

2ஆவது அறிவிப்பு,

★ 45 ஆயிரம் பேருக்கு மீன்பிடித் தொழிலுக்கான கூட்டுறவுக் கடன் வழங்கப்படும்.

3ஆவது அறிவிப்பு முக்கியமானது,

★ மீன்பிடித் தடைக்கால நிவாரணத் தொகை இதுவரை 5 ஆயிரம் ரூபாயாக இருந்தது. இனி 8 ஆயிரம் ரூபாயாக அது வழங்கப்படும்.

திராவிட முன்னேற்றக் கழக தேர்தல் அறிக்கையில், சொன்ன முக்கியமான அறிவிப்பு இது. இந்த நிவாரணத் தொகையை 1 இலட்சத்து 79 ஆயிரம் பேர் பெற இருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதோடு,

★ 60 வயதுக்கு மேற்பட்ட மீனவர்கள் 15 ஆயிரம் பேருக்கு மீன்பிடித் தடைக்காலத்தில் நிவாரணத் தொகை வழங்கப்படும்.

4ஆவது அறிவிப்பு

★ 1,000 நாட்டுப் படகு மீனவர்களுக்கு, 40 விழுக்காடு மானியத்தில் இயந்திரங்கள் வழங்கப்படும்.

5ஆவது அறிவிப்பு

★ தூத்துக்குடி, திருநெல்வேலி, குமரி மாவட்டங்களைச் சேர்ந்த பதிவு செய்யப்பட்ட நாட்டுப்படகு உரிமையாளர்களுக்குத் தற்போது மானிய விலையில் வழங்கப்பட்டு வரும் மண்ணெண்ணெய் அளவானது 3,400 லிட்டரிலிருந்து 3,700 லிட்டராக உயர்த்தி வழங்கப்படும்.

6ஆவது அறிவிப்பு

★ மானிய விலையில் வழங்கப்படும் டீசல் எண்ணெய் அளவை உயர்த்தி வழங்கவேண்டும் என்று மீனவர்கள் வைத்த கோரிக்கையை ஏற்றுக்கொண்டு, விசைப்படகுகளுக்கு 18 ஆயிரம் லிட்டரிலிருந்து 19 ஆயிரம் லிட்டராகவும், இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டுப்

படகுகளுக்கு 4 ஆயிரம் லிட்டரிலிருந்து 4 ஆயிரத்து 400 லிட்டராகவும் உயர்த்தி வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

7ஆவது அறிவிப்பு

★ தங்கச்சிமடம் மீன்பிடித் துறைமுகம் அமைப்பதற்கான ஆய்வுகள் மேற்கொள்ளும் பணி தொடங்கப்பட்டிருக்கிறது.

★ குந்துகால் மீன் இறங்குதளத்தை மேம்படுத்த ஆய்வுப் பணிகளையும் தொடங்கி இருக்கிறோம்.

★ பாம்பன் வடக்கு மீனவர் கிராமத்தில் தூண்டில் வளைவு அமைக்கும் பணிகள் தொடங்க உத்தரவிடப்பட்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

8ஆவது அறிவிப்பு

★ மீனவர் விபத்து காப்புறுதித் திட்டத்தின்கீழ் 205 குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்க உத்தரவிடப்பட்டிருக்கிறது.

★ மீன் பிடிக்கையில் காணாமல் போகும் மீனவர்களுக்குச் சுழல் நிதி 25 குடும்பங்களுக்கு வழங்கப்படுகிறது.

9ஆவது அறிவிப்பு

★ மீனவர்களுக்கான வீட்டுவசதித் திட்டத்தின் கீழ் அலகுத் தொகையானது 1 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாயிலிருந்து 2 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்படுகிறது.

நிறைவாக 10ஆவது அறிவிப்பு

★ பல மீனவ கிராமங்களில் கடல் அரிப்பைத் தடுக்கவும், படகுகளின் பாதுகாப்பை உறுதி செய்யவும் தூண்டில் வளைவு அமைக்கப்படவேண்டும் என்று ஒரு கோரிக்கை நீண்ட நாட்களாக இருந்து கொண்டிருக்கிறது.

தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தில் இருக்கின்ற ஒரு வழக்குக் காரணமாக இந்தப் பணிகளை உடனடியாக நிறைவேற்ற முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. இதற்கான கடலோர மேலாண்மைத் திட்டத்தை விரைவில் வகுத்து, உரிய ஒப்புதலைப் பெற்றுத் தூண்டில் வளைவுகள் தேவைப்படும் இடங்களில் எங்கெங்கு சாத்தியமோ அங்கெல்லாம் பணிகளை விரைவில் தொடங்குவோம்.

இதுவரை நான் சொன்ன அறிவிப்புகள் மூலமாக 2,77,347 மீனவர்கள் பயனடைவார்கள். இதற்காக, மொத்தம் ரூ.926.88 கோடி ஒதுக்கீடு செய்யப்போகிறோம். ஏறத்தாழ ரூ.1,000 கோடி ஒதுக்கீடு செய்யப்போகிறோம். மீனவர்களுக்கு அடுத்தடுத்து இது வழங்கப்பட இருக்கிறது. இதர கோரிக்கைகளும் படிப்படியாக நிறைவேற்றித் தரப்படும். ஏனென்றால், எல்லோரும் சொன்னதுபோல, இது என்னுடைய அரசு மட்டுமல்ல, இது உங்களுடைய அரசு. உங்களுக்காக நடைபெறக்கூடிய அரசு! இது நம்முடைய அரசு! எனவே நீங்கள் எதைப்பற்றியும் கவலைப்பட வேண்டிய அவசியமில்லை.

மாநிலத்திற்குள் உள்ள தேவைகளை நாங்கள் நிறைவேற்றுவோம். ஆனால், கடலுக்குள் செல்லும் மீனவர்கள் சந்திக்கின்ற பிரச்சினைகள், இன்னமும் பிரச்சினைகளாகவே இருக்கின்றன.

தமிழ்நாட்டைச் சேர்ந்த மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தொடர்ந்து தாக்கப்படுவதையும், கைது செய்யப்படுவதையும் இந்த மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது. அந்தக் கண்டிக்கிற உணர்வைக் கரவொலி மூலமாக நீங்கள் எழுப்பவேண்டும். தமிழ்நாட்டு மீனவர்களுக்கு இருக்கும் தீராத பிரச்சினையாக இது இருக்கிறது.

இலங்கையில் தமிழர்களோட உரிமைப் போராட்டம் எப்போது தொடங்கியதோ, அப்போதிருந்தே, தமிழ்நாட்டு மீனவர்களைத் தாக்குவதையும் இலங்கை அரசு வழக்கமாக வைத்துக் கொண்டிருக்கிறது. அதன் பிறகாவது தமிழ்நாட்டு மீனவர்கள் நிம்மதியாக மீன்பிடிக்க முடியுமா என்றால் அதுவும் இல்லை. அதே தாக்குதல், கைதுகள், சிறைச்சாலை சித்திரவதைகள் தொடரத்தான் செய்கின்றன. அதிலும் குறிப்பாக, 2014ஆம் ஆண்டு ஆட்சி மாற்றம் நடந்து. பா.ஜ.க. ஆட்சி அமைந்ததற்குப் பின்னால்தான் அடக்குமுறைகள் இன்னும் அதிகம் ஆகியிருக்கு. கைது, தாக்குதல், சிறைச்சாலைகள் என்பதைத் தாண்டி, மீனவர்களுடைய பல இலட்சம் ரூபாய் மதிப்பிலான படகுகள், அந்தப் படகுகளை இலங்கை அரசாங்கம் பறித்துச் செல்வது அதிகமாக இருக்கிறது.

மீனவர்களை விடுவித்தாலும் படகுகளைத் தருவது இல்லை. மீனவர்களுக்கு வாழ்வாதாரமே படகும், வலையும்தான். படகுகளை உடைப்பதும் - வலைகளை அறுப்பதும் இலங்கை அரசாங்கத்திற்கு வழக்கமாக இருக்கிறது. 'இத்தகையப் படகுகள் இலங்கை அரசாங்கத்தின்

உடமையாகும்' என்று அந்த நாட்டின் அதிபரே சொல்லும் அளவுக்கு நிலைமை இப்போது மோசமாகியிருக்கிறது.

2014 நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்பாக, பாம்பனில் பா.ஜ.க. சார்பில் 'கடல் தாமரை' என்ற போராட்டம் நடத்தப்பட்டது. நீங்கள் மறந்திருக்கமாட்டீர்கள்.அப்போது, மறைந்த சுஷ்மா சுவராஜ் அவர்கள் இங்கே வந்திருந்தார்கள். ஒன்றியத்தில், பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தால் கச்சத்தீவு மீட்கப்படும். மீனவர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணப்படும் என்று அவர் சொன்னார். இந்த 9 ஆண்டு காலத்தில் இது நடந்திருக்கிறதா?

இதே இராமநாதபுரத்தில்தான் 2014ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம், மரியாதைக்குரிய பிரதமர் நரேந்திரமோடி என்ன பேசினார், "தமிழ்நாட்டு மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் துன்புறுத்தப்படுவதும், கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்படுவதும் தினசரி நடந்து வருகிறது. இதற்கு காங்கிரஸ் அரசின் பலவீனம்தான் காரணம்" என்று சொன்னார். நாங்கள் கேட்கிறோம், பா.ஜ.க. ஆட்சியில் இருக்கும் இந்த ஒன்பது ஆண்டு காலத்தில் தமிழ்நாட்டு மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் தாக்கப்படவே இல்லையா?

மீனவர்கள் பாதுகாப்பாக வாழவேண்டும் என்றால், இந்தியாவில் வலுவான அரசு அமையவேண்டும். மீனவர்கள் வாழ்வு சிறக்க நான் ஒரு சபதம் எடுக்கின்றேன் என்று குமரிக்கு சென்று, 2014ஆம் ஆண்டு ஏப்ரலில் பேசினார் மோடி அவர்கள். சபதத்தைப் போட்டார். அந்த சபதத்தை நிறைவேற்றி விட்டாரா?

"நாங்கள் ஆட்சிக்கு வந்தால் ஒரு மீனவர் கூட உயிரிழக்க மாட்டார். தமிழ்நாட்டு மீனவர்களுக்கு இலங்கையால் பிரச்சினை. குஜராத் மீனவர்களுக்கு பாகிஸ்தானால் பிரச்சினை. இரண்டு மாநில மீனவர்களையும் இணைத்துப் பேசி கூட்டு நடவடிக்கை எடுப்போம்"- என்று சொன்னது யாரு? திரு. நரேந்திர மோடி அவர்கள்.

2014 முதல் தமிழ்நாட்டு மீனவர்கள் மேல் இலங்கைக் கடற்படைத் தாக்குதல் நடத்தவில்லையா?

2015ஆம் ஆண்டும் தாக்குதல் நடந்தது. 2016ஆம் ஆண்டும் தாக்குதல் தொடர்ந்தது. 2017ஆம் ஆண்டு தங்கச்சிமடம் மீனவர் பிரிட்டோ கொலை செய்யப்பட்டார். தொடர்ந்து, நம் மீனவர்கள் மீது தாக்குதல் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இன்றும் – இலங்கையைப் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்க இந்திய அரசு பல்வேறு உதவிகளை செய்கின்ற நிலையிலும் நம் மீனவர்கள் மீதான தாக்குதல் தொடருகிறது. ஒவ்வொரு முறையும் ஒன்றிய அரசுக்கு நான் கடிதம் எழுதிய பிறகுதான் அவர்கள் ஏதோ நடவடிக்கை எடுக்கிறார்கள்.

2020ஆம் ஆண்டு முதல் இன்று வரை பார்க்கிறோம், தமிழ்நாட்டு மீனவர்கள் மேல் இலங்கைக் கடற்படையினர் 48 தாக்குதல் சம்பவங்களை நடத்தியிருக்கிறார்கள். இதில் தமிழ்நாட்டு மீனவர்கள் 619 பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

83 மீன்பிடிப் படகுகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. இதில், 604 மீனவர்களையும், 16 படகுகளையும் இலங்கை அரசு விடுவித்திருக்கிறது. இந்த ஆண்டில் மட்டும் 74 மீனவர்களை இலங்கைக் கடற்படை கைது செய்திருக்கிறது. அதில் 59 பேர் விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால், 67 மீன்பிடிப் படகுகள் இலங்கையிடம்தான் இன்னமும் இருக்கின்றன.

பிரதமர் மோடி ஆட்சியில் தாக்குதல் தொடரவே செய்கிறது என்றால் என்ன அர்த்தம், மோடி ஆட்சி பலவீனமான ஆட்சி என்று அர்த்தம்?

இந்திய - இலங்கை அமைச்சர்கள் மீனவர்கள் பிரச்சினை பற்றி பேச்சுவார்த்தை நடத்தினார்கள்.

அப்போதைய வெளியுறவுத் துறை அமைச்சராக இருந்தவர் சுஷ்மா சுவராஜ் அவர்கள். இலங்கை வெளிநாட்டு அலுவல்கள் துறை அமைச்சர் மங்கள சமர வீரவும் சந்தித்துப் பேசினார்கள். மூன்று மாதங்களுக்கு ஒருமுறை மீன்பிடி மீதான கூட்டம் நடத்துவது என்று முடிவெடுக்கப்பட்டது. எந்த வகையிலும் உயிரிழப்பு ஏற்படக் கூடாது என்று அந்தக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது. இதை இரண்டு நாடுகளும் ஏற்றுக் கொண்டன. மறுநாள் இருநாட்டு மீனவர்களும் பேச்சுவார்த்தை நடத்துனார்கள். இதை ஏற்று இலங்கை செயல்படவில்லை.

"எல்லைக்குள் அத்துமீறக்கூடிய எவர் மீதும் துப்பாக்கிச்சூடு நடத்த இலங்கைக் கடற்படையினருக்கு அதிகாரம் உண்டு" என்று இலங்கை அமைச்சர் சொன்னார். தமிழ்நாட்டு மீனவர்களின் படகுகள் இலங்கைக்கு நாட்டுடைமை ஆக்கப்படும் என்று இலங்கை அரசு அறிவித்தது.

இராமநாதபுரம் மாவட்டத்தில் பசுமை தமிழ்நாடு இயக்கத்தின் 1 கோடி மரக்கன்றுகள் நடும் திட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 18.08.2023 அன்று, இராமநாதபுரம் ஆய்வு மாளிகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், இராமநாதபுரம் மாவட்டத்தில் பசுமைத் தமிழ்நாடு இயக்கத்தின்கீழ் ஒரு கோடி மரக்கன்றுகள் நடும் திட்டத்தினைப் பயனாளிகளுக்கு மரக்கன்றுகளை வழங்கித் தொடங்கி வைத்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கனவுத் திட்டமான பசுமைத் தமிழ்நாடு இயக்கம் மூலம் வனப் பரப்பினை அதிகரிக்கும் நோக்கத்தோடு இராமநாதபுரம் மாவட்டத்தில் ஒரு கோடி மரக்கன்றுகள் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுப் பல்வேறு துறைகளின் மூலம் மாவட்டம் முழுவதும் வளர்க்கப்பட்டு வருகின்றன. பெருநெல்லி, வாகை, மூங்கில், ஆலமரம், அரசமரம், அத்தி, விளாம்பழம், ஆவிமரம், கொடுக்கப்புளி, புங்கன், வன்னி, கொய்யா, பூவரசு போன்ற மரக்கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன.

இராமநாதபுரம் மாவட்டத்தில் ஒரு கோடி மரக்கன்றுகள் நடும் பணியினைத் தொடங்கி வைப்பதன் அடையாளமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பயனாளிகளுக்கு மரக்கன்றுகள் வழங்கி, இராமநாதபுரம் மாவட்ட பசுமைத் தமிழ்நாடு இயக்கத்தினைத் தொடங்கி வைத்தார். அடுத்த ஆண்டு ஜனவரி மாதத்திற்குள் இராமநாதபுரம் மாவட்டத்தில் ஒரு கோடி மரக்கன்றுகள் நடவு செய்யும் பணி நிறைவு செய்யப்படும்.

மோடி அரசு வந்ததும் தமிழ்நாட்டு மீனவர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்ட 122 படகுகளையும் நாட்டுடைமை ஆக்கியது இலங்கை அரசு. இப்போதும் கைது தொடருகிறது. படகுகளைத் தர மறுக்கிறார்கள். இதற்குப் பொறுப்பேற்க வேண்டியது யார்? பா.ஜ.க. அரசுதான். ஒவ்வொரு முறை மீனவர்கள் தாக்கப்படும்போதும் ஒன்றிய அரசின் கவனத்திற்கு நாம் எடுத்துக்காட்டுகிறோம். அவர்களும் இலங்கை அரசுக்குச் சொல்லுகிறார்கள். ஆனால், மறுபடியும் கைதும், தாக்குதலும் நடக்கும். இதுக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும். இதற்கு நிரந்தரமாக முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்றால், அதற்குக் கச்சத்தீவு மீட்கப்படவேண்டும். அதுதான் இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வாக இருக்க முடியும்.

மாண்புமிகு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் சென்னைக்கு வரும்போதெல்லாம் அவரிடம் இந்தக் கோரிக்கையை நான் வைத்திருக்கிறேன். உங்களிடம் கொடுத்திருக்கிறேன். ஏன் கடந்த வாரம் இலங்கை அதிபர் இந்தியாவுக்கு வந்தபோது கூட 19.07.2023 அன்று பிரதமருக்கு இது தொடர்பாக நான் கடிதம் எழுதியிருந்தேன். ஆனால், இங்கே இருக்கக்கூடிய சிலர் என்ன சொல்கிறார்கள், இதற்கெல்லாம் காரணம் தி.மு.க. ஆட்சிக்காலத்தில்தான் கச்சத்தீவு தாரை வார்க்கப்பட்டது என்று வரலாறு தெரியாமல் உளறிக் கொண்டிருக்கிறார்கள்.

1971ஆம் ஆண்டு இலங்கை அரசு கச்சத்தீவைச் சொந்தம் கொண்டாடியதுமே, அன்றைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள் கச்சத்தீவு நம்முடைய அரசுரிமை என்பதற்கான ஆதாரங்களைத் திரட்டுவதற்குச் சட்டப் பேராசிரியர் எஸ்.கிருஷ்ணசாமி அவர்களுக்கு உத்தரவிட்டார்.

கச்சத்தீவானது, இந்தியாவுக்குத்தான் சொந்தம் என்பதற்கான அறிக்கையை 1973 டிசம்பரில் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வெளியிட்டார். அதை மீறித்தான் 1974 ஜூன் 26ஆம் நாள் கச்சத்தீவு ஒப்பந்தம் இந்திய – இலங்கை பிரதமர்களால் போடப்பட்டது.

இது ஒப்பந்தம்தானே தவிர சட்டம் அல்ல! நல்லா கவனியுங்கள், அப்படி எந்தச் சட்டமும் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படவில்லை. அதைத் தி.மு.க.வும் ஆதரிக்கவில்லை. உடனடியாக, டெல்லி சென்று பிரதமர் இந்திரா காந்தி அவர்களை முதலமைச்சர் கலைஞர் அவர்கள் சந்தித்தார். கச்சத்தீவைத் தரக்கூடாது என்று வலியுறுத்தினார்.

கச்சத்தீவு நமக்குச் சொந்தம் என்பதற்கான ஆதாரங்களைப் பிரதமரிடம் கொடுத்தார். அன்றைய சட்ட அமைச்சர் செ.மாதவன் அவர்களும் முதலமைச்சரோடு உடன் சென்றார். சென்னை திரும்பியதும் இதே ஆதாரங்களை வைத்து மறுபடியும் தலைவர் கலைஞர் கடிதம் எழுதினார்.

கச்சத்தீவு என்பது இலங்கை அரசுக்கு உட்பட்ட தீவாக எந்தக் காலத்திலும் இருந்ததில்லை. டச்சு, போர்த்துகீசிய மன்னர் காலத்து வரைபடங்கள்கூட அப்படித்தான் சொல்கின்றன. 1954இல் இலங்கை என்று வெளியிட்ட வரைபடத்திலும் கச்சத்தீவு அவர்களுடையது என்று சொல்லப்படவில்லை. கச்சத்தீவுக்குச் செல்லும் பாதையிலும், கச்சத்தீவின் மேற்குப்பகுதிக் கரை ஓரத்திலும் சங்கு எடுக்கும் உரிமை இராமநாதபுரம் ராஜாவுக்கு தான் இருந்தது என்பதைக் காட்ட ஏராளமான ஆதாரங்கள் இருக்கின்றன. அங்குச் சங்கு எடுத்ததற்காக, அவர் எந்தக் காலத்திலும் இலங்கை அரசுக்குக் கப்பம்கூட கட்டியது கிடையாது. எனவே, கச்சத்தீவு இந்தியாவின் ஒரு பகுதிதான் என்பதை எந்த சர்வதேச நீதிமன்றத்திலும் நிரூபிக்க முடியும் என்பதற்கான அனைத்து ஆதாரங்களையும் திரட்டி இந்திய அரசுக்குக் கொடுத்ததே நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள்தான்.

ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சர் ஸ்வரன் சிங், வெளியுறவுத்துறைச் செயலாளர் கேவல் சிங் ஆகியோரைச் சந்தித்து இந்த ஆதாரங்களை முதலமைச்சர் கலைஞர் கொடுத்திருக்கிறார்.

"இலங்கைக்குக் கச்சத்தீவைத் தாரை வார்த்ததன் மூலமாக இந்தியாவுக்கு அல்ல, தமிழ்நாட்டுக்குத்தான் முதல் ஆபத்து" என்று இதை தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர் முரசொலி மாறன் அவர்கள் நாடாளுமன்றத்தில் முழங்கினார்.

தி.மு.க. உறுப்பினராக இருந்த இரா.செழியன் நாடாளுமன்றத்தில் இருந்து எதிர்ப்பைப் பதிவு செய்திருக்கிறார். வெளிநடப்புச் செய்திருக்கிறார். ஒப்பந்தம் கையெழுத்தான மூன்றாவது நாளே- அதாவது 29.06.1974 அன்று அனைத்துக் கட்சிக் கூட்டத்தை முதலமைச்சர் கலைஞர் அவர்கள் கூட்டினார்.

கச்சத்தீவு ஒப்பந்தத்தை இரத்து செய்தாக வேண்டும் என்று அந்தக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பி வைக்கப்பட்டது. அனைத்துக் கட்சிகளும் ஆதரித்த அந்தக் கூட்டத்திலிருந்து வெளிநடப்புச் செய்த ஒரே கட்சி அ.தி.மு.க. தான்.

அன்று முதல் இன்று வரை ஒரே ஒரு விஷயத்தை தெளிவாகச் செய்கிறார்கள். அது என்னவென்றால், தமிழ்நாட்டுக்குத் துரோகம் செய்வது!

21.08.1974 அன்று தமிழ்நாடு சட்டமன்றத்தில் கச்சத்தீவு ஒப்பந்தத்தை எதிர்த்துச் சிறப்புத் தீர்மானம் கொண்டு வந்தார் தலைவர் கலைஞர். கச்சத்தீவு தாரை வார்க்கப்பட்டதற்கு எதிராகக் கண்டனக் கூட்டங்கள் தமிழ்நாடு முழுவதும் தி.மு.க. சார்பில் நடத்தப்பட்டது. ஜூலை 14ஆம் தேதி தொடங்கி 45 முக்கிய நகரங்களில் இந்தக் கூட்டங்களை நடத்துவதாக தி.மு.க. தலைமைக் கழகம் அறிவித்தது.

தஞ்சையில் கலைஞர், சென்னையில் பேராசிரியர், அப்போது திருப்பெரும்புதூரில் இந்த அடியேன்தான் பேசினேன். இந்த வரலாறு எதுவும் தெரியாமல் மாநில அரசான தி.மு.க. இந்தியாவோட ஒரு பகுதியைத் தாரை வார்த்தது என்று அடிப்படை அறிவும் இல்லாமல், குறைந்தபட்ச நேர்மையும் இல்லாமல், சிலர் பேசி வருவது வெட்கக்கேடானது! கண்டிக்கத்தக்கது!

கச்சத்தீவுக்கு அனுமதி மறுக்கப்பட்டது நமது மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளை மறுப்பதாகும். எனவே இந்திய அரசு, இலங்கை அரசுடன் போட்ட ஒப்பந்தத்தை ரத்து செய்வதற்கான முயற்சியில் இறங்க வேண்டும்.

ஒப்பந்தத்தை மறுபரிசீலனை செய்வதற்கு உரிய தூதரக நடவடிக்கைகளை ஒன்றிய அரசு இப்போதாவது தொடங்கிட வேண்டும். பா.ஜ.க. அரசு இந்த முயற்சியில் இறங்கவில்லை என்றால், அடுத்து நடைபெறும் நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பிறகு அமைய இருக்கும் புதிய அரசு இதனை நிறைவேற்றும் வகையில் நமது அரசியல் நடவடிக்கைகளை நாம் மேற்கொள்வோம்.

கச்சத்தீவை மீட்டெடுத்து, தமிழ்நாட்டு மீனவர்களின் மீன்பிடி உரிமையைக் காப்போம்! மீனவர்களின் நலனைக் காப்பதாக என்றைக்கும் திராவிட முன்னேற்றக் கழகம் நம்முடைய திராவிட மாடல் அரசு இருக்கும். எனவே, இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அப்படித்தான் செயல்படுவான் என்ற உறுதியைக் கூறிக் கொண்டு, அதற்கு மீனவ சமுதாயம் எப்போதும்போல எங்களுக்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என்று என்னுடைய வேண்டுகோளை இந்த நேரத்தில் எடுத்து வைத்து விடை பெறுகிறேன்.

ரூ.4,276.44 கோடி மதிப்பீட்டில் பேரூரில் கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 21.08.2023 அன்று, தலைமைச் செயலகத்தில், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் சார்பில் ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு முகமை (JICA) நிதியுதவியுடன் செங்கல்பட்டு மாவட்டம், கிழக்குக் கடற்கரைச் சாலையில் உள்ள பேரூரில், ரூ.4,276.44 கோடி மதிப்பீட்டில், நாளொன்றுக்கு 400 மில்லியன் லிட்டர் உற்பத்தித் திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையம் அமைக்கும் பணிக்கு அடிக்கல் நாட்டினார்.

மீஞ்சூரில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட கடல் நீரைக் குடிநீராக்கும் நிலையம்

வளர்ந்து வரும் சென்னை மாநகரின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில், கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையங்களை வடிவமைத்து, நிறுவி, இயக்கி, திருப்பித் தரும் அடிப்படையில் மீஞ்சூரில் நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையம் அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டு அன்றைய ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சரான மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களால் 25.02.2007 அன்று அடிக்கல் நாட்டப்பட்டது. இந்நிலையத்தின் கட்டுமானப் பணிகள் அனைத்தும்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
அடிக்கல் நாட்டினார் – 21.08.2023

நிர்ணயிக்கப்பட்ட கால அளவிற்குள் முடிக்கப்பெற்று, அன்றைய முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 31.07.2010 அன்று திறந்து வைக்கப்பட்டது. இந்நிலையத்திலிருந்து கிடைக்கக்கூடிய குடிநீர் மூலம், வடசென்னை பகுதிகளான மணலி, மாதவரம், எண்ணூர், கத்திவாக்கம், திருவொற்றியூர், தண்டையார்பேட்டை, வியாசர்பாடி பகுதிகளில் வசிக்கும் சுமார் 10 இலட்சம் மக்கள் பயன்பெற்று வருகின்றார்கள்.

நெம்மேலியில் அமைக்கப்பட்டுள்ள கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையம்

இதனைத் தொடர்ந்து, நெம்மேலியில் நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் உற்பத்தித் திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையம் அமைப்பதற்கான திட்டப் பணிகளை அன்றைய துணை முதலமைச்சரான மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களால் 23.02.2010 அன்று அடிக்கல் நாட்டப்பட்டது.

தற்போது சீரான முறையில் இயங்கிவரும் இந்நிலையத்தின் மூலம், தென் சென்னைப் பகுதிகளாகிய சோழிங்கநல்லூர், நீலாங்கரை, ஈஞ்சம்பாக்கம், காரப்பாக்கம், செம்மஞ்சேரி,

துரைப்பாக்கம், பெருங்குடி, கொட்டிவாக்கம், பாலவாக்கம், திருவான்மியூர், வேளச்சேரி, தரமணி, பள்ளிப்பட்டு, அடையாறு, பெசன்ட் நகர், நந்தனம், எம்.ஆர்.சி. நகர், இராஜா அண்ணாமலைபுரம், மயிலாப்பூர் ஆகிய பகுதிகளில் வசிக்கும் சுமார் 9 இலட்சம் மக்கள் பயன்பெற்று வருகிறார்கள்.

மேலும், நெம்மேலியில் கூடுதலாக நாளொன்றுக்கு 150 மில்லியன் லிட்டர் உற்பத்தித் திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையம் அமைக்க திட்டமிடப்பட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. விரைவில் இப்பணிகள் அனைத்தும் முடிக்கப்பட்டுப் பொதுமக்கள் பயன்பாட்டுக்குக் கொண்டு வரப்படும். இதன்மூலம், உள்ளகரம் – புழுதிவாக்கம், வேளச்சேரி, மடிப்பாக்கம், சோழிங்கநல்லூர், ஆலந்தூர், புனித தோமையார் மலை, மேடவாக்கம், கோவிலம்பாக்கம், நன்மங்கலம், கீழ்கட்டளை, மூவரசம்பேட்டை, பல்லாவரம் ஆகிய பகுதிகளில் உள்ள 9 இலட்சம் மக்கள் பயனடைவார்கள்.

பேரூரில் நாளொன்றுக்கு 400 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையம் அமைப்பதற்கு அடிக்கல் நாட்டுதல்

இந்நிலையில், பெருநகரச் சென்னை மாநகராட்சியின் வளர்ச்சியினைத் தொடர்ந்து சென்னைக்கு அருகாமையில் பல்வேறு தொழில் நிறுவனங்கள் செயல்பட்டு வருவதாலும், பெருகிவரும் வளர்ச்சிக்கேற்ப எதிர்காலத்தில் பொதுமக்களுக்குப் போதுமான அளவில் குடிநீர் வழங்கும் பொருட்டும், பேரூரில் நாளொன்றுக்கு 400 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையம் அமைத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில், செங்கல்பட்டு மாவட்டம், கிழக்குக் கடற்கரைச் சாலையில் உள்ள பேரூரில் நாளொன்றுக்கு 400 மில்லியன் லிட்டர் உற்பத்தித் திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார். இந்நிலையம், தென்கிழக்கு ஆசியாவிலேயே மிகப்பெரிய நிலையமாக அமையவுள்ளது. இந்நிலையம் அமைக்கும் பணி டிசம்பர் 2026க்குள் முடிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்படும்.

இந்நிலையத்தில், கடல்நீரைக் குடிநீராக்க 1,150 மீட்டர் நீளத்திற்குக் கடலுக்குள் HDPE குழாய்கள் பதிக்கப்படும். மேலும், இந்நிலையத்தில் அமைக்கப்படவுள்ள நீர் கரைந்த காற்று அலகுகள் (Dissolved Air Floatation), இரட்டை ஈர்ப்பு மணல் வடிகட்டி அலகுகள் (Dual Media Filter) மற்ற வழக்கமான நிலையங்களை விட நவீன முறையில் வடிவமைக்கப்பட்டுள்ளன. இந்த அலகுகள் மூலம் கடலில் உள்ள கசடுகள் (மிதப்பவை, துகள்கள்) அகற்றிய பின்னர் கடல்நீரைக் குடிநீராக்கும் திறனை நிலையாகப் பெறும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும், இந்நிலையத்திலிருந்து பேரூர் வரை 59 கி.மீ. நீளத்திற்குக் குடிநீர்க் குழாய்கள் பதிக்கப்படும்.

இந்த நிலையத்தின் மூலம், பெருநகரச் சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகள், தாம்பரம் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகள், பெருநகரச் சென்னை மாநகராட்சிக்கு அருகாமையில் உள்ள 20 ஊராட்சிப் பகுதிகளில் உள்ள 2,2.67 இலட்சம் மக்கள் பயனடைவார்கள்..

வேலூரில்
ரூ.150 கோடி மதிப்பீட்டில்
பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 22.08.2023 அன்று, தலைமைச் செயலகத்தில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் வேலூர் மாவட்டம், பேர்ணாம்பட்டு அரசு மருத்துவமனையில் ரூ.7.58 கோடிச் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய புறநோயாளிகள் பிரிவுக் கட்டடம், தேனி, திருவண்ணாமலை ஆகிய இடங்களில் ரூ.13.50 கோடிச் செலவில் கட்டப்பட்டுள்ள தலா 50 படுக்கை வசதிகளுடன் ஒருங்கிணைந்த ஆயுஷ் மருத்துவமனைகள் ஆகியவற்றைத் திறந்து வைத்தார். மேலும், வேலூர் அரசு பென்ட்லேண்ட் மருத்துவமனை வளாகத்தில் ரூ.150 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனைக்கு அடிக்கல் நாட்டினார்.

தமிழ்நாட்டு மக்களுக்கு உயர்தர மருத்துவ வசதிகள் கிடைத்திட, புதிய அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்களைக் கட்டுதல், மருத்துவமனைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், மருத்துவக் கருவிகளை நிறுவுதல், அனைவருக்கும் நலவாழ்வு என்கிற உயரிய நோக்கினைச் செயல்படுத்தும் வகையில் “மக்களைத் தேடி மருத்துவம்” சாலை விபத்துக்களில் உயிரிழப்புகளைத் தடுக்கும் வகையில் “இன்னுயிர் காப்போம்-நம்மைக் காக்கும்-48” போன்ற பல்வேறு திட்டங்களை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை வாயிலாகத் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

மாண்புமிகு
தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்
அடிக்கல் நாட்டினார் – 22.08.2023

அந்த வகையில், வேலூர் மாவட்டம், பேர்ணாம்பட்டு அரசு மருத்துவமனையில் ரூ.7.58 கோடிச் செலவில் கட்டப்பட்டுள்ள புறநோயாளிகள் பிரிவுக் கட்டடத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார். இக்கட்டடத்தில், பொது வெளிநோயாளிகள் பிரிவு, குழந்தைகள் வெளிநோயாளிகள் பிரிவு, கண் வெளிநோயாளிகள் பிரிவு, அறுவை அரங்கம், அறுவை சிகிச்சைக்குப் பின் கவனிப்புப் பிரிவு, இரத்த சேமிப்பு வங்கி, பிரசவப் பிரிவு, பச்சிளங் குழந்தைகள் கவனிப்புப் பிரிவு,

ஆண்கள் உள்நோயாளிகள் பிரிவு, பெண்கள் உள்நோயாளிகள் பிரிவு, அவசர சிகிச்சைப் பிரிவு ஆகிய பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன. இம்மருத்துவமனையின் வாயிலாக தினமும் சுமார் 1,000 புறநோயாளிகள் பயன்பெறுவார்கள்.

தமிழ்நாடு மாநில ஆயுஷ் குழுமத்தின் 2016-2017ஆம் ஆண்டிற்கான மாநில ஆண்டு செயல்திட்டத்தின்கீழ், தேனி, திருவண்ணாமலை மாவட்டங்களில் 50 படுக்கை வசதியுடன் கூடிய ஒருங்கிணைந்த ஆயுஷ் மருத்துவமனைகள் அமைக்க தேசிய ஆயுஷ் திட்ட இயக்ககத்தால் அனுமதி வழங்கப்பட்டு, அதற்கான நிருவாக ஒப்புதல் தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டது.

அதன்படி, தேனி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் 35,198 சதுர அடி பரப்பில், தரை, இரண்டு தளங்களுடன் ரூ.6.75 கோடிச் செலவிலும், திருவண்ணாமலை, செங்கம் சாலை, பழைய அரசு மருத்துவமனை வளாகத்தில் 29,460 சதுர அடிப் பரப்பில், தரை, மூன்று தளங்களுடன் ரூ.6.75 கோடிச் செலவிலும் கட்டப்பட்டுள்ள 50 படுக்கை வசதிகளுடன் கூடிய ஒருங்கிணைந்த ஆயுஷ் மருத்துவமனைக் கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இந்த ஒருங்கிணைந்த ஆயுஷ் மருத்துவமனைகளில், இந்திய மருத்துவ முறைகளில் சித்தா, யோகா, இயற்கை மருத்துவம் ஆகிய முறைகளில் சிகிச்சைகள் வழங்கப்படும்.

மேலும், வேலூர் அரசு பென்ட்லேண்ட் மருத்துவமனை வளாகத்தில் ரூ.150 கோடி மதிப்பீட்டில் தரை, 7 தளங்களுடன் கட்டப்படவுள்ள பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனை கட்டும் பணிக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

அதனைத் தொடர்ந்து, மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்ககம், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககம், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறை ஆகியவற்றில் பணிபுரிந்து பணிக் காலத்தில் உயிரிழந்த 43 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு, கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர், தட்டச்சர் பணியிடத்திற்கான பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 6 நபர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

மாணவர்களாகிய நீங்கள் நல்லிணக்கத்தின் பண்பைத் தொடர்ந்து எடுத்துச் செல்லுங்கள்

முத்தமிழறிஞர் **கலைஞர்** அவர்களின் நூற்றாண்டு விழா மற்றும் அனைத்துக் கல்லூரி மாணவ, மாணவியருக்கான பேச்சுப் போட்டி பரிசளிப்பு விழா - மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், மாநில அளவில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்குப் பரிசுகள் வழங்கி ஆற்றிய உரை - 23.08.2023

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 23.08.2023 அன்று, சென்னை, கோயம்பேடு, தூய தாமஸ் கல்லூரி அரங்கத்தில் தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத்தின் சார்பில் நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா, அனைத்துக் கல்லூரி மாணவ, மாணவியருக்கான பேச்சுப் போட்டி பரிசளிப்பு விழாவில், மாநில அளவில் வெற்றி பெற்ற 6 மாணவ, மாணவியர்களுக்குப் பரிசுத் தொகைக்கான காசோலைகள், பதக்கங்கள், சான்றிதழ்களை வழங்கி, பாராட்டினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் "தலை நிமிரும் தமிழகம்" என்ற தமிழகத்தின் விடியலுக்கான முழக்கத்தைக் கல்லூரி மாணவர்களிடம் கொண்டு சேர்க்கும் விதமாகத் தமிழ்நாடு மாநிலச் சிறுபான்மையினர் ஆணையம், தமிழகத்திலுள்ள அரசு அங்கீகாரம் பெற்ற அனைத்துக் கல்லூரிகளின் மாணவ, மாணவியருக்காக தமிழிலும், ஆங்கிலத்திலும் பேச்சுப்போட்டிகளை நடத்தியது.

கல்லூரிகளில் பயிற்றுவிக்கப்படும் பாடத் திட்டங்களுக்கு அப்பால், மாணவர்கள் அறிந்தும், உணர்ந்தும், தெளிய வேண்டிய உன்னத விழுமியங்களை மாணவர்களிடம் கொண்டு சேர்க்கவும், தமிழ்ச் சமூகத்தின் தனித்துவமான பண்பாடுகளை, பெருமைகளை இலக்கியங்களை, கலைகளை, வரலாற்றை மாணவர்கள் அறிந்துகொள்ளும் விதமாகவும், தமிழகத்தின் 38 மாவட்டங்களில் நடத்தப்பட்ட இப்பேச்சுப் போட்டிகளில் 4,000 மாணவ, மாணவியர் பங்கேற்றனர்.

ஒவ்வொரு மாவட்டத்திலும், தமிழிலும், ஆங்கிலத்திலும் தனித்தனியாகப் பேச்சுப்

போட்டிகள் நடத்தப்பட்டு, முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவ, மாணவியருக்குத் தலா ரூ.20,000, ரூ.10,000, ரூ.5,000 ஆகிய பரிசுகளும், மாநில அளவில் தமிழிலும், ஆங்கிலத்திலும் தனித்தனியாகப் பேச்சுப் போட்டிகள் நடத்தப்பட்டு முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவ, மாணவியருக்குத் தலா ரூ.1,00,000, ரூ.50,000, ரூ.25,000 ஆகிய பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றன. மாவட்ட அளவில் 228 மாணவ, மாணவியர்களும், மாநில அளவில் 6 மாணவ, மாணவியர்களும் இப்பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்றுப் பரிசுகளைப் பெறுகிறார்கள்.

சென்னைக் கோயம்பேட்டில் உள்ள தூய தாமஸ் கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா, அனைத்துக் கல்லூரி மாணவ, மாணவியருக்கான பேச்சுப் போட்டி பரிசளிப்பு விழாவில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மாநில அளவில் வெற்றி பெற்ற 6 மாணவ, மாணவியருக்குப் பரிசுத்தொகைக்கான காசோலைகள், பதக்கங்கள், சான்றிதழ்களை வழங்கி, பாராட்டினார்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை:

என் கண்ணின்மணிகளாம் மாணவச் செல்வங்களே,

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

நேரத்தின் அருமையைக் கருதி இங்கே குறிப்பிட்ட சிலருக்கு மாத்திரம்தான் நினைவுப் பரிசும், சான்றிதழும் வழங்கப்பட்டிருக்கின்றன. மீதம் இருக்கக்கூடிய போட்டியில் வெற்றி பெற்றிருக்கக்கூடிய சகோதர, சகோதரிகளுக்கு பின்னால் நம்முடைய அமைச்சர் அவர்களும், நிருவாகிகளும் இங்கே வழங்க இருக்கிறார்கள். ஆகவே, தயவுகூர்ந்து எல்லாம் பொருத்தருளுமாறு உங்களை நான் அன்போடு கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

எப்போதும் என்னைச் சுறுசுறுப்பாக வைத்திருக்கக்கூடிய, ஊக்கம் தரக்கூடிய வகையில் என்னை இயக்கிக் கொண்டிருக்கக் கூடியவர்கள் யார் என்று கேட்டால், மாணவர்களும், இளைஞர்களும்தான். எனவே, அப்படிப்பட்ட மாணவ, மாணவியர்கள் நிரம்பியிருக்கக்கூடிய இந்த நிகழ்ச்சியில், உங்களிடையே இருப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

"தலை நிமிரும் தமிழகம்" என்ற என்னுடைய தமிழ்நாட்டின் விடியலுக்கான முழக்கத்தை, கல்லூரி மாணவர்களிடம் கொண்டுபோய் சேர்க்கவேண்டும். அந்த அடிப்படையில், தமிழ்நாடு மாநிலச் சிறுபான்மையினர் ஆணையத்தைச் சார்ந்த சகோதரர்கள், நிருவாகிகள் இந்தப் பேச்சுப் போட்டிகளை வெற்றிகரமாக நடத்தி, அதில் மாநில அளவில் வெற்றி பெற்றிருக்கக்கூடிய மாணவர்களுக்குப் பரிசுகளை வழங்கியிருக்கிறோம்.

ஆனால், என்னைக் கேட்டால், இந்த பேச்சுப் போட்டிகளின் மூலமாக அடையாளம் காணப்பட்டுள்ள இளம் பேச்சாளர்களைத்தான், தமிழுக்கும், தமிழ்நாட்டிற்கும் கிடைத்த பெரும் பரிசு என்றுதான் நான் சொல்லுவேன்!

ஏனென்றால், பேச்சுக்கலை என்பது எல்லோருக்கும் எளிய வகையில் வந்துவிட முடியாது. மேடைகளில் பேசுபவர்கள் தங்களுக்கெனத் தனி பாணியை உருவாக்கிக் கொண்டு, அதற்கென ரசிகர்களை ஈர்த்தவர்கள் எத்தனையோ பேர், நம் தமிழ் மண்ணில் இருந்தார்கள்; இன்றைக்கும் இருக்கிறார்கள்.

பேச்சாற்றலால் நம் தமிழ் நிலம் பண்படுத்தப்பட்ட வரலாற்றை நீங்கள் எல்லோரும் அறிந்துகொள்ள வேண்டும். அதனை எல்லோர்க்கும் எடுத்துச் சொல்ல வேண்டும். டி.எம்.நாயர் அவர்களின் 'ஸ்பர்டாங்க்' உரைபோல், உங்களது உரைகள் வருங்காலங்களில் பலருக்கும் கையேடாக இருந்துவிட வேண்டும்.

திராவிட இயக்கம் என்பதே பேசிப் பேசி வளர்ந்த இயக்கம்; திராவிட இயக்கம் என்பதே எழுதி எழுதி வளர்ந்திருக்கக்கூடிய இயக்கம் என்பது எல்லோருக்கும் தெரியும். திராவிட முன்னேற்றக் கழகத்தின் கூட்டங்களை 'மாலை நேரக் கல்லூரிகள்' என்று அழைப்பதுண்டு. அந்தளவிற்கு அறிவாற்றல், சொல்லாற்றல் அதில் அடங்கியிருக்கும்.

பகுத்தறிவுக் கருத்துக்களைப் பட்டெனச் சொல்லும் நம்முடைய ஈரோட்டுச் சிங்கம் பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்கள், அவர் இந்தச் சமுதாயத்திற்காக என்னென்ன கருத்துக்களை எல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறார் என்பது இதன் மூலமாக நாம் அறிந்து கொண்டாகவேண்டும். அதேபோல், உலக அரசியலையெல்லாம் தன் மயக்கும் மொழியாலேயே சொல்லி அறிவூட்டியவர் யார் என்றால், பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள். அடுக்குமொழியிலும் கனல் தெறிக்கக்கூடிய வசனங்கள் பேசித் தமிழர்களுக்கு

மாணவர்களிடம் நான் வேண்டுகோளாக வைப்பதெல்லாம், நம்முடைய தமிழ்நாட்டுக்கு என்று தனி குணம் உண்டு. சமத்துவம் – சகோதரத்துவம் – சமூகநீதி – சுயமரியாதை – பகுத்தறிவு என்று பண்பட்ட பண்பாட்டைக் கொண்ட நம் தமிழ் மண்ணின் உணர்வை நீங்கள் அனைவரும் பெற வேண்டும். ஒற்றுமையோடு வேற்றுமை இல்லாத தமிழ்நாட்டை நோக்கி நமது சமூகத்தை வழிநடத்த வேண்டும்.

உணர்ச்சியை ஊட்டியவர் யார் என்றால், இன்றைக்கு நூற்றாண்டு விழா காணக்கூடிய நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள். இப்படி அவர்களை எல்லாம் வழிகாட்டிகளாகக் கொண்டு நம்முடைய ஆற்றலை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

“அஞ்சாநெஞ்சன்” பட்டுக்கோட்டை அழகிரி – “டார்ப்பீடோ” ஏ.பி.ஜனார்த்தனம் – “சிந்தனைச் சிற்பி” சி.பி.சிற்றரசு – “நடமாடும் பல்கலைக்கழகம்” நாவலர் நெடுஞ்செழியன் – “சொல்லின் செல்வர்” ஈ.வெ.கி.சம்பத் – நம்முடைய இனமான பேராசிரியர் அன்பழகன் அவர்கள். இவர்களெல்லாம் இனமான உணர்வூட்டிய பேச்சாளர்கள் பட்டியலில் இடம் பெற்றவர்கள். அது நீளமாக இருந்து கொண்டே இருக்கும்.

இப்படி வரலாறு போற்றும் பேச்சாளர்களை உருவாக்கித் தரும் களமாக, இந்தப் போட்டியை மிகச் சிறப்பாக நடத்தியிருக்கிறார்கள். அமைச்சரவையில் இடம்பெற்றிருக்கக்கூடிய நம்முடைய மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் அவர்கள், அந்தப் பணியைச் சிறப்போடு செய்து காட்டியிருக்கிறார்கள். அதேபோல, நம்முடைய மதிப்பிற்குரிய தமிழ்நாடு மாநிலச் சிறுபான்மையினர் ஆணையத் தலைவர் என்னுடைய பெருமதிப்பிற்குரிய பீட்டர் அல்போன்ஸ் உள்ளிட்ட அனைவருக்கும் இந்த நேரத்தில் என்னுடைய பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இப்படி இளம் பேச்சாளர்களைக் கண்டறிந்து, ஊக்குவிக்கும் அந்தப் பணியை நம்முடைய பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் செய்திருக்கிறார்கள். நான் நினைத்துப் பார்க்கிறேன், இப்போது மட்டும் தலைவர் கலைஞர் அவர்கள் இருந்து இந்தக் காட்சியைப் பார்த்திருந்தால், அவரைவிட மகிழ்ச்சி அடையக்கூடியவர்கள் யாரும் இருக்க முடியாது. நாமெல்லாம், ஆற்றலோடு அல்ல, ஏதோ ஓரளவுக்குப் பேசக்கூடிய ஒரு வாய்ப்பு எனக்கு வந்திருக்கிறது என்றால், அதற்கெல்லாம் காரணம் எத்தனையோ பேர் இருக்கலாம். அதில் முக்கிய காரணமாக இருந்தவர் யார் என்று கேட்டால், நம்முடைய பீட்டர் அல்போன்ஸ் தான். சட்டமன்றத்தில், அதேபோல மக்கள் மன்றத்தில் பேசக்கூடிய பேச்சுக்களை எல்லாம்நான்கேட்பதுண்டு.அவரேபலமுறைஎன்னிடத்தில் சட்டமன்றத்தில் சொல்லியிருக்கிறார். அமைதியாக உட்கார்ந்துகொண்டு இருக்கக்கூடாது. எதிர்க்கட்சியாக இருக்கும்போதும் சரி, ஆளும்கட்சியாக இருக்கும்போதும் சரி, சட்டமன்றத்தில் அப்போதைக்கப்போது எழுந்து சில கேள்வியைக் கேட்கவேண்டும். எனக்கு இப்படிப்பட்ட பல அறிவுரைகளை ஆலோசனைகளை எல்லாம் வழங்கியவர் நம்முடைய பீட்டர் அல்போன்ஸ் அவர்கள். அதையெல்லாம் இப்போது நான் நினைத்துப் பார்க்கிறேன்.

எனவே, தலைவர் கலைஞருடைய இதயத்தில் ஒரு சிறந்த இடத்தைப் பெற்றவராக விளங்கியவர் நம்முடைய பீட்டர் அல்போன்ஸ் அவர்கள். அதே அன்போடும், அதே நட்புணர்வோடும் இன்றைக்கு அவருடைய மகனாக இருக்கக்கூடிய இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினிடத்திலும் அந்த அன்பைப் பெற்று வைத்திருக்கிறார் என்பதை எண்ணிப்பார்த்து நான் உள்ளபடியே மகிழ்ச்சி அடைகிறேன்.

அதேபோல, மாண்புமிகு செஞ்சி மஸ்தான் அவர்களைப் பொறுத்தவரையில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சராக அவர் ஆற்றி வரும் பணிகளையெல்லாம் நீங்கள் நன்கு அறிவீர்கள். நமது திராவிட முன்னேற்றக் கழக அரசு எப்போது ஆட்சிப் பொறுப்பேற்கிறதோ, அப்போதெல்லாம் சிறுபான்மையினர் நலனுக்காகப் போராடக்கூடிய, வாதாடக்கூடிய, சாதனைகளைத் தீட்டக்கூடிய பல்வேறு பணிகளை நிறைவேற்றித் தந்திருக்கிறது என்பதெல்லாம் ஒரு மிகப் பெரிய வரலாறு.

2007ஆம் ஆண்டு பிற்படுத்தப்பட்ட முஸ்லீம்களுக்கு 3.5 விழுக்காடு தனி இட ஒதுக்கீடு வழங்க சட்டம் இயற்றிய ஆட்சிதான் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி.

"உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம்" 2009ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. இந்த நல வாரியத்தில் இதுவரை 15,327 பேர் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

பள்ளி மற்றும் கல்லூரிகளில் படிக்கும் முஸ்லிம் பெண்களுக்கான விடுதிகள் தி.மு.க. ஆட்சிக் காலத்தில்தான் முதல்முறையாகத் துவங்கப்பட்டது.

இந்த வரலாற்றின் நீட்சியாக நாம் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, செய்து வரும் சில திட்டங்களை மட்டும் இங்கே நான் ஒன்றிரண்டு மட்டும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

சிறுபான்மையினர் விடுதி மாணவ, மாணவியருக்கு, புத்த பூர்ணிமா, மஹாவீர் ஜெயந்தி, பக்ரித், ரம்ஜான், கிறிஸ்துமஸ் போன்ற சிறுபான்மையினர் பண்டிகைகளுக்குச் சிறப்பு உணவு வழங்க ஆணையிட்டுள்ளோம்.

14 சிறுபான்மையினர் நலக் கல்லூரி விடுதிகளில், ரூ.14 இலட்சம் செலவில் "செம்மொழி நூலகங்கள்" ஏற்படுத்தப்பட்டுள்ளதோடு, ரூ.5.90 இலட்சம் செலவில் உடற்பயிற்சிக் கருவிகள், விளையாட்டுக் கருவிகள் வழங்க ஆணையிடப்பட்டு கருவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

சிறுபான்மையினர் நல விடுதிகளில் மாணவ, மாணவியர் சேர்க்கைக்கான பெற்றோரது ஆண்டு வருமான வரம்பு 2021-2022ஆம் ஆண்டு முதல் ரூ.1 இலட்சத்திலிருந்து ரூ.2 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

கிராமப்புரச் சிறுபான்மையின மாணவியர் இடைநிற்றல் இன்றித் தொடர்ந்து கல்வி பயில, 3 முதல் 6ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவியருக்கு ரூ.3.60 கோடி செலவில் ஊக்கத்தொகை வழங்கப்பட்டு வருகிறது.

2023ஆம் ஆண்டிற்கான ஹஜ் புனிதப் பயணம் மேற்கொண்ட 3,987 பயனாளிகளுக்கு ரூ.10 கோடி நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது.

இப்படிச் சிறுபான்மையினர் நலன் காக்கும் ஏராளமான திட்டங்களை நம்முடைய அரசின் மூலமாக நாம் தொடர்ந்து செய்து வருகிறோம். சிறுபான்மையினர் உரிமைகளைக் காக்க மக்கள் மன்றத்திலும் திராவிட முன்னேற்றக் கழகம் தொடர்ந்து செயலாற்றிடும் என்ற உறுதியை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொண்டு, அதேநேரத்தில் மாணவர்களிடம் நான் வேண்டுகோளாக வைப்பதெல்லாம், நம்முடைய தமிழ்நாட்டுக்கு என்று தனி குணம் உண்டு. சமத்துவம் – சகோதரத்துவம் – சமூகநீதி – சுயமரியாதை – பகுத்தறிவு என்று பண்பட்ட பண்பாட்டைக் கொண்ட நம் தமிழ் மண்ணின் உணர்வை நீங்கள் அனைவரும் பெற வேண்டும். ஒற்றுமையோடு வேற்றுமை இல்லாத தமிழ்நாட்டை நோக்கி நமது சமூகத்தை வழிநடத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மனிதநேயத்தைப் போற்றுங்கள். உங்கள் எண்ணங்களை அழுக்காக்கும் கருத்தியல்களைப் புறந்தள்ளுங்கள். நல்லிணக்கத்தின் பண்பை மாணவர்களாகிய நீங்கள் தொடர்ந்து எடுத்துச் செல்லுங்கள் என்று இந்த நேரத்தில் உங்கள் அனைவரையும் கேட்டு, இந்தச் சிறப்பான வாய்ப்பைப் பெற்று உங்கள் அனைவரையும் சந்திக்கின்ற நல்ல சூழல் ஏற்படுத்தித்தந்த நம்முடைய அன்பிற்குரிய அமைச்சர் திரு. செஞ்சி மஸ்தான் அவர்களுக்கும், ஆணையத்தினுடைய தலைவர் என்னுடைய அன்பிற்கினிய திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்களுக்கும், நிருவாகிகள் அத்தனை பேருக்கும் என்னுடைய இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துப் பரிசு பெற்றிருக்கக்கூடிய மாணவச் செல்வங்களை மனமார வாழ்த்தி, பாராட்டி விடைபெறுகிறேன்.

1 முதல் 5ஆம் வகுப்புவரை பயிலும் 17 இலட்சம் அரசுப்பள்ளி மாணவர்கள் பயன்பெறும் வகையில்

“முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்”

விரிவாக்கம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
தொடங்கி வைத்து ஆற்றிய உரை - 25.08.2023

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 25.08.2023 அன்று, இந்தியாவிலேயே முதல் முறையாகத் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு தொடக்கப் பள்ளிகளிலும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை விரிவுப்படுத்தி, 31,008 பள்ளிகளில் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் 17 இலட்சம் அரசுப் பள்ளி மாணவர்கள் பயன்பெறும் வகையில் தொடங்கி வைக்கும் விதமாக, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பிறந்த ஊரான நாகப்பட்டினம் மாவட்டம், திருக்குவளையில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில், மாணவர்களுக்குக் காலை உணவு வழங்கும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்

“நகரப் பகுதிகளிலும், கிராமப் பகுதிகளிலும் பள்ளிக்குச் செல்லக்கூடிய குழந்தைகள் காலையிலேயே புறப்பட்டு விடுவதால், பெரும்பாலான குழந்தைகள் காலை உணவு சாப்பிடுவது இல்லை என்ற தகவல் அரசுக்குக் கிடைத்திருக்கிறது. பள்ளிகள் தூரமாக இருப்பது மட்டுமல்ல, சிலருடைய குடும்பச் சூழலும் இதற்குக் காரணமாக இருக்கிறது. இதனை மனதில் கொண்டு அரசுப் பள்ளி மாணவர்களுக்குக்

காலை நேரத்தில் சிற்றுண்டி வழங்கும் திட்டத்தை நாம் தீட்டி இருக்கிறோம். முதற்கட்டமாகச் சில மாநகராட்சி, நகராட்சிகளிலும், தொலைதூரக் கிராமங்களிலும் இத்திட்டம் தொடங்கப்படும். ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலக்கூடிய தொடக்கப் பள்ளி மாணவர்களுக்கு அனைத்துப் பள்ளி நாட்களிலும் காலை வேளையில் சத்தான சிற்றுண்டி வழங்கப்படும்” என்று ஆட்சிப் பொறுப்பேற்று ஓராண்டு நிறைவு பெற்றதையொட்டி தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 07.05.2022 அன்று, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விதி 110இன் கீழ் அறிவிப்பு வெளியிட்டார்.

அரசுப் பள்ளி மாணவர்களுக்குக் காலை உணவுவழங்கும்முதலமைச்சரின்காலைஉணவுத் திட்டத்தை மதுரை, ஆதிமூலம் மாநகராட்சி தொடக்கப் பள்ளியில் மாணவர்களுக்குக் காலை உணவினைப் பரிமாறி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், 15.09.2022 அன்று தொடங்கி வைத்து, மாணவர்களுடன் உணவருந்தினார்.



முதற்கட்டமாக, தமிழ்நாட்டில் உள்ள 38 மாவட்டங்களில், இத்திட்டத்தினைச் செயல்படுத்திட ரூ.33.56 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 417 மாநகராட்சிப் பள்ளிகளில் 43,681 மாணவர்கள், 163 நகராட்சிப் பள்ளிகளில் 17,427 மாணவர்கள், 728 வட்டாரம், கிராம ஊராட்சிப் பள்ளிகளில் 42,826 மாணவர்கள், 237 தொலைதூர, மலைப் பிரதேசப் பள்ளிகளில் 10,161 மாணவர்கள், என மொத்தம் 1,545 பள்ளிகளில் தொடங்கப்பட்டு, 1,14,095 மாணவர்கள் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின்கீழ் பயன்பெற்று வருகின்றனர். மேலும், 28.02.2023 முதல் இத்திட்டம் மேலும் நீட்டிக்கப்பட்டு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டச் செயலியின் படி 1,005 நகர்ப்புர மையங்களில் 1,12,883 குழந்தைகளும், 963 கிராமப்புர மையங்களில் 41,225 குழந்தைகளும் பயனடைந்து வருகின்றனர்.

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் குறிக்கோள்கள்

மாணவ, மாணவியர்கள் பசியின்றிப் பள்ளிக்கு வருதல், ஊட்டச்சத்துக் குறைபாட்டினால் பாதிக்கப்படாமலிருத்தல், ஊட்டச்சத்து நிலையை உயர்த்துதல், பள்ளிகளில் மாணவர்களின் வருகையை அதிகரித்தல், வேலைக்குச் செல்லும் தாய்மார்களின் பணிச்சுமையைக் குறைத்தல் ஆகியவற்றை முக்கிய குறிக்கோளாகக் கொண்டு ‘முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்’ செயல்படுத்தப்படுகிறது.

திட்டம் செயல்படுத்தும் முறை

பெருநகரச் சென்னை மாநகராட்சி, மற்ற மாநகராட்சிகள், நகராட்சிகளில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் ஒருங்கிணைந்த சமையற்கூடங்கள் மூலம் பள்ளி சத்துணவு மையங்களை இணைத்துச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

கிராம ஊராட்சி, மலைப் பகுதி மையங்களில் இத்திட்டம் சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சி / சுயஉதவிக் குழு மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் விரிவாக்கம்

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், பெரும்பாலான பொதுமக்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், மாணவர்களால் மிகவும் பாராட்டப்பட்டு, மகிழ்ச்சியோடு வரவேற்கப்பட்டு வருகிறது. இந்த முயற்சியின் பயனாக, பள்ளிகளில் மாணவர்களின் வருகை எண்ணிக்கை முன்பு இருந்ததைவிட அதிகரித்துள்ளது. இதன் அடிப்படையில் தமிழ்நாடு அரசு, இந்தத் திட்டத்தினை 2023-2024ஆம் ஆண்டு, படிப்படியாக மாநிலத்தில் உள்ள அனைத்து அரசுப் பள்ளிகளிலும் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை படிக்கும் குழந்தைகளுக்கும் விரிவாக்கம் செய்திட அரசு முடிவு செய்துள்ளது என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 13.01.2023 அன்று சட்டப்பேரவையில் அறிவித்தார்.

அதன் தொடர்ச்சியாக, 2023-2024ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், 'பள்ளிக்கல்வியை மேலும் பரவலாக்கவும், கற்றலை இனிமையாக்கவும், எல்லாக் குழந்தைகளும் பசியின்றிக் கல்வியறிவு பெற்றிடவும் எந்தத் தியாகத்தையும் செய்திடுவோம்' என்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உன்னத நோக்கத்தை செயல்படுத்திட, வரும் கல்வி ஆண்டு முதல் தமிழ்நாட்டில் உள்ள அரசுத் தொடக்கப் பள்ளிகளில் ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்புவரை பயிலும் மாணவர்கள் பயனடையும் வகையில் இத்திட்டம் விரிவுபடுத்தப்படும். இந்த நல்ல நோக்கத்திற்கு வரும் நிதியாண்டில் ரூ.500 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டது.

அதன் அடிப்படையில், ரூ.404.41 கோடி செலவில் 31,008 பள்ளிகளில் பயிலும் 17 இலட்சம் மாணவர்கள் பயன்பெறும் வகையில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை விரிவுப்படுத்தி தொடங்கி வைக்கும் விதமாகத் திருக்குவளை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில், 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உணவு பரிமாறி, அவர்களுடன் கலந்துரையாடி உணவருந்தினார்.

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தில் வழங்கப்படும் உணவு

திங்கள் கிழமை - காய்கறி சாம்பாருடன் கூடிய ரவை உப்புமா / சேமியா உப்புமா / அரிசி உப்புமா / கோதுமை ரவை உப்புமா; செவ்வாய்க்கிழமை – காய்கறி சாம்பாருடன் கூடிய ரவை காய்கறி கிச்சடி / சேமியா காய்கறி கிச்சடி / சோள காய்கறி கிச்சடி / கோதுமை ரவை கிச்சடி; புதன்கிழமை – காய்கறி சாம்பாருடன் கூடிய ரவை பொங்கல் / வெண் பொங்கல்; வியாழக்கிழமை – காய்கறி சாம்பாருடன் கூடிய சேமியா உப்புமா / அரிசி உப்புமா / ரவை உப்புமா / கோதுமை ரவை உப்புமா; வெள்ளிக்கிழமை – காய்கறி சாம்பாருடன் கூடிய சேமியா காய்கறி கிச்சடி / சோள காய்கறி கிச்சடி / ரவை காய்கறி கிச்சடி / கோதுமை ரவை கிச்சடி ஆகியவை மாணவர்களுக்கு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும்.

ஒரு மாணவ, மாணவிக்கு நாளொன்றுக்கு வழங்கப்படும் காலை உணவுக்கான மூலப் பொருட்களின் அளவு 50 கிராம் அரிசி / ரவை / கோதுமை ரவை / சேமியா. மேலும், அந்தந்த இடங்களில் விளையும் சிறுதானியங்கள் / சாம்பாருக்கான பருப்பு 15 கிராம், உள்ளூரில் கிடைக்கக்கூடிய காய்கறிகள், ஒரு வாரத்தில் குறைந்தது 2 நாட்களாவது உள்ளூரில் கிடைக்கக்கூடிய சிறுதானியங்களால் தயாரிக்கப்பட்ட காலை உணவு வழங்கப்படும்.

இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

'வாழ்விலோர் பொன்னாள்' என்று சொல்லுகின்ற வகையில், இந்த நாள் சிறப்பாக அமைந்திருக்கிறது.

அதைவிடச் சிறப்பு என்னவென்றால்? இந்த இடம்! இந்த ஊர்! இந்தத் திருக்குவளை மண்ணில் உதித்த ஒரு சூரியன், தமிழ்நாடு முழுமைக்கும் ஒளி வீசியது. ஏன், இந்தியாவோட தலைநகர் வரை

அதனுடைய வெளிச்சம் பரவியது. அந்தச் சூரியனுடைய பேர்தான், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். அப்படிப்பட்ட பெருமைக்குரிய நம் தமிழினத் தலைவர் கலைஞர் படித்த தொடக்கப் பள்ளியில் இப்படி ஒரு சிறப்பானத் திட்டத்தை விரிவாக்கம் செய்வதில் மிகவும் பெருமைப்படுகிறேன்.

தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றுப் பல திட்டங்களைச் செய்திருந்தாலும், இந்தக் காலை உணவுத் திட்டம் எனக்கு ஒரு மனநிறைவைத் தருகிறது. இன்னும் சொல்லவேண்டும் என்றால், படிப்புக்காகவும், வேலைக்காகவும் பேருந்தில் செல்லும் நம்முடைய சகோதரிகள், கட்டணமில்லாமல் 'விடியல் பயணத்தை' மேற்கொள்ளும்போதும், உயர்கல்வி பெறும் அரசுப் பள்ளி மாணவிகள் 'புதுமைப் பெண்' திட்டத்தில் ஆயிரம் ரூபாய் பெறும்போதும், அவர்களைவிட எனக்குத்தான் அதிகமான மகிழ்ச்சி ஏற்படும். ஏனென்றால், பலருடைய மகிழ்ச்சிக்கு நான் காரணமாக இருக்கிறேன் என்ற அந்த உணர்வில் அப்படி பெருமகிழ்ச்சி உண்டாகும்.

அடுத்த மாதம் இன்னொரு கூடுதல் மகிழ்ச்சி காத்துக்கொண்டிருக்கிறது. உங்களுக்குத் தெரியும். பேரறிஞர் அண்ணாவின் பிறந்த நாளான செப்டம்பர் 15. அன்றைக்கு, குடும்பத்தலைவிக்கு மாதந்தோறும் ரூ.1,000 வழங்கும் 'கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்' தொடங்கப் போகிறோம். அது என்னுடைய மகிழ்ச்சியை இன்னும் அதிகமாக்கப் போகின்றது!

இப்படி மகிழ்ச்சியையும், மனநிறைவையும் தருகின்ற திராவிட மாடல் அரசினுடைய திட்டங்களில் முக்கியமான ஒன்றுதான் இந்தக் காலை உணவுத் திட்டம்!

கடந்த ஆண்டு பேரறிஞர் அண்ணாவின் பிறந்த நாளில், மதுரை ஆதிமூலம் மாநகராட்சித் தொடக்கப்பள்ளியில் காலை உணவுத் திட்டத்தைத் தொடங்கி வைத்தேன். மாணவச் செல்வங்களுக்குக் காலை உணவு பரிமாறினேன். அவர்களோடு உட்கார்ந்து உணவு சாப்பிட்டேன். இப்போதும் இங்கே தொடங்கிய திருக்குவளைப் பள்ளியில், கலைஞர் படித்த பள்ளியில் தொடங்கியபோது, அவர்களோடு உட்கார்ந்து சாப்பிட்டுத்தான் வந்திருக்கிறேன். காலை உணவை நான் முடித்துவிட்டேன். மேடையில் இருப்பவர்கள் எல்லாம் இன்னும் சாப்பிடவில்லை. ஏனென்றால், மாணவர்களிடம் மட்டும் இருந்து நான் சாப்பிட வேண்டும் என்று ஆசைப்பட்டேன். கட்டுப்பாடாக இருக்கும் என்பதற்காகத்தான் அந்த அடிப்படையில் நடத்தினோம். வேறொன்றும் இல்லை. உங்களைப் பட்டினிப் போடவேண்டும் என்று இல்லை. அந்த ஆசை எனக்கு இல்லை. இங்கு இல்லை, முடிந்தவுடன் வெளியிலே சென்று சாப்பிடுவார்கள்.

மதுரையில் நான் தொடங்கினேன். அன்றைய நாளிலிருந்து, 1 இலட்சத்து 14 ஆயிரம் பிள்ளைகளுக்குக் காலை உணவு தரப்பட்டது. அதை மேலும் விரிவுபடுத்தும் நம் எண்ணம் தான் இன்றைக்குச் செயல்வடிவமாகி, 17 இலட்சம் பிள்ளைகளுக்குக் காலை உணவு வழங்கும் திட்டத்தைத் தொடங்கி இருக்கிறோம்.

"உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" என்று மணிமேகலை காப்பியம் சொன்னபடி, உயிர் கொடுகின்ற அரசாக, நம்முடைய திராவிட மாடல் அரசு செயல்பட்டுக் கொண்டு வருகிறது. எங்கள் தாத்தா, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் தந்தை முத்துவேலர் வாழ்ந்த இந்தத் திருக்குவளையில், தந்தையாகவும், தாயாகவும் இருந்த கலைஞர் பிறந்த இந்தத் திருக்குவளை மண்ணில் அவருடைய மகன் கருணாநிதி ஸ்டாலின் இந்தத் திட்டத்தைத் தொடங்கி வைப்பது என்பது, அதன் மூலமாக, நான் தமிழ்நாட்டினுடைய முதலமைச்சராக மட்டுமல்ல; கலைஞரின் மகனாகவும் பெருமைப்படுகிறேன். இதைவிட எனக்கு வேறென்ன பெருமை வேண்டும்?

பள்ளிகளும், கல்லூரிகளும் உருவாக்கிய தலைவர் கலைஞர் படித்த பள்ளி இது. அவர் படிக்கின்றபோது, ஒரு அரசியல் கட்சித் தலைவர் ஆவார் என்றோ, முதலமைச்சர் ஆவார் என்றோ நிச்சயமாக நினைத்துப் பார்த்திருக்க மாட்டார். ஆனால், அவருக்குள் இருந்த தமிழ்ப் பற்றும் - எழுத்துத் திறனும் – சிந்தனை ஆற்றலும், பள்ளியில் படிக்கின்றபோதே, அவரை மெல்ல மெல்ல தலைவராக ஆக்கியது.

அந்தப் பெருமை என்பது இந்தத் திருக்குவளை பள்ளிக்கும் – திருவாரூர் பள்ளிக்கும்தான் உண்டு. “உருக்குலையா மங்கையவள் ஒளிமுகத்தை முத்தமிட கருக்கலிலே கண்விழிக்கும் திருக்குவளை” என்று உவமைக் கவிஞர் சுரதா அவர்களால் போற்றப்பட்ட இந்த அழகிய திருக்குவளைக் கிராமத்தில் முத்துவேலருக்கும்– அஞ்சுகம் அம்மாவுக்கும், அருந்தவப் புதல்வராகப் பிறந்தவர்தான் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள்.

‘என்னை என் தாயும் தந்தையும் படி படி என்று சொன்னாலும் நான் படித்தது ஈரோட்டுப் பள்ளியும், காஞ்சிக் கல்லூரியும்தான்’ என்று தலைவர் கலைஞர் அவர்கள் அடிக்கடிச் சொல்வார்.

திருக்குவளையில் தொடக்கப் பள்ளி, அப்போது 5ஆம் வகுப்பு வரை மட்டும் இருந்ததினால், மேல்படிப்புக்குத் தலைவர் கலைஞர் அவர்கள் திருவாரூருக்குச் சென்றார். அங்கே சென்று பள்ளியில் சேருவதற்கு என்னென்ன போராட்டம் நடந்தது என்று உங்களுக்குத் தெரியும். நெஞ்சுக்கு நீதியில் அவரே தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார். பல நிகழ்ச்சிகளில் அதையும் எடுத்துச் சொல்லியிருக்கிறார். போராடி, வாதாடி அதற்குப் பிறகு திருவாரூரில் 6ஆம் வகுப்புச் சேருகிறார். திருவாரூரில் அவரை அள்ளி அணைத்து, அவருக்கு அரசியல் ஆர்வத்தை ஊட்டி, அவருடைய உள்ளத்தில் இருந்த கனலைத் தூண்டி விட்டது.

சிறுவர் சீர்திருத்த சங்கம் தொடங்கினார். தமிழ்நாடு தமிழ் மாணவர் மன்றம் அமைத்தார். ஆதிக்க இந்திக்கு எதிராகக் கொடிப் பிடித்து போராட்டம் நடத்தினார். ‘மாணவ நேசன்’ என்ற கையெழுத்து இதழை நடத்தினார்.

இப்படி, ‘விளையும் பயிர் முளையிலேயே தெரியும்’ என்று சொல்வதற்கு ஏற்றதுபோல, பிற்காலத்தில் கலைஞர் என்ன ஆவார் என்பதை உணர்த்தின இடம்தான் திருக்குவளை பள்ளியும் - திருவாரூர் பள்ளியும்!

ஒரு சின்ன கிராமத்தில், சாதாரண குடும்பத்தில், சமூக ஏற்றத்தாழ்வுகள் நிறைந்த காலத்தில் பிறந்து, இதே பள்ளியில் ஆரம்பப் பாடம் கற்று, திருவாரூரில் வளர்ந்து, தன்னோட விடாமுயற்சியால், அயராத உழைப்பால், சளைக்காத போராட்டக் குணத்தால் வெற்றிச் சிகரங்களைத் தொட்டவர் நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். அவர் சொன்னது, ‘வரலாற்றில் நமக்கான இடம், சலுகையால் கிடைக்கக் கூடியதாக அல்லாமல், போராடிப் பெறக்கூடியதாக இருக்க வேண்டும் என்று சொல்வார். ஏன், கடற்கரையில், தான் ஓய்வு கொண்டிருக்கின்ற இடத்தையும் போராடிப் பெற்றவர்தான் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள்.

இன்றைய மாணவர்களுக்கும், இளைஞர்களுக்கும் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் படமாக அல்ல, பாடமாக – நம்பிக்கை மிகுந்த வழிகாட்டியாகத் திகழ்ந்து கொண்டிருக்கிறார். அதனால்தான் தமிழ்நாட்டு மாணவர் சமுதாயத்தினுடைய பசிப்பிணி போக்கும் திட்டத்தை அவர் படித்த இந்தப் பள்ளியிலிருந்து தமிழ்நாட்டின் அனைத்துப் பள்ளிக்கும் விரிவாக்கம் செய்ய நான் வந்திருக்கிறேன்.

ஏழை, எளியோர் வீட்டுப்பிள்ளைகள் - ஒடுக்கப்பட்ட குடும்பத்தின் பிள்ளைகள் – பள்ளிக்குப் போவது எந்தக் காரணத்தாலேயும் தடைப்படக் கூடாது என்றுதான் தந்தை பெரியார் சுயமரியாதை இயக்கத்தைத் தொடங்கினார். அதற்காகத்தான் சமூகநீதிக் கோட்பாடு

உருவாக்கப்பட்டது. வகுப்புவாரி உரிமை என்று, இடஒதுக்கீடு தரப்பட்டது. கல்வி பெற வறுமை – சாதி என்று எதுவும் தடையாக இருக்கக் கூடாது என்று தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும், முத்தமிழறிஞர் கலைஞரும் நினைத்தார்கள்.

அவர்களுடைய வழித்தடத்தில் நடக்கின்ற நான், அவர்களுடைய கனவுகளை நிறைவேற்றுகின்ற இடத்திற்கு வந்து அதையெல்லாம் இப்போது செயல்படுத்துகிறேன். தொடர்ந்து செயல்படுத்துவேன். இதற்கான தொடக்கம், திராவிட இயக்கத்தோட தாய் அமைப்பான நீதிக்கட்சியினுடைய தலைவராக இருந்த வெள்ளுடை வேந்தர் தியாகராயர் அவர்கள் தான்.

சென்னை மாநகராட்சியினுடைய தலைவராக இருந்தபோது ஆயிரம் விளக்கு மாநகராட்சிப் பள்ளிக் குழந்தைகளுக்கு 1922ஆம் ஆண்டு மதிய உணவை வழங்கினார். அந்த ஆயிரம் விளக்குதான் முதன்முதலாக நான் நின்று வென்ற தொகுதி!

திருக்குவளை சூரியன் ஒளியில்தான் அந்த ஆயிரம் விளக்கு ஒளி வீசியது. இந்தியா விடுதலை அடைகின்ற சில மாதங்களுக்கு முன்னால், நிதி நெருக்கடியைக் காரணம் காட்டி மதிய உணவுத் திட்டம் நிறுத்தப்பட்டது.

1955ஆம் ஆண்டு பெருந்தலைவர் காமராசர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது மதிய உணவுத் திட்டம் தொடங்கப்பட்டது. அப்போது பொதுக்கல்வி இயக்குநராக இருந்த நெ.து.சுந்தரவடிவேலு அவர்கள். அவர்தான் இதற்கான முழு முயற்சியையும் எடுத்தவர். சில அதிகாரிகளுடைய கடுமையான எதிர்ப்பையும் மீறி அதைச் செயல்படுத்திக் காட்டியவர். யார் என்று கேட்டீர்கள் என்றால், பெரியாரின் பெருந்தொண்டராக இருந்த நெ.து.சுந்தரவடிவேலு அவர்கள்.

இப்படிப்பட்ட மதிய உணவுத் திட்டத்தை தி.மு.க. அரசு தொடர்ந்து நடத்தியது. இதைச் செழுமைப்படுத்துகின்ற வகையில் கூடுதலாக ஊட்டச்சத்துத் திட்டத்தை 1971ஆம் ஆண்டு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் கையில் எடுத்தார்.

குழந்தைகளுக்கும், கர்ப்பிணித் தாய்மார்களுக்கும் ஊட்டச்சத்து வழங்குகின்ற மாபெரும் இயக்கமாக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அதைச் செயல்படுத்தினார். அந்தக் காலத்தில் 'பேபி ரொட்டி' என்ற ஒன்று உண்டு. அந்த பேபி ரொட்டியை எல்லா குழந்தைகளுக்கும் வழங்கியது கலைஞர் தலைமையில் இருந்த அரசு.

1975ஆம் ஆண்டு முழுமையாக மாநில அரசினுடைய நிதியில் 'ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டத்தை' முதலமைச்சர் கலைஞர் அவர்கள் மாநிலம் முழுவதும் நடத்திக் காட்டினார். இதை மேலும் விரிவுபடுத்தியவர், யார்? மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்கள். அதிகப்படியான மையங்களை உருவாக்கி, சத்துணவுத் திட்டத்திற்குக் கூடுதலான நிதியை ஒதுக்கீடு செய்தவர் யார் என்று கேட்டால், முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள். எம்.ஜி.ஆருக்கு பிறகு மீண்டும் 1989ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த முதலமைச்சர் கலைஞர் சத்தான முட்டையை வழங்கினார்.

அது படிப்படியாக உயர்த்தப்பட்டு, வாரம் ஐந்து நாட்களும் முட்டை வழங்கினார் முதலமைச்சர் கலைஞர். முட்டை சாப்பிடாதவர்களுக்கு வாழைப்பழமும் கொடுத்தார். பின்பு கொண்டைக் கடலை, பச்சைப்பயிறு, வேகவைத்த உருளைக் கிழங்கு ஆகியவற்றையும் வழங்கினார். முக்கியமான தலைவர்களுடைய பிறந்தநாளன்று, அப்போது இனிப்புப் பொங்கல் வழங்கவும் உத்தரவிட்டவர்தான் கலைஞர் அவர்கள்.

அதற்கு பின்பு முதலமைச்சராக இருந்த அம்மையார் ஜெயலலிதா அவர்கள், தன்னோட ஆட்சிக்காலத்தில் கலவை சாதம் வழங்க உத்தரவிட்டார்கள்.

1921இல் நீதிக்கட்சி ஆட்சித் தொடங்கி, 2021 வரைக்கும் இருந்ததெல்லாம் மதிய உணவுத் திட்டங்கள்தான்.

இந்த நிலையில்தான், சென்னை அசோக் நகரில் இருக்கக்கூடிய பெண்கள் மேனிலைப் பள்ளிக்கு ஒரு விழாவிற்காக நான் சென்றேன். அங்கு படிக்கின்ற மாணவியிடம் பேசிக்கொண்டு இருந்தேன். பேசிக் கொண்டு இருக்கும்போது "காலையில் என்ன சாப்பிட்டீங்க?" என்று கேட்டேன். பெரும்பாலானவர்கள் என்ன சொன்னார்கள் என்றால் "நாங்கள், சாப்பிடவில்லை" என்று சொன்னார்கள். "எங்கள் வீட்டில் சமையல் செய்யவில்லை" என்று ஒரு மாணவி சொன்னார்.

"மதியானம் ஸ்கூலில் சென்று சாப்பிடு என்று அம்மா சொல்லிட்டாங்க" என்று இன்னொரு மாணவி சொன்னார். "காலையில் டீ மட்டும் குடித்துவிட்டு வந்திருக்கிறேன்" என்று இன்னொரு மாணவி சொன்னார். இதை எல்லாம் மனதில் வைத்துதான் இந்தக் காலை உணவுத் திட்டம் உருவாக்கவேண்டும் என்று நான் அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டேன்.

அதிகாரிகள் சொன்னார்கள், நிதிச்சுமை போன்ற காரணங்களை எல்லாம் சொன்னார்கள். இதைவிட வேறு எதும் முக்கியமாக இருக்க முடியாது என்று கட்டாயப்படுத்தி நான்தான் இந்தத் திட்டத்தை விரைவாக நடத்தவேண்டும் என்று சொன்னேன். பொதுவாகவே, மனிதர்களுக்கு மூளை ஒழுங்காக முறையாக வேலை செய்யவேண்டும் என்றால், வயிறு நிறைந்திருக்க வேண்டும்.

மூன்று வேளை உணவு தேவை. அதிலேயும் காலையில் நன்றாகச் சாப்பிட வேண்டும் என்று சொல்லுவார்கள். அப்போதுதான் அதிகமாக பணியாற்ற முடியும். காலை உணவு, மிக மிக முக்கியம். ஆனால், காலை உணவே சாப்பிடாத பிள்ளைகளால் எப்படிக் கல்வியில் கவனம் செலுத்த முடியும்? இது ஒருபுறம்.

மற்றொருபுறம், மாநகராட்சி, நகராட்சிப் பகுதிகளில் ஒரு களஆய்வு நடத்தினோம். அதில், இரத்தசோகை நிறைய மாணவர்கள்கிட்ட இருந்தது. ஒரு குழந்தைக்கு ஒரு நாளைக்கு 50 கிராம் அளவு காலை உணவு வழங்கினால் அவர்களுக்குக் கூடுதலாகச் சத்துக்கள் கிடைக்கும் என்று சொன்னார்கள். அதனால்தான், காலை உணவுத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் ஆர்வத்தோடும், அக்கறையோடும் நாங்கள் இந்தப் பணியில் இறங்கினோம்.

பசியுடன் பள்ளிக்கு வருகின்றவர்களைப் பட்டினியாக வைத்து, பாடம் சொல்லித்தரக் கூடாது என்று நினைத்தேன். அதனுடைய விளைவுதான், இன்றைக்கு, 31 ஆயிரம் அரசுப் பள்ளிகளில் படிக்கின்ற, 17 இலட்சம் மாணவர்கள் பயன்பெறும் வகையில், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் விரிவுபடுத்தப்பட்டு அதற்கு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

நம்முடைய எதிர்கால நம்பிக்கைகளான பள்ளிக் குழந்தைகளுக்கான திட்டத்திற்குரிய தொகையை, நிதி ஒதுக்கீடு என்று சொல்வதைவிட, நிதி முதலீடு என்றே நான் சொல்ல விரும்புகிறேன்.

ஏனென்றால், மாணவர்களின் அறிவை மேம்படுத்த – உள்ளத்தை மேம்படுத்த அரசு நிதி முதலீடு செய்திருக்கிறது. அந்த முதலீடு நிச்சயமாக நாட்டுக்கு லாபம் தரும் வகையிலான ஆற்றலாக, திறமையாக வெளிப்படும். அதுதான் உண்மை!

இந்தியாவிலேயே புதுப்புது திட்டங்களைக் கொண்டுவந்து, முன்னோடி மாநிலமாக இருப்பதில் நம்பர் ஒன் மாநிலம்– நம்முடைய தமிழ்நாடு தான். அதில் மிகமிக முக்கியமான இந்தக் காலை உணவுத் திட்டத்தின் முக்கிய நோக்கம் என்ன?

1. மாணவர்கள் பசியில்லாமல் பள்ளிக் கூடத்திற்கு வரவேண்டும்.
2. ஊட்டச்சத்துக் குறைபாட்டால் பாதிக்கப்படாமல் அந்தக் குழந்தைகள் இருக்க வேண்டும்.
3. இரத்த சோகை என்ற குறைபாட்டை நீக்கவேண்டும்.
4. மாணவர்களுடைய வருகைப் பதிவை அதிகரிக்க வேண்டும்.
5. வேலைக்குச் செல்கின்ற தாய்மார்களோட பணிச்சுமையைக் குறைக்க வேண்டும்.

இந்த ஐந்து நோக்கத்தைப் படிப்படியாக நிறைவேற்றவேண்டும் என்பதுதான் நம்முடைய இலட்சியம். முழுமையாக அடைந்தே தீருவோம். அதில் எந்த சந்தேகமும் கிடையாது.

பசிப்பிணி நீங்கிவிட்டால், மனநிறைவோடு பிள்ளைகள் படிப்பார்கள். அவர்கள் மனதில் பாடங்கள் பதியும். பள்ளிக்கு ஆர்வத்துடன் வருவார்கள். சீரான வருகைப் பதிவும் இருக்கும். தமிழ்நாட்டின் கல்வி விகிதமும் அதிகம் ஆகும். தமிழ்நாட்டு இளைஞர்கள் அனைவரும் அறிவாற்றல் பொருந்தியவர்களாக உயர்வார்கள். படிப்புடன் விளையாட்டு, கலைத்திறன் ஆகியவற்றிலும் சாதனை படைக்கக் கூடியவர்களாக நிச்சயம் திகழ்வார்கள். இப்படி எத்தனையோ நன்மைகளை நம்முடைய மாநிலம் இந்தத் திட்டத்தால் அடையப் போகின்றது.

எதிர்கால தமிழ்ச் சமூகம் பயனடையப் போகிறது. இந்த மாதம் ஒரு செய்தியைப் பார்த்திருப்பீர்கள். ஆறு வயதுக்குட்பட்ட குழந்தைகள் ஊட்டச்சத்துக் குறைபாட்டால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று சொல்லி, கடந்த ஓராண்டுக் காலத்தில் சுமார் 10 இலட்சம் குழந்தைகளுக்கு மருத்துவப் பரிசோதனை செய்யப்பட்டிருக்கிறது. அதில், சுமார் 92 ஆயிரம் குழந்தைகள் ஊட்டச்சத்துக் குறைபாடுடன் இருப்பதாகக் கண்டறியப்பட்டு, அந்தக் குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து நிறைந்த சிறப்பு உணவுப்பொருட்கள் கொடுத்ததால், சுமார் 62 ஆயிரம் குழந்தைகள் தங்களது ஊட்டச்சத்து நிலையில் நல்ல முன்னேற்றத்தை அடைந்திருக்கிறார்கள்.

அதில் சில குழந்தைகள் என்னைப் பார்ப்பதற்காகக் கோட்டைக்கு அழைத்துக் கொண்டு வந்தார்கள். நேரில் பார்த்தேன். அந்தக் குழந்தைகளுடைய வளர்ச்சியில்தான் நம்முடைய அரசாங்கத்தின் வளர்ச்சி அடங்கி இருக்கிறது. இந்த அரசு யாருக்கான அரசு என்று கேட்கிறவர்களுக்கு நான் சொல்வது என்னவென்றால், "எங்களுக்கு யாருமில்லை" என்று யார் நினைக்கிறார்களோ, "எங்களைக் காப்பாற்ற யார் இருக்கிறார்கள்?" என்று யார் கேட்கிறார்களோ அவர்கள் எல்லோருக்குமான அரசுதான் இந்த அரசு என்று சொல்வேன்.

அந்தக் காலத்தில அரசர் குலத்தவர் மட்டுமே கற்றுக் கொள்ளலாம் என்று இருந்த, வில் வித்தையை வேடர் குலத்தைச் சேர்ந்த ஏகலைவன் கற்றுக்கொண்டதைப் பார்த்துக் கட்டைவிரலை காணிக்கையாகக் கேட்கின்ற துரோணாச்சாரியார் போன்ற ஆசிரியர்கள்தான் இருந்தார்கள்.

சமூகநீதி நிலைநாட்டப்படுகின்ற இந்தக் காலத்தில் யாராவது கட்டை விரலை காணிக்கையாகக் கேட்டால், அவர்களுடைய, பட்டை உரியும் என்று எச்சரித்தவர் இந்த மண்ணின் மைந்தர் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள்.

பெரியார்-அண்ணா-கலைஞர் வகுத்த சமூகநீதிப் பாதையில் அனைத்து அறிவையும் அனைத்துச் சமூகத்தவருக்கும் தருகின்ற ஆட்சியை நாம் நடத்திக் கொண்டிருக்கிறோம். இந்தச் சூழலிலும் தேசியக் கல்விக் கொள்கை என்கின்ற பெயரில், நீட் என்ற பெயரில் தடுப்புச் சுவர் போடுகின்ற 'துரோக ஆச்சாரியார்களும்' இருக்கத்தான் செய்கிறார்கள்.

ஏகலைவன் தன்னுடைய கட்டை விரலைக் காணிக்கைக் கொடுத்ததெல்லாம் அந்தக் காலம். அந்தக் காலம் மலை ஏறிவிட்டது. இது கலைஞர் உருவாக்கித் தந்திருக்கக்கூடிய காலம். இது துரோணாச்சாரியார்களின் காலம் கிடையாது. ஏகலைவன்களின் காலம்!

அனைவருக்கும் அனைத்தும் கிடைக்கும். 'எல்லார்க்கும் எல்லாம் கிடைக்கும்' என்ற திராவிடவியல் கோட்பாடு கோலோச்சும் காலம்!

இந்த நேரத்தில், அரசு அதிகாரிகளுக்கும், ஆசிரியர்களுக்கும், சமையல் செய்யக்கூடிய நம்முடைய சகோதர–சகோதரிகளுக்கும் உங்கள் முதலமைச்சர் ஒரு அன்பான வேண்டுகோளை வைக்கிறேன்.

அரசானது, தாயுள்ளத்தோடு இந்தத் திட்டத்தைத் தொடங்கி இருக்கிறது. நீங்களும் தாயுள்ளத்துடன் இந்தத் திட்டத்தைத் தொடர்ந்து நடத்தவேண்டும். உங்கள் வீட்டுப் பிள்ளைகளுக்கு எப்படிக் கவனத்தோடும், கனிவோடும் உணவு வழங்குவீர்களோ, அதைவிடக் கூடுதல் கவனத்தோடு, கனிவோடு அனைத்துக் குழந்தைகளுக்கும் உணவு வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதை நிச்சயம் செய்வீர்கள் என்று நான் நம்புகிறேன்.

அன்புள்ள மாணவச் செல்வங்களே! உங்கள் குடும்பத்தில் ஒருவனாக நான் வைக்கின்ற வேண்டுகோள் இது.

உங்களுக்குக் காலையும், மதியமும் உணவு வழங்குகிறோம். எனவே, நீங்கள் எதைப்பற்றியும் கவலைப்படாமல் படிங்க, படிங்க! படிங்க! இது ஒன்றுதான் என்னுடைய வேண்டுகோள். படிப்பு மட்டும்தான் உங்களிடம் இருந்து யாராலும் பறிக்க முடியாத சொத்து. அத்தகைய சொத்தை உங்களுக்கு நீங்களே சேர்த்துக் கொள்ளுங்கள். உங்களது மற்ற கவலைகள், மற்ற தேவைகளை நிறைவு செய்ய நமது அரசு இருக்கிறது.

இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினாகிய நான் இருக்கிறேன்! நீங்கள் படிப்பில் மட்டும் கவனம் செலுத்துங்கள்! படிப்பு உங்களை உயர்த்தும்!

நிலாவுக்குச் சென்று ஆய்வு செய்கின்ற விண்கலம் அனுப்பி சாதனை படைத்திருக்கின்ற தமிழ்நாட்டு அறிவியலாளர்கள் போல, இந்தியாவுக்குப் பெருமை சேர்க்கின்ற வகையில், உலகம் அண்ணாந்து பார்க்கின்ற வகையிலான சாதனையாளராக நீங்கள் மாறவேண்டும், உயரவேண்டும். அதனை உங்கள் பெற்றோரோடு சேர்ந்து நானும் காண வேண்டும்! பெருமைப்பட வேண்டும்! என்று கேட்டு, அதை நீங்கள் நிச்சயம் நிறைவேற்றுவீர்கள், நிறைவேற்றுவீர்கள் என்ற நம்பிக்கையோடு உங்களிடமிருந்து விடைபெறுகிறேன்.

நன்றி! வணக்கம்!

வ.உ.சி. அவர்களின் தியாகத்தை இந்தியா மொத்தமும் அறியச் செய்வோம்

ஆங்கிலேயருக்குச் சவால் விடும் வகையில் கப்பல் விட்டதும், விடுதலைப் போரில் ஈடுபட்டுச் சிறையில் செக்கிழுத்ததும் வ.உ.சிதம்பரனாரின் உணர்ச்சிமிகு வரலாறு!

இந்த இணையற்ற தியாகங்களோடு - வழக்கறிஞர், எழுத்தாளர், மொழிபெயர்ப்பாளர், உரையாசிரியராகவும் இருந்தவர் அவர். தொழிற்சங்க முன்னோடியாக விளங்கியவர். தொல்காப்பியம், திருக்குறள் போன்ற பழந்தமிழ் நூல்களைப் பதிப்பித்த தமிழறிஞர்.

அத்தகைய பேராளுமையின் அனைத்துப் பரிமாணங்களையும் அனைவருக்கும் கொண்டு சேர்க்கும் வகையில்தான் நமது திராவிட மாடல் ஆட்சியில் 'வ.உ.சி. பன்னூல் திரட்டு', 'வ.உ.சி. திருக்குறள் உரை' உள்ளிட்ட நூல்களை அவரது 150ஆவது பிறந்தநாள் விழாவையொட்டி வெளியிட்டோம்!

தொடர்ந்து மேலும் பல முயற்சிகளின் வழியே இந்தியா மொத்தமும் அவர் தியாகத்தையும், பெரும்புலமையையும் அறியச் செய்வோம்!

— விடுதலைப் போராட்ட வீரர் வ.உ.சி அவர்களின் பிறந்தநாளையொட்டி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு—05.09.2023

tndiprnews DIPR TN tndipr TN DIPR www.dipr.tn.gov.in

இந்தியாவுக்கே வழிகாட்டுகிறது

"முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்"

தெலுங்கானா மாநில அரசு பாராட்டு

✷ அரசுப் பள்ளி மாணவர்களுக்கெனப் பல்வேறு திட்டங்களைத் தமிழ்நாடு அரசு முன்னெடுத்து வருகிறது. இத்தகைய திட்டங்களில் ஒன்றான 'முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்' ஒட்டுமொத்த இந்தியாவையே திரும்பிப் பார்க்கச் செய்திருக்கிறது.

✷ 2022ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 15ஆம் தேதி முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார். முதற்கட்டமாக 1,543 பள்ளிகளில் 1.14 இலட்சம் மாணவர்களுக்கு இத்திட்டம் தொடங்கப்பட்டது. அடுத்தக் கட்டமாக இந்த ஆண்டு ஆகஸ்ட் 25ஆம் தேதி தொடங்கி தமிழ்நாடு முழுவதும் உள்ள 31,008 பள்ளிகளில் பயிலும் 1 ஆம் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் 18 இலட்சம் மாணவர்களுக்கு இந்தத் திட்டத்தை விரிவுபடுத்தினார் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்.

✷ இந்தத் திட்டத்தின் மாபெரும் வெற்றி இந்தியா முழுக்க பெரும் வரவேற்பையும், பாராட்டுதல்களையும் பெற்று வருகிறது. இதைத் தொடர்ந்து தெலுங்கானா மாநிலத்திலும் செயல்படுத்தும் அம்மாநில அரசு ஆர்வம் கொண்டிருக்கிறது. அதற்காகத் தமிழ்நாடு அரசைத் தொடர்பு கொண்டு தமிழ்நாடு அரசின் காலை உணவுத் திட்டம் எவ்வாறு செயல்படுகிறது என்பதை நேரில் வந்து பார்வையிட அம்மாநில உயர் அலுவலர்கள் ஆர்வம் தெரிவித்திருந்தனர்.

✷ இதையடுத்துத் தெலுங்கானா மாநில அரசு தமிழ்நாடு அரசைக் கேட்டுக்கொண்டதன் பேரில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் செயல்பாடுகளை நேரில் பார்வையிட தெலுங்கானாவிலிருந்து மூத்த அரசு அதிகாரிகள் ஆகஸ்ட் 30, 2023 அன்று சென்னை வந்து சேர்ந்தனர். ஆகஸ்ட் 31, 2023 அன்று மைய சமையல் கூடம் ஒன்றிற்கும், பல்வேறு பள்ளிகளுக்கும் சென்று பார்வையிட்டனர்.

✷ முதலில் இராயபுரத்தில் இருக்கும் சென்னை மாநகராட்சிப் பள்ளிக் கட்டடத்தில் செயல்பட்டு வரும் காலை உணவு தயார் செய்யும் மைய சமையல் கூடத்தை இக்குழுவினர் பார்வையிட்டனர். அங்குச் சமையல் பொருட்கள் பெறப்படும் விதம், பணியாளர்கள் பணியாற்றும் தன்மை, சுகாதாரமாக உணவு தயாரிக்கப்படும் முறை, தரப்பரிசோதனைகள் செய்யப்படும் விதம், தயாரிக்கப்பட்ட உணவு வாகனங்கள் மூலம் பள்ளிகளுக்கு அனுப்பி வைக்கப்படும் முறை, வாராந்திர உணவு அட்டவணை முதலான ஒவ்வொன்றையும் பற்றி பணியாளர்களோடும் நம் மாநில அலுவலர்களோடும் உரையாடி அறிந்துகொண்டனர்.

✷ காலை ஏழு மணிக்குப் பார்வையிடத் தொடங்கிய தெலுங்கானா குழுவினர் எட்டு மணிக்கு மைய சமையல் கூடத்திலிருந்து புறப்பட்டு அருகில் இருக்கும் ஆரத்தூன் சாலையில் உள்ள சென்னை மாநகராட்சி உருது தொடக்கப் பள்ளிக்குச் சென்றது. அங்கே மாணவர்களுக்கு உணவு எவ்விதம் வழங்கப்படுகிறது என்பதைப் பார்வையிட்டு மாணவர்களோடு உரையாடி மாணவர்களின் கருத்துக்களையும் அறிந்துகொண்டனர்.

✷ உருது தொடக்கப் பள்ளியில் பார்வையிட்ட பின்னர் திருவள்ளூர் மாவட்டம் அழிஞ்சிவாக்கத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிக்குச் சென்ற குழுவினர் அங்கே கிராமப்புறப் பகுதிகளில் இருக்கும் பள்ளிகளில் இந்தத் திட்டம் எப்படிச் சீரிய முறையில் செயல்படுத்தப்படுகிறது என்பதையும் நடைமுறைப்படுத்துவதில் இருக்கும் சவால்களைத் தமிழ்நாடு அரசு எவ்வாறு எதிர்கொள்கிறது என்பதையும் அரசு அலுவலர்களிடமும், ஆசிரியர்களிடமும், மாணவர்களிடமும் உரையாடி தெரிந்துகொண்டனர்.

✷ இத்திட்டத்தின் செயல்பாடுகளை நேரில் கண்ட தெலுங்கானா மாநிலத்தின் அரசு அதிகாரிகள் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தைப் பற்றியும் அது செயல்படுத்தப்படும் விதம் குறித்தும் பாராட்டினர்.

இந்தியாவில் முதலாவதாக சென்னையில் தொழில்நுட்ப மையம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 28.08.2023 அன்று, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை சார்பில் சென்னை, போரூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில், அமெரிக்காவைத் தலைமையிடமாகக் கொண்ட சரக்குப் போக்குவரத்து மற்றும் விநியோக சங்கிலி மேலாண்மையில் உலகளவில் முன்னணியில் உள்ள UPS (United Parcel Service) நிறுவனம், இந்தியாவில் முதலாவதாக, சென்னை போரூரில் 400க்கும் மேற்பட்ட நபர்களுக்கு உயர் தொழில்நுட்ப வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் அமைத்துள்ள தொழில்நுட்ப மையத்தை (Technology Centre) திறந்து வைத்தார். மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கனவுத்திட்டமான 'நான் முதல்வன்' திட்டத்தின்கீழ், தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களுக்கு அம்மையத்தில் உயர் தொழில்நுட்ப வேலைவாய்ப்புக்கான பயிற்சி (Internship) பெறுவதற்கு அனுமதிக் கடிதங்களையும் வழங்கினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்து ஆற்றிய உரை – 28.08.2023

அகில இந்திய அளவில் தமிழ்நாடு பல பொருளாதாரக் குறியீடுகளில் முன்னணி மாநிலமாக விளங்கி வருகிறது. இந்நிலையைத் தக்கவைத்துக் கொள்ளவும், பெரும் அளவிலான முதலீடுகளை ஈர்ப்பதன் மூலமும் தமிழ்நாட்டின் இளைஞர்களுக்கு அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகளை உருவாக்கி அவர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதுடன், மாநிலத்தில் பரவலான வளர்ச்சியை உறுதி செய்திடவும் தமிழ்நாடு அரசின் தொழில் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை பல்வேறு நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

வணிக நடைமுறைச் சட்டம் / விதிகளில் பெருமளவிலான சீர்திருத்தங்களை

மேற்கொண்டு, அனுமதிகள் பெறுவதை இலகுவாக்கியதன் விளைவாக, ஒன்றிய அரசு வெளியிட்டுவரும் தொழில் செய்வதற்கு உகந்த மாநிலங்களின் தரவரிசையில், 14ஆம் இடத்திலிருந்த தமிழ்நாடு, வெகுவாக முன்னேறி தற்போது 3ஆம் இடத்தைப் பெற்றுள்ளது. மேலும், உலகத் தரத்திலான உட்கட்டமைப்பு வசதிகள் கொண்ட துறைவாரியான தொழில் பூங்காக்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன், முதலீடுகள் மேற்கொள்ளப்படுவதை ஊக்குவிப்பதற்கு, துறைவாரியாகக் கொள்கைகளையும் (Sector Specific Policies) தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ளது.

2030ஆம் ஆண்டிற்குள் தமிழ்நாட்டின் பொருளாதாரம் ஒரு டிரில்லியன் அமெரிக்க டாலர் அளவிற்கு வளர்ச்சி அடைந்திட வேண்டும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் நிருணயித்துள்ள இலக்கினை எய்துவதற்காக, உள்நாட்டில் மட்டுமின்றி வெளிநாடுகளிலும் முதலீட்டாளர் மாநாடுகளை நடத்தியதன் விளைவாக, இவ்வரசு பொறுப்பேற்றது முதல் இதுநாள் வரை, 4,15,282 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் ரூ.2,97,196 கோடி மதிப்பிலான 241 முதலீடுகள் உறுதி செய்யப்பட்டுள்ளன.

முதலீடுகளை ஈர்ப்பதற்கான முயற்சிகளின் அடுத்த கட்டமாக, 2024ஆம் ஆண்டு ஜனவரி 7, 8 ஆகிய தேதிகளில், சென்னையில் உலக முதலீட்டாளர்கள் மாநாட்டினைச் சிறப்பான முறையில் நடத்தி, பெருமளவிலான முதலீடுகளை ஈர்ப்பதற்கான நடவடிக்கைகளைத் தமிழ்நாடு அரசின் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு, வர்த்தகத்துறை மேற்கொண்டு வருகின்றது.

யுனைடெட் பார்சல் சர்வீசஸ் நிறுவனம் (M/s United Parcel Service – UPS)

அமெரிக்க நாட்டைச் சேர்ந்த UPS நிறுவனம், சரக்குப் போக்குவரத்து / தளவாடங்களை (Logistics) 220க்கும் மேற்பட்ட நாடுகளுக்குக் கொண்டுசெல்வதன் மூலம் 5 இலட்சத்திற்கும் அதிகமான நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கிவரும் உலகளாவிய முன்னணி நிறுவனம் ஆகும். இந்நிறுவனம், உலகளவில் ஃபார்ச்சூன் 500 நிறுவனங்களில் ஒன்றாகவும் இருந்து வருகின்றது.

தொழில்நுட்பத்தை முன்னெடுத்துச் செல்வதில் தொடர்ந்து முதலீடு செய்து, இந்தியாவில் முதலாவதாக, சென்னை போரூரில் உள்ள RMZ Paramount வளாகத்தில் இந்நிறுவனம் அமைத்துள்ள தொழில்நுட்ப மையத்தை (UPS Technology Centre) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார். மேலும், 'நான் முதல்வன்' திட்டத்தின்கீழ்த் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களுக்கு அம்மையத்தில் பயிற்சி பெறுவதற்கான கடிதங்களையும் வழங்கினார்.

தொழிற்சாலை பொறியியல், மென்பொருள், ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, செயற்கை

நுண்ணறிவு போன்ற துறைகளைச் சேர்ந்த 400 உயர் தொழில்நுட்ப வல்லுநர்களை, குறிப்பாகக் கிராமப்புற இளைஞர்களுக்கு, திறன்பயிற்சி அளித்துப் பணியமர்த்த இந்நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

இந்தத் தொழில்நுட்ப மையத்தை அமைப்பதற்கு இந்தியாவில் பல நகரங்கள் பரிசீலிக்கப்பட்டதில், அமெரிக்காவில் உள்ள தங்களது தலைமையகம் போன்றே நேர்த்தியான ஒரு இடம் என உணர்ந்ததால் சென்னையைத் தேர்ந்தெடுத்ததாக இந்நிறுவனம் தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

கடந்த சில ஆண்டுகளாகவே, ஆராய்ச்சி, மேம்பாடு தொடர்பான மையங்களும், உலகளாவிய திறன் மையங்களும் (Global Capability Centres - GCCs) அதிக அளவில் தமிழ்நாட்டில் நிறுவப்பட்டு வருகின்றன. கடந்த இரண்டு ஆண்டுகளில், 30க்கும் மேற்பட்ட உலகளாவிய திறன் மையங்கள் தமிழ்நாட்டில் நிறுவப்பட்டுள்ளன. உலக அளவில் தமிழ்நாட்டின் போட்டித்தன்மையை வெகுவாக அதிகரிக்க இவை பெரிதும் உதவும்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கத்தை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

யுனைடெட் பார்சல் சர்வீசஸ் எனப்படும் உங்களது நிறுவனமான உலக அளவில் ஃபார்ச்சூன் 500 நிறுவனங்களில் ஒன்றாகவும், சரக்குப் போக்குவரத்து மற்றும் விநியோகச் சங்கிலி மேலாண்மையில் உலகளவில் முன்னணியில் உள்ள நிறுவனமாகவும் திகழ்கிறது. இத்தகைய உலகப் பெருமை கொண்ட நிறுவனம், இந்தியாவில், அதிலும் குறிப்பாக, சென்னை போரூரில் தொழில்நுட்ப மையத்தைத் திறப்பது தமிழ்நாட்டுக்கும், எங்கள் ஆட்சிக்கும், எனக்கும் பெருமை தருவதாக அமைந்திருக்கிறது.

இதற்காக உங்கள் நிறுவனத்திற்கும், நிறுவன உரிமையாளருக்கும், பொறுப்பு வகிக்கும் தலைவர்களுக்கும், துணைத் தலைவருக்கும், அதிகாரிகளுக்கும் மனமார்ந்த நன்றியை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். உங்களைப் போன்ற நல்ல நிறுவனங்கள் இங்கு வருவதைத் தமிழ்நாட்டில் நல்லாட்சி நடைபெறுவதன் அடையாளமாகவே நான் பார்க்கிறேன். எங்கள் மீது நீங்கள் வைத்துள்ள நம்பிக்கையை நாங்கள் எப்போதும் காப்போம் என்று உறுதி அளிக்கிறேன்.

இந்திய அளவில், இரண்டாவது பெரிய பொருளாதாரமாகப் பல்வேறு தரவரிசைகளில் முன்னணி மாநிலமாகத் தமிழ்நாடு இருந்து வருகிறது. இந்த நிலையைத் தக்க வைத்துக்கொள்ள மட்டுமல்ல, இதனை மேலும் வளர்க்க விரும்புகிறோம். பெருமளவிலான முதலீடுகளை ஈர்க்க அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருகிறோம். தமிழ்நாட்டின் இளைஞர்களுக்கு அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகளை உருவாக்குவதன் மூலம், மாநிலத்தின் பொருளாதாரத்தைத் தொடர்ந்து வளர்ச்சிப்பாதையில் கொண்டு செல்ல எங்களது அரசு பல்வேறு முயற்சிகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக, கடந்த வாரம் பொருளாதார வல்லுநர்களுடன் நடைபெற்ற கலந்தாலோசனைக் கூட்டத்தில் கலந்துகொண்டு நான் பேசியுள்ளதைப் பத்திரிகை, ஊடகங்கள் வாயிலாக அறிந்திருப்பீர்கள்.

கடந்த இரண்டு ஆண்டுகளில் பல்வேறு பன்னாட்டு நிறுவனங்கள் தங்களது புதிய மற்றும் விரிவாக்கத் திட்டத்திற்கான முதலீடுகளைத் தமிழ்நாட்டில் மேற்கொண்டுள்ளன. முதலீடுகளை ஈர்க்கும் வகையில், உலகத் தரத்திலான உட்கட்டமைப்பு வசதிகளுடன் துறை சார்ந்த தொழில் பூங்காக்களை அமைத்து வருகிறோம். வளர்ந்து வரும் துறைகளில் முதலீடுகளை ஊக்குவிக்கும் வகையில், துறை சார்ந்த கொள்கை வெளியீடுகளை வெளியிட்டு வருகிறோம்.

அந்த வகையில், மாநிலத்தில் ஒருங்கிணைந்த, நம்பகமான, செலவு குறைந்த, நிலைக்கத்தக்க சரக்குப் போக்குவரத்தை மேம்படுத்துவதற்காகவும் திட்டங்களைத் தீட்டினோம். தமிழ்நாடு சரக்குப் போக்குவரத்துக் கொள்கை மற்றும் ஒருங்கிணைந்த சரக்குப் போக்குவரத்துத் திட்டம், 2023 கடந்த மார்ச் மாதம் என்னால் வெளியிடப்பட்டது. சரக்குப் போக்குவரத்துத் துறைக்கெனச் சென்னைக்கு அருகே

திருவள்ளூர் மாவட்டம், மப்பேடு கிராமத்தில் பல்முனையப் போக்குவரத்துப் பூங்கா அமைக்கப்பட உள்ளது. தொழிற்சாலைகள் நிறைந்த கோயம்புத்தூர் மாவட்டத்திலும் ஒரு பல்முனையச் சரக்குப் போக்குவரத்துப் பூங்கா அமைக்கப்படவுள்ளது.

உலக அளவில் ஏற்பட்டு வரும் தொழில்நுட்பத்தின் அதிவேக வளர்ச்சிக்கு ஏற்ப, நமது தொழில்துறையும் உரிய மாற்றங்களை மேற்கொண்டு, அதே வேகத்தில் பயணம் மேற்கொள்வது அவசியமானது. இதனை மனதில் கொண்டு, கடந்த ஆண்டு தமிழ்நாடு ஆராய்ச்சி, மேம்பாட்டுக் கொள்கையை நான் வெளியிட்டேன்.

நான்காம் தலைமுறைத் தொழில் வளர்ச்சிக்கு (Industry 4.0) ஏற்ப, நமது தொழிலகங்களையும், தமிழ்நாட்டு இளைஞர்களையும் தயார்படுத்திட வேண்டும் என்பதில் எங்கள் அரசு அதிக அக்கறை கொண்டுள்ளது. தமிழ்நாட்டு ஏழை, எளிய மாணவர்களுக்கும், வளர்ந்து வரும் புதிய தொழில்நுட்பங்களில் திறன் பயிற்சி அளித்து, அவர்கள் எதிர்கால வேலைகளைப் பெறுவதற்கான வாய்ப்புகளை அதிகரிக்கும் வகையில், எனது கனவுத் திட்டமான "நான் முதல்வன்" செயல்பாட்டில் இருப்பதை அனைவரும் அறிவீர்கள்.

இதன் ஒரு பகுதியாகத் தமிழ்நாடு அரசு, டாடா டெக்னாலஜீஸ், சர்வதேச நிறுவனங்களுடன் இணைந்து 71 அரசு தொழில் பயிற்சி நிலையங்களைத் (Government ITIs) தொழில்நுட்ப மையங்களாகத் தரம் உயர்த்தியுள்ளது.

தொழில்துறை புதுமைக் கண்டுபிடிப்புகள், தொடக்கநிலைத் தொழில் முனைவோர் விரைவில் வளர்ந்திடவும், தமிழ்நாட்டில் உயர் தொழில்நுட்ப வளர்ச்சியை அதிகரிப்பதற்கும், அரசு திட்டமிட்டு வருகிறது. நமது இளைஞர்கள், தொழில் வல்லுநர்கள் மற்றும் இளம் தொழில்முனைவோருக்கு, அதிநவீன, மேம்பட்ட தொழில்நுட்பங்களில் பயிற்சி அளித்திடவும் எங்கள் அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

குறிப்பிட்டுச் சொல்லவேண்டுமென்றால், தமிழ்நாடு அரசின் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்துடன் (TIDCO) இணைந்து மூன்று புதிய நிறுவனங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

- பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த பன்னாட்டு நிறுவனமான தசோ சிஸ்டம்ஸ் (Dassault Systems) உடன் இணைந்து, தமிழ்நாடு மேம்பட்ட உற்பத்தி முறைக்கான திறன்மிகு மையமும் –
- ஜெர்மன் நாட்டைச் சேர்ந்த பன்னாட்டு நிறுவனமான சீமென்ஸ் உடன் இணைந்து, தமிழ்நாடு திறன்மிகு & மேம்பட்ட உற்பத்தி மையமும் –
- அமெரிக்கப் பன்னாட்டு நிறுவனமான ஜி. இ. ஏவியேஷன் உடன் இணைந்து தமிழ்நாடு மேம்பட்ட உற்பத்திக்கான திறன்மிகு மையமும் அமைக்கப்பட்டுள்ளன.

திருப்பெரும்புதூர், ஓசூரில் உள்ள சிப்காட் தொழிற்பூங்காக்களில் உலகத்தரம் வாய்ந்த தொழில் புத்தாக்க மையங்கள் (Industrial Innovation Centres) அமைக்கப்பட்டுள்ளன. இந்த வசதி வாய்ப்புகளை அனைத்துத் தொழில் நிறுவனங்களும் பயன்படுத்தி, தங்களது தொழில் வளர்ச்சியை மேம்படுத்திக்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

கடந்த சில ஆண்டுகளாகவே, ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு தொடர்பான உலகளாவிய திறன் மையங்கள் (Global Capability Centres) அதிகரித்துள்ளதாக அறிகிறோம். தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், 2021ஆம் ஆண்டிலிருந்து, இதுவரை, முப்பதுக்கும் மேற்பட்ட GCCக்கள் தமது புதிய நிறுவனங்களையோ அல்லது விரிவாக்கத் திட்டங்களையோ நிறுவியுள்ளன.

இந்த மையங்கள் மூலம் 47 ஆயிரம் நபர்களுக்கு உயர்தரத் திறன் மிகுந்த வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன என்பது மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது. அடுத்த 3 அல்லது 4 ஆண்டுகளில், தமிழ்நாட்டில் உள்ள GCCக்களின் எண்ணிக்கை பல மடங்கு உயரும் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

அண்மையில் வெளியிடப்பட்ட குஷ்மேன் & வேக்ஃபீல்ட் அறிக்கையின்படி, பொறியியல் பட்டதாரிகளின் இருப்பு, வணிகம் புரிவதற்கும், வாழ்வதற்கும் நிலவும் எளிதான சூழல், நல்ல நிருவாகம் போன்ற காரணிகளால், இந்தியாவிலேயே GCCக்களுக்கான முதல் 2ஆம் அடுக்கு நகரமாகக் கோயம்புத்தூர் தர வரிசைப்படுத்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

அந்த வகையில், சரக்குப் போக்குவரத்து மற்றும் விநியோகச் சங்கிலி மேலாண்மையில், உலகளாவிய முன்னணி நிறுவனமான UPS, சென்னை போரூரில் 400க்கும் மேற்பட்ட தொழில்நுட்ப வல்லுநர்களுக்கு, குறிப்பாக, கிராமப்புற இளைஞர்களுக்குத் திறன் பயிற்சி அளித்துப் பணியமர்த்தும் திட்டத்துடன் அமைத்துள்ள இந்தத் தொழில்நுட்ப மையத்தை (Technology Centre) திறந்து வைத்ததில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

எனது கனவுத் திட்டமான "நான் முதல்வன்" திட்டத்தின்கீழ்த் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களுக்கு, இந்த மையத்தில் உயர் தொழில்நுட்ப வேலைவாய்ப்புப் பயிற்சி (Internship) பெறுவதற்கான கடிதங்களை வழங்கும் வாய்ப்பும் கிட்டியது, உள்ளபடியே எனக்குப் பெரும் மகிழ்ச்சி அளித்துள்ளது.

கொரோனா நெருக்கடிக்குப் பிறகும், தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி மிகச் சீராக இருப்பதாகவும், உயர்ந்து வருவதாகவும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன. நேற்றைய தினம் "தி இந்து" ஆங்கில நாளிதழ் வெளியிட்ட செய்தியை உங்களில் பலரும் படித்திருப்பீர்கள்.

தமிழ்நாடு மாநிலத் திட்டக்குழுவின் வழிகாட்டுதலுடன், மாநிலப் பொருளாதார மற்றும் புள்ளியியல் துறை சார்பில் சில ஆய்வுகள் நடத்தப்பட்டன. அப்போது கிடைத்த புள்ளி விவரங்களை வைத்துத்தான் 'இந்து நாளிதழ்' அந்தச் செய்தியை வெளியிட்டுள்ளது.

கொரோனா என்ற கொடுமையான காலக்கட்டத்தில்தான் நாங்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தோம். கொரோனா மருத்துவ நெருக்கடியை மட்டுமல்ல, நிதி நெருக்கடியையும் ஏற்படுத்தியது. ஆனால், கொரோனாவையும் வென்றோம்; நிதி நெருக்கடியையும் சேர்த்தே வென்றுள்ளோம்.

2011-2012 நிதியாண்டு முதல் கொரோனாவுக்கு முந்தைய காலம் வரை மாநிலத்தில் பொருளாதார வளர்ச்சி ஏற்ற இறக்கங்களுடன் 5.80 விழுக்காடாக இருந்தது.

தற்போது வெளியாகி உள்ள தகவல்களின்படி, நிலையான விலைகளின் அடிப்படையில், 2022-2023ஆம் நிதியாண்டில் தமிழ்நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 14 இலட்சத்து 53 ஆயிரத்து 321 கோடி ரூபாயாகும். வளர்ச்சி விகிதத்தில் இது 8.19 விழுக்காடாகும்.

2021-2022ஆம் ஆண்டில், நடப்பு விலைகளில் மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மகாராஷ்டிரா முதலிடத்தையும், தமிழ்நாடு இரண்டாவது இடத்தையும் பிடித்துள்ளன.

2021-2022, 2022-2023இல் அகில இந்திய அளவிலான பணவீக்கம் 9.31 விழுக்காடு, 8.82 விழுக்காடாக இருந்த நிலையில், தமிழ்நாட்டின் பணவீக்கக் குறியீடு 2021-2022இல் 7.92 விழுக்காடாகவும், 2022-2023இல் 5.97 விழுக்காடாகவும் குறைந்துள்ளது என்றும் இந்த ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது புள்ளிவிவரம் மட்டுமல்ல; இந்த ஆட்சிக்குக் கிடைத்த நற்சாட்சிப் பத்திரம்!

தமிழ்நாட்டை 2030ஆம் ஆண்டுக்குள் 1 டிரில்லியன் டாலர் பொருளாதாரமாக மாற்ற வேண்டும் என்று நான் சொல்லி வருகிறேன். இந்த அளவுகோலை 2034ஆம் ஆண்டுக்குள் நாம் எட்டிவிட முடியும் என்ற நம்பிக்கையை 'தி இந்து' நாளிதழ் உறுதி செய்து எழுதி இருக்கிறது. இந்த நல்ல செய்தியை உங்களோடு பகிர்ந்துகொண்டு மகிழ்ச்சியடைவதோடு, 2024ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நடைபெற உள்ள உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் கலந்துகொள்ள வேண்டும் என உங்களுக்கு அன்போடு அழைப்பு விடுக்கிறேன்.

உங்களது தொழில் முயற்சிகள் வெற்றி பெற எனது வாழ்த்துக்களை மீண்டும் ஒரு முறை தெரிவித்துக்கொண்டு எனது உரையை நிறைவு செய்கிறேன்.

செஸ் கிராண்ட் மாஸ்டர் பிரக்ஞானந்தா அவர்களுக்கு ரூ.30 இலட்சம் உயரிய ஊக்கத்தொகை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் வழங்கினார் – 30.08.2023

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 30.08.2023 அன்று, முகாம் அலுவலகத்தில், அண்மையில் அஜர்பைஜான் நாட்டில் நடைபெற்ற FIDE உலக கோப்பை செஸ் சாம்பியன்ஷிப் போட்டியில் சிறப்பாக விளையாடி இரண்டாவது இடத்தைப் பெற்றுச் சாதனை படைத்த செஸ் கிராண்ட் மாஸ்டர் பிரக்ஞானந்தா அவர்களைப் பாராட்டி ஊக்குவிக்கும் விதமாக உயரிய ஊக்கத்தொகையான ரூ.30 இலட்சத்திற்கான காசோலை, நினைவுப் பரிசு வழங்கி, வாழ்த்தினார்.

விளையாட்டுத் துறையில் இந்தியாவிலேயே சிறந்த மாநிலமாகத் தமிழ்நாட்டை உருவாக்கிடவும், அகில இந்திய அளவிலும் பன்னாட்டு அளவிலும் நடைபெறும் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் பங்குகொண்டு வெற்றி பெறும் வகையில் அவர்களுக்கு உரிய பயிற்சி அளித்தல், உயரிய ஊக்கத்தொகை வழங்குதல், விளையாட்டிற்கான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் எனப் பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளைத் தமிழ்நாடு அரசு எடுத்து வருகிறது. மேலும், 44ஆவது செஸ் ஒலிம்பியாட் போட்டியை அனைவரும் பாராட்டும் வகையில் தமிழ்நாட்டில் சிறப்பாக நடத்தியது, மாநிலத்தில் அதிநவீன விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திட பெருநிறுவனங்கள், தனிப்பட்ட நன்கொடையாளர்களிடமிருந்து நன்கொடை பெற்றுத் "தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை" உருவாக்கியது, சர்வதேச விளையாட்டுப் போட்டிகளைத் தமிழ்நாட்டில் நடத்திடத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவது போன்ற பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

சர்வதேச செஸ் விளையாட்டு வீரர் பிரக்ஞானந்தா அவர்கள், 3 வயது முதல் செஸ் விளையாடத் தொடங்கி, 5 வயது முதல் செஸ் தொடர்களில் பங்கேற்று வருகிறார். 10 வயதில் சர்வதேச மாஸ்டர் பட்டம் வென்று இளம் வயதில் இப்பட்டத்தை வென்ற வீரர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார். 2013ஆம் ஆண்டு 8 வயதுக்குட்பட்ட உலக சாம்பியன்ஷிப் பட்டத்தையும், 2015ஆம் ஆண்டு 10 வயதுக்குட்பட்ட உலக சாம்பியன்ஷிப் பட்டத்தையும் வென்றார். மேலும், 12 வயதில் கிராண்ட்மாஸ்டர் பட்டம் பெற்று அன்றைய காலத்தில் குறைந்த வயதில் கிராண்ட்மாஸ்டர் பட்டம் பெற்ற இரண்டாவது இளம் வீரர் என்ற சாதனையும், 16 வயதில் முன்னாள் உலக சாம்பியனை வீழ்த்தி சாதனையும் படைத்துள்ளார்.

பிரக்ஞானந்தா அவர்கள், இளம் வயதில் இந்தியாவில் இருந்து உலக கோப்பை தொடரின் இறுதி போட்டிக்கு முன்னேறிய வீரர் என்ற சாதனையைப் படைத்துள்ளார். செஸ் CANDIDATE தொடரில் விளையாடத் தேர்வாகி உள்ள இரண்டாவது இந்திய வீரர் என்ற பெருமையைப் பெற்றுள்ள பிரக்ஞானந்தா அவர்கள், FIDE செஸ் ஒலிம்பியாட் தொடரில் பங்கேற்றுத் தனி வீரராகவும் வெண்கலப் பதக்கம் வென்றுள்ளார். கடந்த ஆண்டு ஆசிய செஸ் சாம்பியன்ஷிப் தொடரில் பங்கேற்றுத் தங்கப் பதக்கமும் வென்றுள்ளார்.

அண்மையில் அஜர்பைஜான் நாட்டின் பாகு நகரில் நடைபெற்ற FIDE உலக கோப்பை செஸ் சாம்பியன்ஷிப் போட்டியில் சிறப்பாக விளையாடி இரண்டாவது இடத்தைப் பெற்ற பிரக்ஞானந்தா அவர்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வீடியோகால் வாயிலாகத் தொடர்புகொண்டு தனது வாழ்த்துக்களைத் தெரிவித்திருந்தார். மேலும், உலக கோப்பை செஸ் சாம்பியன்ஷிப் போட்டியில் இரண்டாவது இடத்தைப் பெற்றுச் சாதனை படைத்து தமிழ்நாடு திரும்பியபிரக்ஞானந்தா அவர்களுக்குச் சென்னை விமான நிலையத்தில் தமிழ்நாடு அரசின் சார்பில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

சர்வதேச அளவில் சிறப்பான முறையில் செஸ் போட்டிகளில் சாதனை படைத்து வரும் பிரக்ஞானந்தா அவர்களைப் பாராட்டி ஊக்குவிக்கும் வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உயரிய ஊக்கத்தொகையான ரூ.30 இலட்சத்திற்கான காசோலை, நினைவுப் பரிசு வழங்கி வாழ்த்தினார்.

படமும் / செய்தியும்

மழைநீர் வடிகால்வாய்கள் அமைக்கும் பணிகள் தொடர்பான ஆய்வுக் கூட்டம்

சென்னை, தலைமைச் செயலகத்தில், தலைமைச் செயலாளர் திரு. சிவ்தாஸ் மீனா, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் வெள்ளத் தடுப்பு நடவடிக்கைகள், வடகிழக்குப் பருவமழையை எதிர்கொள்ள சென்னை, புறநகர் பகுதிகளில் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணிகள் தொடர்பாக ஆய்வுக் கூட்டம் 02.09.2023 அன்று நடைபெற்றது.

சென்னை, கொளத்தூரில் ரூ.18.40 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 30.08.2023 அன்று, கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் தமிழ்நாடு மின்உற்பத்தி, மின்பகிர்மானக் கழகத்தின் மின்மாற்றி இருக்குமிடத்தைச் சுற்றிப் பாதுகாப்பினை ஏற்படுத்தும் வகையில் ரூ.15 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள பாதுகாப்புக் கட்டமைப்புகள், ரூ.18.40 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள் ஆகியவற்றைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, பெருநகரச் சென்னை மாநகராட்சியின் சார்பில் ரூ.1.09 கோடி மதிப்பீட்டில் 5 இடங்களில் மழைநீர் உறிஞ்சும் பூங்காக்கள், நீர்வளத்துறையின் சார்பில் ரூ.91.36 கோடி மதிப்பீட்டில் தணிகாசலம் நகர் கால்வாயில் திறந்த, மூடிய நீர்வழித்தடம் அமைக்கும் பணி, ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை மண்டல உதவி ஆணையர் அலுவலகக் கட்டடம் ஆகிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

மின்மாற்றியினைச் சுற்றி அமைக்கப்பட்டுள்ள பாதுகாப்புக் கட்டமைப்புகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தல்

பெருநகரச் சென்னை மாநகராட்சி சார்பில் "நமக்கு நாமே" திட்டத்தின்கீழ், ரூ.15 இலட்சம் மதிப்பீட்டில் எஸ்.ஆர்.பி. கோயில் வடக்குப் பிரதான

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார் – 30.08.2023

சாலை, தெற்குப் பிரதான சாலை, ஜவஹர் நகர் முதல் பிரதான சாலை ஆகிய மூன்று இடங்களில் தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் மின்பகிர்மானக் கழகத்தின் மின்மாற்றி இருக்குமிடத்தைச் சுற்றிப் பாதுகாப்புக் கட்டமைப்புகள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் எஸ்.ஆர்.பி. கோயில் வடக்கு பிரதான சாலையில் மின்மாற்றியினைச் சுற்றி அமைக்கப்பட்டுள்ள பாதுகாப்புக் கட்டமைப்பினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தல்

கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திரு.வி.க.நகர் பேருந்து நிலையம் அருகில் ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியின்கீழ், ரூ.15.40 கோடி மதிப்பீட்டில் பல்லவன் சாலையில் பெரியார் நகர், ஜவஹர் நகர், ஜி.கே.எம். காலனி ஆகிய பகுதிகளுக்கு 1,110 மீட்டர் நீளத்திலும், ரூ.1.25 கோடி மதிப்பீட்டில் எஸ்.ஆர்.பி.கோயில் (வடக்கு), ராமமூர்த்தி காலனியிலிருந்து பல்லவன் சாலை வரை

175 மீட்டர் நீளத்திலும், ரூ.1.75 கோடி மதிப்பீட்டில் ஆண்டாள் அவென்யூ பகுதியிலிருந்து பல்லவன் சாலை வரை 465 மீட்டர் நீளத்திலும், என மொத்தம் ரூ.18.40 கோடி மதிப்பீட்டில் 1,750 மீட்டர் நீளத்தில் நடைபெற்று வரும் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பெருநகரச் சென்னை மாநகராட்சியின் சார்பில் 5 மழைநீர் உறிஞ்சும் பூங்காக்கள் அமைக்கும் பணிக்கு அடிக்கல் நாட்டுதல்

வி.வி.நகர் 2ஆவது தெரு பூங்காவில் ரூ.15 இலட்சம் மதிப்பீட்டிலும், பூம்புகார் நகர் 4ஆவது தெரு பூங்காவில் ரூ.26 இலட்சம் மதிப்பீட்டிலும், பெரியார் நகர் 29ஆவது தெரு பூங்காவில் ரூ.26 இலட்சம் மதிப்பீட்டிலும், ஜவஹர் நகர் 5ஆவது பிரதான சாலை பூங்காவில் ரூ.28 இலட்சம் மதிப்பீட்டிலும், செல்வி நகர் 5ஆவது தெரு விளையாட்டு மைதானத்தில் ரூ.14 இலட்சம் மதிப்பீட்டிலும் என மொத்தம் ரூ.1.9 கோடி மதிப்பீட்டில் 4 பூங்காக்கள், 1 விளையாட்டு மைதானம் ஆகியவற்றில் 5 மழைநீர் உறிஞ்சும் பூங்காக்கள் (Sponge Park) அமைக்கும் பணிகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார். இப்பூங்காக்களில் 5 மழைநீர் உறிஞ்சும் பூங்காக்கள் அமைக்கப்படுவதுடன், பசுமையான செடிகள், புல்வெளிகள், சுற்றுச்சுவர், சிறுவர்களுக்கான விளையாட்டு உபகரணங்கள், நடைபாதை, இருக்கைகள், மின்விளக்குகள், கண்காணிப்புக் கேமராக்கள், குடிநீர்வசதி, பாதுகாவலர் அறை உள்ளிட்ட பல்வேறு பணிகளும் மேற்கொள்ளப்படும்.

கொளத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் அருகில் உள்ள அனிதா அச்சீவர்ஸ் அகாடமியைப் பார்வையிட்டார்

கொளத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் அருகில் உள்ள அனிதா அச்சீவர்ஸ் அகாடமியில் மாணவ, மாணவியர்களுக்கு TALLY பயிற்சி வகுப்புகள், பெண்களுக்குத் தையற் பயிற்சி வகுப்புகள் நடைபெறும் இடத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டார்.

கொளத்தூர், ஹரிதாஸ் சாலையில் உள்ள தாமரைக்குளம் பூங்காவைப் பார்வையிட்டார்

கொளத்தூர், ஹரிதாஸ் சாலையில் பெருநகரச் சென்னை மாநகராட்சியின் தாமரைக் குளம் பூங்காவை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு, அங்கு நடைப்பயிற்சி மேற்கொண்ட பொதுமக்களிடம் கலந்துரையாடினார்.

தணிகாசலம் நகர் கால்வாயில் திறந்த, மூடிய நீர்வழித்தடம் அமைக்கும் பணிகள், தமிழ்நாடு உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை உதவி ஆணையர் அலுவலகக் கட்டடம் கட்டும் பணி ஆகியவற்றிற்கு அடிக்கல் நாட்டுதல்

நீர்வளத்துறையின் சார்பில் ரூ.91.36 கோடி மதிப்பீட்டில் சென்னை – மாதவரம், அயனாவரம் வட்டங்களில் அமைந்துள்ள தணிகாசலம் நகர் கால்வாயில் திறந்த, மூடிய நீர்வழித்தடம் அமைக்கும் பணிகள், கொளத்தூர், நேர்மை நகரில் ரூ.2 கோடி மதிப்பீட்டில் 758.10 சதுர மீட்டர் பரப்பளவில் தமிழ்நாடு உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை மண்டல உதவி ஆணையர் அலுவலகக் கட்டடம் கட்டும் பணி ஆகியவற்றிற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

படமும் / செய்தியும்

கலைஞர் அவர்களுக்கு வழங்கப்பட்ட நினைவுப் பரிசுகள் மற்றும் "கலைஞர் வழக்கொழித்த கைரிக்சா" குறித்த சிறப்பு கண்காட்சி

சென்னை, எழும்பூர், அரசு அருங்காட்சியகம், வளர்கலைக் கூடத்தில், மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் திரு. மு.பெ. சாமிநாதன் அவர்கள், அரசு அருங்காட்சியகங்கள் துறை சார்பில், முத்தமிழறிஞர் "கலைஞர்" அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு "கலைஞர்" அவர்களுக்கு வழங்கப்பட்ட நினைவுப் பரிசுகள், கலைஞர் வழக்கொழித்த கைரிக்சா குறித்த சிறப்புக் கண்காட்சியை 05.09.2023 அன்று திறந்துவைத்தார்.

செய்தித்துறையின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம்

மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் திரு. மு.பெ. சாமிநாதன் அவர்கள் தலைமையில், துறையின் செயல்பாடுகள் குறித்து ஆய்வுக் கூட்டம் சென்னை, தலைமைச் செயலகத்தில், 05.09.2023 அன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் மரு. இரா. செல்வராஜ், இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு. த.மோகன், இ.ஆ.ப., அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

“தியாகச் செம்மல்”

அமைதியின் சிகரமாக, பொறுமையின் கடலாக, தியாகச் செம்மலாக விளங்கி – மறைந்தும் என்றென்றும் நம் நெஞ்சத்தில் மறையாமல் இருக்கின்ற உத்தமர் காந்தியடிகளுடைய பிறந்த நாள் விழாவில் - அவர் நினைவைப்போற்றவும், அவர் விட்டுச் சென்றுள்ள பணிகளை அட்டியின்று செய்து முடிக்கவும் உறுதியெடுத்துக் கொள்கின்ற விழாவாக இந்த விழா அமைந்திருக்கின்றது.

அவருக்கு விழாவெடுக்கும் வேளையில் அவருடைய கொள்கைகளை நாம் எந்த அளவிற்குப் பின்பற்றுகிறோம் என்ற கேள்வியை நமக்கு நாமே கேட்டுக் கொள்வதற்கு இந்த நிகழ்ச்சியைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்பது என் ஆவலாகும்.

இந்திய நாட்டின் விடுதலைக்காக அவர் போர்க்கொடி தூக்குவதற்கு முன்பே - அவர் நிறவெறியிலிருந்து மக்களைக் காப்பாற்றுவதற்காக த்தென்னாப்பிரிக்காவிலே ஒரு பெரிய போராட்டத்தை நடத்தியவராவார்.

அவர் தென்னாப்பிரிக்காவில் நடத்திய ஒரு பத்திரிகையின் பெயர் Indian opinion என்பதாகும். அந்தப் பத்திரிகையில் 05.06.1909 அன்று காந்தியடிகள் தமிழர்கள் குறித்து ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார். அந்தக் கட்டுரையிலே அவர் குறிப்பிடுகிறார்.

தென்னாப்பிரிக்க சத்தியாகிரகப் போராட்டத்தில் தமிழர்கள் மேற்கொண்ட பங்கிற்கு ஈடு இணையாக வேறு எந்த இந்தியரையும் என்னால் குறிப்பிட முடியாது என்று குறிப்பிடுகிறார்.

அதனால்தான் தமிழை நன்றாகக் கற்றுத் தமிழர்களுடன் நெருங்கிய தொடர்புகொள்ள வேண்டுமென்று என் மனம் விரும்புகிறது. சென்ற ஒருமாதக் காலமாகவே நான் தமிழை மிகுந்த அக்கறையுடன் கற்று வருகிறேன். மேலும் கூறுகிறார்,

எவ்வளவுக்கெவ்வளவு ஆழ்ந்து அந்த மொழியைப் பயில்கிறேனோ, அவ்வளவுக்கவ்வளவு அந்த மொழியின் அழகை உணருகிறேன்.

மிக நேர்த்தியான, இனிமையான மொழி, தமிழ் மொழி, தமிழர்களில் சிறந்த சிந்தனையாளர்களும் மேதைகளும் அன்றும் இருந்தார்கள், இன்றும் நிறைய பேர் இருக்கிறார்கள். மேலும் காந்தியடிகள் எழுதுகிறார்,

இதுதான் மிகவும் முக்கியமானது. இந்தியா முழுவதும் ஒருமைப்பாட்டை அடையவேண்டுமென்றால், சென்னை மாகாணத்திற்கு (சென்னை மாகாணம் என்பது முன்பிருந்த பெயர்) தமிழ்நாட்டிற்கு வெளியே இருப்பவர்களும் தமிழ் மொழியை விரும்பிக் கற்க வேண்டும்.

காந்தியடிகளுடைய பெரும் விருப்பம் தீண்டாமை என்ற கொடுமை அகற்றப்பட வேண்டும் என்பதுதான்.

தீண்டாமை ஒரு பயங்கரமான அசத்தியம், தீண்டாமை ஒழிப்பு இயக்கத்தை நான் தொடங்கியிருப்பதின் நோக்கமே தெள்ளத் தெளிவானது, என்று உத்தமர் காந்தியடிகள் பலமுறை உரைத்திருக்கிறார்.

அத்தகைய காந்தியடிகளுடைய கொள்கைகளைப் போற்றி வருகின்ற அரசாக இந்த அரசு இருக்கிறது.

*– முத்தமிழறிஞர் **கலைஞர்** அவர்கள், தமிழ்நாடு அரசின் சார்பில்*
02.10.1999 அன்று நடைபெற்ற அண்ணல் காந்தியடிகளின்
131ஆவது பிறந்த நாள் விழாவில் ஆற்றிய உரை...

அக்டோபர் 30:
பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் பிறந்த நாள்

"பசும்பொன் திருமகனார் புகழ் வாழ்க"

பசும்பொன் என்பது தேவர் அவர்கள் பிறந்த ஊர் என்று சொல்லப்படுகிறது அல்ல. பசும்பொன் என்பது தேவர் அவர்களுடைய உள்ளத்தைக் குறிப்பிடுகிற ஒரு சொல்லாகும். அத்தகைய உள்ளத்திற்குச் சொந்தக்காரரான தேவர் திருமகனார் அவர்களுக்கு நாம் நூற்றாண்டு விழா நடத்துகின்றோம். ஒரு கட்சியின் சார்பாக, ஆளுங்கட்சியின் சார்பாக எடுக்கின்ற விழா என்று கொள்ளாமல் – ஆளுங்கட்சி அல்லாதவர்களும் எல்லாக் கட்சியிலே உள்ளவர்களும் இணைந்து நடத்த முடியாவிட்டாலும் கூட அவரவர்கள் தங்களுடைய அன்பை, மரியாதையை, பாசத்தை வெளிப்படுத்துகின்ற வகையில் இன்றைய தினம் இந்த நூற்றாண்டு விழாவிலே பங்குபெற்றுத் தங்களுடைய வணக்கத்தையும், வாழ்த்துக்களையும் தேவர் திருமகனாருக்குச் செலுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த விழாவையொட்டி என்னென்ன காரியங்கள் தமிழ்நாடு அரசால் நடத்தப்பட்டிருக்கிறது என்பதைச் சொல்ல விரும்புகின்றேன்.

- நெல்லை மாவட்டத்தில் மேலநீலிதநல்லூர், இராமநாதபுரம் மாவட்டத்தில் கமுதி, மதுரை மாவட்டத்தில் உசிலம்பட்டி ஆகிய இந்த மூன்று இடங்களில் பசும்பொன் தேவருடைய திருப்பெயரால் மூன்று கல்லூரிகள் உருவாக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.
- மதுரை ஆண்டாள்புரம் அருகே தொழிற்சங்கத்தோடு தேவர் அவர்களுக்கு எவ்வளவு தொடர்பு இருந்தது. அந்தத் தொழிலாளர்கள் அடக்குமுறைக்கு ஆளானபோது அவர்களை விடுவிக்க வேண்டுமென்பதற்காக, அவர் எத்தகைய போராட்டத்தில் ஈடுபட்டார் என்பதற்கு அடையாளமாகத்தான் அந்தப் போராட்டத்தில் ஈடுபட்டபோது மதுரையிலே ஆண்டாள்புரத்திற்கு அருகே அவர் கைது செய்யப்பட்டார் என்பதை நினைவாகக் கொண்டு மதுரை ஆண்டாள்புரம் அருகே உள்ள மேம்பாலத்திற்கு "முத்துராமலிங்கத் தேவர் பாலம்" என்று பெயர் சூட்டியவனும் நான்தான்.
- காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தில் தேவர் திருமகன் திருப்பெயரால் மாணவச் செல்வங்களுக்கு உதவிட ரூ.25 இலட்சம் முதலீட்டில் ஒரு அறக்கட்டளை உருவாக்கப்பட்டிருக்கிறது.
- இந்த நூற்றாண்டு விழாவையொட்டி ரூ.10.10 இலட்சம் செலவில் பசும்பொன் தேவர் அவர்களுடைய இல்லம் புதுப்பிக்கப்பட்டது.
- ரூ.9.20 இலட்சம் செலவில் நூற்றாண்டு விழா வளைவு கட்டப்பட்டுள்ளது.
- ரூ.9 இலட்சம் செலவில் புகைப்படக் கண்காட்சிக் கூடம் கட்டப்பட்டுள்ளது.
- ரூ.3.20 இலட்சம் செலவில் அணையா விளக்கு அவருடைய நினைவிடத்திற்குப் பக்கத்திலே அமைக்கப்பட்டுள்ளது.
- ரூ.4 இலட்சம் செலவில் நூலகக் கட்டடம் கட்டப்பட்டுள்ளது.
- ரூ.5 இலட்சம் செலவில் தலை முடி இறக்கும் கூடம் கட்டப்பட்டுள்ளது.
- ரூ.9 இலட்சம் செலவில் ஆண், பெண்களுக்கும் தனித்தனியே கழிப்பிட வசதிகளும் தண்ணீர் வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

- ரூ.5 இலட்சம் செலவில் அவர்கள் கொண்டு வருகின்ற பால் குடங்களை வைக்கின்ற மண்டபம் கட்டப்பட்டுள்ளது.
- ரூ.5 இலட்சம் செலவில் முளைப்பணி மண்டபம் கட்டப்பட்டுள்ளது.

இத்தனையும் இந்த விழாவிற்கு வருகின்றவர்கள் – நினைவிடத்திற்கு வருகின்றவர்களின் வசதிக்காகத் தமிழ்நாடு அரசின் சார்பாகச் செய்யப்பட்டிருக்கிறது.

- ரூ.64 இலட்சம் செலவில் கமுதி முதுகுளத்தூர் சாலையிலிருந்து மருதங்கநல்லூர் கிராமம் வழியாகப் பசும்பொன்னுக்கு ஏறத்தாழ 5 கிலோ மீட்டருக்குச் சாலை அமைக்கப்பட்டுள்ளது.
- ரூ.28.40 இலட்சம் செலவில் பசும்பொன் கிராமத்திலிருந்து கமுதிக்குச் செல்லும் ஏறத்தாழ இரண்டரை கிலோ மீட்டர் தூரத்திற்கு மாற்றுச் சாலை அமைக்கப்பட்டுள்ளது.
- ரூ.2.20 இலட்சம் செலவில் பசும்பொன் தேவர் திருமகனார் நினைவிடத்தைச் சுற்றியிருந்த கல்சாலை தார்ச் சாலையாக மாற்றப்பட்டுள்ளது.
- ரூ.41.70 இலட்சம் செலவில் நினைவிடத்திற்கு முன்பாக வாழ்ந்து வந்த 73 ஆதிதிராவிட மக்களுக்கு அனைத்து அடிப்படை வசதிகளோடு கூடிய புதிய குடியிருப்புக்கள் கட்டப்பட்டிருககின்றன.

புதியதாகக் கட்டப்பட்டுள்ள ஆதிதிராவிடர் குடியிருப்புகளில் ரூ.2.05 கோடிச் செலவில் பசும்பொன் கிராமத்தில் இந்த நூற்றாண்டு விழாவையொட்டிப் பல்வேறு காரியங்கள் நடைபெற்றிருக்கின்றன என்பதனைத் தெரிவித்துத் தேவர் புகழ் வாழ்க என்று கூறி விடைபெறுகிறேன்.

– முத்தமிழறிஞர் **கலைஞர்** அவர்கள்,
பசும்பொன்னில் 30.10.2007 அன்று நடைபெற்ற
பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின்
நூற்றாண்டு விழாவில் ஆற்றிய உரை...

அக்டோபர் 1 : நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்கள் பிறந்த நாள்

“ஆருயிர் நண்பர்”

சிவாஜியோடு கொண்ட அந்த நட்பும், அன்பும் ஏதோ பார்த்தோம், பழகினோம், ஒரு இலையிலேயே அமர்ந்து சாப்பிட்டோம், இருவருக்கும் அவருடைய அன்னைதான், என் அன்னையாக, என் அன்னைதான் அவருடைய அன்னையாக-இருவருக்கும் ஒரு தாய்தான் என்ற அளவிலே பழகினோம்.

சிவாஜி ஏற்றுக் கொண்ட தலைவர் வேறு என்றாலும், நான் ஏற்றுக் கொண்ட தலைவர் வேறு என்றாலும், நான் ஏற்றுக் கொண்ட கொள்கை வேறு என்றாலும், அவர் ஏற்றுக் கொண்ட கொள்கை வேறு என்றாலும், நாங்கள் அவைகளுக்கெல்லாம் அப்பாற்பட்டு, அனைத்தையும் கடந்து நாங்கள் இருவரும் ஒரே இதயத்திற்குத்தான் சொந்தக்காரர்களாக இருந்தோம்.

புறநானூற்றிலே வருகின்ற ஒரு செய்யுள், ஒரு கவிதை, அதை நான் எளிய நடையிலே எழுதியிருந்தேன். அதற்கு உயிர் கொடுத்து ஒவ்வொரு நாடக மேடையிலும் பரப்பியவர் என்னுடைய ஆருயிர் நண்பர் சிவாஜி கணேசன்.

நான் எழுதிய அந்தக் கவிதை வரிகளை உயிர் கொடுத்து, அந்தக் கவிதையையே காப்பாற்றியவர் என்னுடைய அருமைத் தோழர், ஆருயிர் நண்பர், என்றும் தமிழாக வாழக்கூடிய, தமிழ் உரைநடையாக வாழக்கூடிய, என்றும் கதாபாத்திரத்திற்கு உயிரூட்டக்கூடிய, என்றும் என்னோடு கலந்துவிட்ட, இன்றும் கலந்திருக்கின்றவர் சிவாஜிதான்.

– முத்தமிழறிஞர் **கலைஞர்** அவர்கள்,
21.07.2006 அன்று நடிகர் திலகம்
சிவாஜி கணேசன் அவர்களின் சிலை
திறப்பு விழாவில் ஆற்றிய உரையிலிருந்து....

கட்டுரை

மொழிபெயர்ப்பு இலக்கியங்களும் தமிழும்

சா. தேவதாஸ்

இருமொழிகள் பேசப்படும் சூழலிலேயே மொழிபெயர்ப்பு அவசியமாகி விடுகிறது. 24 மொழிகள் புழங்கிடும் இந்தியச் சூழலில் அதன் தேவையைப் பற்றிச் சொல்லவே வேண்டியதில்லை. இது அன்றாட வாழ்க்கைத் தேவை சார்ந்தது. பண்பாட்டு ரீதியிலான பரிவர்த்தனைக்கு அது முக்கிய அச்சாக இருக்கும்போது, எழுத்தின் அளவுக்கு மொழிபெயர்ப்பாளனின் பங்கு பணியும் அத்தியாவசியமாகிவிடுகிறது. பல்வேறு மொழிகள் பேசுவோரிடையே பல்வேறு பண்பாடுகள் சார்ந்தோரிடையே அது புரிதலையும் இணக்கத்தையும் சாத்தியப்படுத்தும்.

சிறந்த எழுத்தாளரும் மொழிபெயர்ப்பாளருமான க.நா. சுப்ரமண்யம், ஆந்த்ரே ழீட் என்னும் பிரெஞ்சு எழுத்தாளரின் "குறுகிய வழி" நாவலைத் தமிழில் தரும்போது அதற்கான தனித்துவமான காரணத்தைக் குறிப்பிடுகிறார்.

"பிரெஞ்சு நாவல் உலகத்திலே உருவத்துக்கும் நடைக்கும் சிறப்பான முக்கியத்துவம் உண்டு. உருவத்திலும் நடையிலும் "குறுகிய வழி" எனும் இந்நாவல் மிகவும் சிறப்பானது. ஒரு எளிய காதல் கதையைப் பலகோணங்களில் நின்று நிறுத்தி அழகாக நடத்தி நமக்குத் தந்திருக்கிறார். ஆசிரியர் ஸ்டெந்தால், பால்ஸாக், ஃப்ளோபேர் முதலிய மேதைகளின் நாவல்களுக்கு ஈடானதொரு நாவலாக அமைந்துவிட்டது இது. தமிழ் மொழிபெயர்ப்பு வெளிவருவதென்பது தமிழர்கள் செய்த பாக்கியம் என்றுதான் சொல்ல வேண்டும்."

நாவல் என்றால் என்னென்ன இலக்கணங்கள் அவசியம் என்று பண்டிதர்கள் சொல்லுகிறார்களோ அத்தனை இலக்கணங்களையும் மீறியது' அது என்பதையும் குறிப்பிடுகிறார். ஆக நாவல் என்னும் இலக்கிய வகைமையின் வளர்ச்சியின் போக்கில், தமிழ் நாவலும் இயங்க வேண்டும் என்றும் அக்கறையோடு க.நா.சு. இதனை மேற்கொண்டுள்ளார் என்று சொல்ல வேண்டும்.

மொழியாக்கம் பரிவிறக்கத்தின் மொழி' என்றொரு வாசகம் இருக்கிறது.

180 ஆண்டுகளுக்கு முன் கிறித்துவ மதத்தைப் பரப்பும் பொருட்டுத் தமிழகத்தின் சாயர்புரத்தில் 8 ஆண்டுகள் பணியாற்றிவிட்டு, பிற்காலத்தில் ஆக்ஸ்ஃபோர்ட் பல்கலைக்கழகத்தில் தமிழ், தெலுங்குப் பேராசிரியராக விளங்கிய ஜி.யு.போப், திருக்குறள், திருவாசகம், நாலடியார், புறநானூறு,

மணிமேகலை ஆகிய பனுவல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். தமிழ் மாணவன் என்று பெருமைப்பட்டுள்ளார். திருவள்ளுவர் பற்றிக் குறிப்பிடும்போது 'உலகளாவிய மானுடனின் கவிஞன்' என்கிறார். திருக்குறளில் கிறித்துவச் சிந்தனைகளின் தாக்கம் இருப்பது பற்றிப் பேசுகிறார்.

"அவர் சிறந்த சிந்தனைகளை உள்வாங்கிக் கொண்டவர் (Eclectic). அண்டை அயலில் கிறித்துவத் தாக்கங்கள் இருந்து கொண்டிருந்தன. பல பத்திகள் குறித்த உணர்வை அப்படியே பெற்றுள்ளன. அவர்தன் உத்வேகத்தைப் பெற்றுள்ள ஆதாரங்களுள் ஒன்றாகக் கிறித்தவப் புனித நூல்கள் இருந்திருக்க வேண்டும்......... "

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர், சாந்தோம் பகுதியில் இயங்கிய புனித தாமஸின் செயல்பாடுகளை மனதில் கொண்டு, அடிக்கடி கிறித்தவ மதத்தினருடன் கலந்துறவாடிய தாக்கம் திருக்குறளில் உள்ளது என்ற ரீதியில் போப் இதனை எடுத்துரைக்கிறார். மேலும், குறள் பொதுமறை என்பதற்கு ஏற்ப, கிறித்தவர்கள் உரிமை கொண்டாடக் கூடிய பனுவலாக உள்ளது. அதையும் உணர்த்தும் விதத்திலே திருவள்ளுவர் Eclectic என்றும் சொல்லிவிடுகிறார்.

இருபத்தோராம் நூற்றாண்டில் திருக்குறளுக்கு ஓர் ஆங்கில மொழியாக்கம் கொண்டுவரும் கோபாலகிருஷ்ண காந்தி, போப்பின் மொழிபெயர்ப்பை அடிப்படையாகக் கொண்டு தனது மொழிபெயர்ப்பை அமைத்துக் கொள்கிறார். 200 ஆண்டுகளுக்கு முந்தைய போப்பின் ஆங்கிலம் சற்றுக் கரடுமுரடாக இருப்பதால், இன்றைய ஆங்கிலத்தில் மொழிபெயர்த்திருப்பதாக விளக்குகிறார்.

சிலப்பதிகாரத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர்களில் இருவரைப் பற்றி விவாதிக்க வேண்டும். ஆர்.எஸ்.பிள்ளையின் ஆங்கில மொழிபெயர்ப்பு தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தால் வெளியிடப்பட்டுள்ளது. ஆர்.பார்த்தசாரதி என்னும் இந்திய–ஆங்கிலக் கவிஞரின் மொழியாக்கம் (The Story of Anklet) பென்குவின் நிறுவனத்தால் வெளியிடப்பட்டுள்ளது. இவற்றில், ஆர்.எஸ்.பிள்ளை, தொன்மையான தமிழ்ப் பனுவலைத் தொன்மையானதொரு ஆங்கிலச் செய்யுள் நடையில் மொழியாக்கம் செய்துள்ளார். ஆர்.பார்த்தசாரதி வசன கவிதை வடிவில் இன்றைய ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். கவிஞராக இருப்பதால் காவியத்தின் செறிவையும் தீவிரத்தையும் தக்கவைத்துக் கொண்டுள்ளார். தமிழின் அக–புற மரபுகளின் பின்புலத்தைப் பிற பண்பாட்டினர் புரிந்துகொள்ளும் வகையில் நீண்ட முன்னுரை தந்துள்ளார். இதனால், ஆர்.பார்த்தசாரதியினுடைய மொழியாக்கம் வாசகனைச் சென்று சேர்கிறது. ஆர்.எஸ்.பிள்ளையினுடையது பிரச்சினைகளின்றிச் சரியாகச் செய்யப்பட்டிருந்தாலும், வாசகனைச் சென்று சேர்வதில் சிரமம் தருவதாக உள்ளது.

ஆக, மொழியாக்கம் ஒவ்வொரு தலைமுறைக்கும் தனியாக மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதும் ஒன்றுக்குமேற்பட்ட மொழியாக்கங்கள் ஒரு பிரதிக்கு ஏன் அவசியமாகின்றன என்பதும் தொன்மையான நூலை இன்றைய காலகட்டத்தில் மொழிபெயர்க்க எது சரியான அணுகுமுறை என்பதும் மொழிபெயர்ப்பு ஏன் என்பதும் தொடர்ந்து விவாதிக்கப்பட வேண்டியவை ஆகின்றன.

ஆதாரங்கள்:

1. குறுகியவழி / ஆந்த்ரே ழீட் / தமிழில் : க.நா.சு. / சமுதாயம் பப்ளிகேஷன்ஸ், 1986.
2. A compendium of Tirukkural Translations in English / Vol I / CICT, Chennai, 2010.
3. Cilappathikaram / Tr R.S. Pillai/ Tanjavur Tamil University.
4. The Story of Anklet / Tr R. Parthasarathy / Penguin.

— நன்றி: இலக்கியமலர் 2023 என்னும் நூலிலிருந்து....

சேலம் மாவட்டம்

மாற்றுத்திறனாளிகள் வசிக்கும் இடங்களுக்கேச் சென்று அரசின் திட்டங்கள் கிடைக்க வழிவகை செய்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றி

"மாற்றுத்திறனாளிகள் வாழ்வில் ஒரு புதிய அத்தியாத்தை இதுவரை எந்த அரசும் உருவாக்காத அத்தியாத்தை உருவாக்கிட வேண்டும் என்று இத்துறையின் அமைச்சர் என்ற முறையில் நான் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், மாற்றுத்திறனாளிகளைக் கை தூக்கி விடும் துறையாக இந்தத்துறை செயல்படுகிறது. அனைத்துத்துறை வளர்ச்சி, அனைத்து மக்களின் வளர்ச்சி என்ற திராவிட மாடலுக்குள் இதுபோன்ற விளிம்பு நிலை மக்களின் வளர்ச்சியும், மகிழ்ச்சியும் தான் அடங்கியிருக்கிறது. மாற்றுத்திறனாளிகளின் அனைத்து கோரிக்கைகளும் நிறைவேற்றப்பட வேண்டும். அவர்களது மகிழ்ச்சியில்தான் என்னுடைய மகிழ்ச்சி, இந்த அரசாங்கத்தினுடைய மகிழ்ச்சி இருக்கிறது."

— மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்

மாற்றுத்திறனாளிகளின் நலனைப் பேணிக்காத்திட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இந்தியாவிலேயே முதல்முறையாக மாற்றுத்திறனாளிகளின் நல்வாழ்விற்காகத் தனித்துறையை உருவாக்கினார். மேலும், அவர்கள் உரிய மரியாதையுடன் அழைக்கப்பட வேண்டும் என்ற நோக்கில் "மாற்றுத்திறனாளிகள்" என்ற சொல்லையும் அறிமுகப்படுத்தினார். மாற்றுத்திறனாளிகளின் வாழ்வினை மேம்படுத்திடும் வகையில், அவர்களது கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் அதிகக் கவனம் செலுத்தி வருவதோடு, மாற்றுத்திறனாளிகள் சமுதாயத்தில் சுயமரியாதையுடனும், சம உரிமையுடனும் வாழப் பல்வேறு திட்டங்களையும் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வழியில் தற்பொழுது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களும் மாற்றுத்திறனாளிகள் நலனுக்காகப் பணியாற்றி வருகிறார்கள். இதற்கு எடுத்துக்காட்டாக இந்தியாவில் மாற்றுத்திறனாளிகளுக்குச் சிறப்பான சேவை வழங்கியமைக்காக 2021ஆம் ஆண்டில் முதல் மாநிலமாகத் தமிழ்நாடு தேர்வு செய்யப்பட்டு விருது வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசால் மாற்றுத்திறனாளிகளின் நலனுக்காக எண்ணற்ற பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதன் அடிப்படையில் தற்பொழுது சேலம் மாவட்டத்தில் அரசின் நலத்திட்ட உதவிகளைப் பெறுவதற்குரிய மாற்றுத்திறனாளிகளுக்கான ஒருங்கிணைந்த மருத்துவ முகாமானது மாவட்டத்தில் உள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும், சேலம் மாநகராட்சிப் பகுதியிலும் நடத்தப்பட்டது. மாற்றுத்திறனாளிகளின் இருப்பிடங்களுக்கே தொடர்புடைய அரசு அலுவலர்கள் நேரிடையாகச் சென்று மனுக்களைப்பெற்று, அவர்களின் தேவைகளைக் கேட்டறிந்து அன்றைய தினமே

தகுதியுடைய மனுக்களின் மீது நடவடிக்கைகள் மூலம் தீர்வு மேற்கொள்ளப்பட்டு வருவது சேலம் மாவட்ட மாற்றுத்திறனாளிகளிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளது.

சேலம் மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கென நடத்தப்பட்ட சிறப்பு முகாம் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளதாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாற்றுத்திறனாளிகளின் நலனுக்காகப் பல்வேறு திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாகக் கடந்த 01.01.2023 முதல் மாற்றுத்திறனாளிகளின் மாதாந்திர ஓய்வூதியத்தை ரூ.1,000லிருந்து ரூ.1,500ஆக உயர்த்தி வழங்கிட ஆணையிட்டுள்ளார்கள். மாற்றுத்திறனாளிகள் தற்சார்பு நிலையுடன் தங்கள் வாழ்வை வாழ்வதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் தமிழ்நாடு அரசால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்தியாவிலேயே மாற்றுத்திறனாளிகளுக்கு மறுவாழ்வு வழங்கிய வகையில் சேலம் மாவட்டம் சிறந்த மாவட்டமாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

இந்தியாவிலேயே மாற்றுத்திறனாளிகளுக்குச் சிறப்பான சேவை வழங்கியமைக்காக, தமிழ்நாடு முதல் மாநிலமாகத் தேர்வு செய்யப்பட்டு, மாண்புமிகு குடியரசுத் தலைவர் அவர்களால், சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினமான 03.12.2021 அன்று தமிழ்நாடு அரசுக்கு விருது வழங்கப்பட்டுள்ளது. குறிப்பாக மாற்றுத்திறனாளிகளுக்கு மறுவாழ்வு வழங்கிய வகையில் இந்தியாவிலேயே சேலம் மாவட்டம் சிறந்த மாவட்டமாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

அந்த வகையில் சேலம் மாவட்டத்தில் உள்ள அனைத்து வகையான மாற்றுத்திறனாளிகளுக்கும் அவர்கள் இடத்திற்கே நேரடியாக அரசின் முக்கியத்துறை அலுவலர்கள் சென்று நலத்திட்ட உதவிகள் பெறுவதற்கான அடையாள அட்டை வழங்குதல், வருவாய்த்துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, கல்வித்துறை, மாவட்டத் தொழில் மையம், மகளிர் திட்டம் உள்ளிட்ட பல்வேறு துறைகள் மூலம் வழங்கப்படும் நலத்திட்டங்கள் மாற்றுத்திறனாளிகளுக்கு ஒரே இடத்தில் எளிதாகக் கிடைத்திடும் வகையில் இச்சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன.

குறிப்பாக, சேலம் மாவட்டத்தில் கடந்த 08.02.2023 முதல் 28.02.2023 வரை 21 நாட்கள் நடைபெற்ற அரசின் நலத்திட்ட உதவிகளைப் பெறுவதற்குரிய மாற்றுத்திறனாளிகளுக்கான ஒருங்கிணைந்த மருத்துவ முகாமில் மாற்றுத்திறனாளிக்கான அடையாள அட்டை வேண்டி விண்ணப்பம் வழங்கிய 4,174 மாற்றுத்திறனாளிகளின் மனுக்களை வருவாய்த்துறை மற்றும் மருத்துவத் துறையினரால் மனு அளிக்கப்பட்ட அந்த இடத்திலேயே மனுக்கள் பரிசீலனை செய்யப்பட்டு, கணினியில் பதிவேற்றம் செய்து உடனடியாக மருத்துவச்சான்றுடன் கூடிய மாற்றுத்திறனாளிக்கான அடையாள அட்டைகள் தொடர்புடைய நபர்களுக்கு வழங்கப்பட்டன.

மேலும், இம்முகாமில் மாற்றுத்திறனாளிகள் தொழில் தொடங்க வங்கிக்கடன் வேண்டியும், பராமரிப்பு உதவித்தொகை வேண்டியும், குடும்ப அட்டை, வாக்காளர் அடையாள அட்டை, வீட்டுமனைப் பட்டா, ஆதார் அடையாள அட்டை, கல்வி உதவித்தொகை, உதவி உபகரணங்கள் வேண்டியும், என மொத்தம் 16,183 மனுக்கள் பெறப்பட்டு இதன்மீது உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளும் வகையில் தொடர்புடைய அலுவலர்களுக்கு இம்மனுக்கள் பிரித்து வழங்கப்பட்டுள்ளன.

இது தவிர, சேலம் மாவட்டத்தில் இதுவரை 69,568 நபர்களுக்கு மாற்றுத்திறனாளிகள் அடையாள அட்டைகளும் வழங்கப்பட்டுள்ளன. குறிப்பாக, நடப்புநிதி ஆண்டில் 11,909 மாற்றுத்திறனாளிகளுக்குப் பராமரிப்பு உதவித்தொகையாக ரூ.22.75 கோடியும், 1,205 மாற்றுத்திறனாளிகளுக்குக் கல்வி உதவித்தொகையாக ரூ.44.25 இலட்சமும், 680 பயனாளிகளுக்குச் சிறப்புப் பள்ளிகள் மற்றும் உணவூட்டும் மானியமாக ரூ.1.61 கோடியும், 377 பயனாளிகளுக்குக் கூட்டுறவு வங்கிக்கடனாக ரூ.2 கோடியும், மாண்புமிகு முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்

கீழ் 40 பயனாளிகளுக்கு ரூ.24.70 இலட்சம் மதிப்பில் செயற்கை அவயங்களும், 332 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.1.73 கோடி மதிப்பிலான உதவி உபகரணங்கள் உள்ளிட்ட பல்வேறு உதவிகள் என இதுவரை 14,953 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.29.39 கோடி மதிப்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இச்சிறப்பு முகாம் மூலம் பயனடைந்த தாதகாப்பட்டி பகுதியைச் சேர்ந்த திரு. முருகேசன் அவர்களின் தங்கை திருமதி புவனேஸ்வரி அவர்கள் நம்மிடம் தெரிவித்ததாவது:

எனது பெயர் புவனேஸ்வரி. எனது அண்ணன் பெயர் முருகேசன் (வயது 55). நாங்கள் சேலம் தாதகாப்பட்டி, திருஞானம் நகர் பகுதியில் வசித்து வருகிறோம். எனது அண்ணன் பிறவியிலிருந்தே இரு கை, இரு கால்கள் பாதிக்கப்பட்ட வாய் பேச இயலாதமாற்றுத்திறனாளி.மேலும்,அவரால்பிறரின் துணை இல்லாமல் எழுந்து நிற்கவோ, நடக்கவோ இயலாது. அவர் எனது பாதுகாப்பில் இருந்து வருகிறார். அரசால் மாற்றுத்திறனாளிகளுக்கென வழங்கப்படும் நலத்திட்ட உதவிகளைப் பெறுவதற்கு அரசு அலுவலகங்களுக்குச் சென்றுவர இயலாத காரணத்தால் இதுவரை எனது அண்ணன் முருகேசன் வீட்டிலிருந்து வெளியில் சென்றதில்லை. எனவே, தற்பொழுது வரை எவ்வித அரசு நலத்திட்ட உதவிகளையும் அவர் பெற்றதில்லை.

இந்நிலையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளதாகக்கூறி மாற்றுத்திறனாளிகள் நலத்துறையிலிருந்து எங்களது வீட்டின் அருகில் கடந்த 25.02.2023 அன்று சிறப்பு முகாம் நடத்தினார்கள். இச்சிறப்பு முகாமில் மருத்துவர்கள், வருவாய்த்துறை உள்ளிட்ட பல்வேறு அரசு அலுவலர்கள் வந்திருந்தனர். எனது அண்ணனுக்கு மாற்றுத்திறனாளிக்கான அடையாள அட்டை வேண்டுமென விண்ணப்பம் வழங்கினேன்.

உடனடியாக மாற்றுத்திறனாளிகள் நலத்துறை அலுவலர்கள், மருத்துவர்கள், வருவாய்த்துறையினர் எங்களது வீட்டிற்கே வந்து மனுவைப் பரிசீலித்து, அடுத்து 2 மணி நேரத்திற்குள்ளாகவே அவருக்குத் தேவையான மருத்துவச்சான்றுடன் கூடிய மாற்றுத்திறனாளிகளுக்கான அடையாள அட்டை வழங்கினார்கள். மேலும், ஆதார் அட்டையும் பெற்று வழங்கினார்கள். இதுதவிர அவர் 90 சதவீதம் மாற்றுத்திறன் கொண்டவர் என்பதால் அவருக்கு மாதாந்திர உதவித்தொகை பெறுவதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளனர்.

இவை அனைத்தும் பெறுவதற்குப் பல மாத காலம் ஆகும் என்பதாலேயே இதுவரை எனது அண்ணனுக்கு எவ்வித நலத்திட்டங்களையும் பெற விண்ணப்பிக்கவில்லை. ஆனால், தற்பொழுது நாங்கள் யாரும் எதிர்பார்க்காத வகையில் எங்களது வீட்டிற்கே அரசு அதிகாரிகள் வந்து எங்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் மேற்கொண்டது எங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தந்துள்ளது.

மாற்றுத்திறனாளிகளின் நிலை அறிந்து இதுபோன்று அவர்களின் இருப்பிடங்களுக்கே நேரில் சென்று தேவைகளைக் கேட்டறிந்து உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்திய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு மாற்றுத்திறனாளிகளின் சார்பில் எங்களது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இச்சிறப்பு முகாம் மூலம் பயனடைந்த உடையாப்பட்டியைச் சேர்ந்த மாணவி தன்ஷிகா அவர்களின் தாய் திருமதி பஞ்சவர்ணம் அவர்கள் நம்மிடம் தெரிவித்ததாவது:

எனது பெயர் பஞ்சவர்ணம். எனது மகள் பெயர் தன்ஷிகா (வயது 8). நாங்கள் உடையாப்பட்டி பகுதியில் வசித்து வருகிறோம். எனது மகள் 7 மாதக் குழந்தையிலிருந்து கை, கால், பேச்சுத்திறன் பாதிக்கப்பட்டு நடக்க இயலாத சூழ்நிலையில் இருந்து வருகிறாள். தற்போது சேலம் அஸ்தம்பட்டியில் மன வளர்ச்சிக் குன்றிய இளம் சிறார்களுக்கான ஆரம்ப நிலைப் பயிற்சி மையத்தில் 3ஆம் வகுப்பு படித்து வருகிறார். எனது கணவர் பெயர் முருகேசன். அவர் கூலி வேலைக்குச் சென்று வருகிறார். மேலும், எனது மகளுக்கு மாற்றுத்திறனாளிகளுக்கான மாதாந்திர உதவித்தொகையாக ரூ.2,000 தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டு வருகிறது.

தினசரி எனது மகளைப் பள்ளிக்கு தூக்கிச்சென்று அமர வைத்துப் பள்ளி முடிந்த பின்பு மீண்டும் வீட்டிற்குத் தூக்கிக் கொண்டு வருவேன். அவளுக்கு எங்களால் என்ன உதவி செய்ய இயலும் என எண்ணி ஏங்கி வந்தோம். இச்சூழ்நிலையில் எங்கள் வீட்டிற்கு அருகிலேயே தமிழ்நாடு அரசால் மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு முகாம் நடத்தப்படுவதாக அருகில் உள்ளவர்கள் தகவல் சொன்னார்கள்.

இந்த முகாமில் எனது மகளுடன் மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்புச் சக்கர நாற்காலி வேண்டுமெனக் கேட்டிருந்தேன். உடனடியாக அங்கு வந்திருந்த மருத்துவக் குழுக்கள் எனது மகளைப் பரிசோதித்துச் சிறப்பு சக்கர நாற்காலி வழங்க பரிசீலனை செய்தார்கள். அப்போது இம்முகாமிற்குத் திடீரென ஆய்விற்கு வந்த மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் எனது மகளை நலம் விசாரித்துத் தகுதியான மனு என்பதை அறிந்து உடனடியாக ரூ.9,000 மதிப்பிலான சிறப்புச் சக்கர நாற்காலியில் மாவட்ட ஆட்சியர் அவர்களே அமரவைத்தார்கள். நான் எதிர்பார்க்காத வகையில் உடனடியாகச் சிறப்புச் சக்கர நாற்காலி கிடைக்கப்பெற்றது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தந்தது.

இந்நிலையில் எனது மகளுக்கு வழங்கப்பட்டுள்ள இச்சிறப்பு வகை சக்கர நாற்காலியில் அவளை அமர வைத்து அருகில் உள்ள பள்ளிக்குச் சென்று வருவதுடன் தேவைப்படும் இடங்களுக்கும் தற்பொழுது அழைத்துச்செல்ல பேருதவியாக உள்ளது. இந்தச் சிறப்பு நாற்காலியைப் பயன்படுத்தத் தொடங்கியது முதல் எனது மகளின் மன அழுத்தம் குறைந்து சிரித்த முகத்துடன் புத்துணர்ச்சியோடு இருப்பதைக் காண்கிறோம்.

இந்தக் காலத்தில் எங்களைப் போன்றவர்கள் எவ்வித அலைச்சலும் இல்லாமல் நாங்கள் இருக்கும் இடங்களிலேயே அரசு அதிகாரிகள் வந்திருந்து தேவையான உதவிகளைச் செய்வது மிகவும் பாராட்டக்கூடிய ஒன்றாகும். இத்தகைய சிறப்பு ஏற்பாட்டை மேற்கொண்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எங்களது குடும்பத்தின் சார்பில் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வழியில் அனைத்துத் தரப்பு மக்களும் பயன்பெறத்தக்க சிறப்பான பல்வேறு திட்டங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் செயல்படுத்தி இந்தியாவிலேயே தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாகத் திகழச்செய்வதுடன் தனது வெளிப்படையான நிருவாகத்திறமையால் தமிழ்நாட்டை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்லும் இத்தருணத்தில் அனைத்துத் தரப்பினரும் இத்தகைய சிறந்த முயற்சிக்கு உறுதுணையாக தொடர்ந்து தங்களது பங்களிப்பை அளிக்க வேண்டும் என்று சொன்னால் அது மிகையாகாது.

தொகுப்பு:
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
சேலம் மாவட்டம்.

திருவண்ணாமலை மாவட்டம்

தாட்கோ மானியத்துடன் கடனுதவி வழங்கி ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் வாழ்வாதாரத்தினை முன்னேற்றமடைய வைத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அய்யா அவர்களுக்கு நன்றி

தாட்கோ

ஏழை, எளிய மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு தமிழ்நாடு அரசு பல்வேறு திட்டங்களைக் கொண்டு வந்துள்ளது. அதில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்களுக்கு மானியத்துடன் கூடிய கடன் உதவிகளை வழங்கி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சிறப்பான, வெளிப்படைத் தன்மையுடன் ஆட்சியை நடத்தி வருவது பொதுமக்களிடையே மிகுந்த வரவேற்பையும், பேராதரவையும், பெற்றுள்ளது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் அரசு, அனைத்துத் தரப்பு மக்களுக்கும் எண்ணற்ற பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. அந்த வகையில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மலைவாழ் மக்களுக்கு தாட்கோ மூலம் அவர்களின் வாழ்வாதாரம் மேம்பட எண்ணற்ற மக்கள் நலத்திட்டங்களை அறிவித்துச் சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறது.

அதேபோல், தாட்கோ மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களின் விவரங்கள், மகளிர் வேளாண் நிலம் வாங்கும் திட்டம் (LPS). இத்திட்டம், ஆதிதிராவிட மக்களின் சமூகப் பொருளாதார நிலையை மேம்படுத்தவும். ஆதிதிராவிட மகளிர் பெயரில் சொந்த நிலம் வாங்கவும், ஆதிதிராவிட மக்களின் நில உடமையை அதிகரிக்கும் பொருட்டும், அந்நிலத்தை மேம்படுத்த பல்வேறு உதவிகள் அளித்து, வேளாண் உற்பத்தித் திறன் அதிகரிப்பதை நோக்கமாகவும் கொண்டுள்ளது. இத்திட்டத்தில் பயனாளிகள் 5 ஏக்கர் வரை புஞ்சை நிலம் அல்லது 2.50 ஏக்கர் வரை நஞ்சை நிலம் சொந்தமாக வாங்கலாம். அரசு வழிகாட்டி மதிப்பீட்டின்படி உள்ள தொகையில் 30 சதவிகிதம் அல்லது ரூ.2.25 இலட்சம் இதில் எது குறைவோ, அத்தொகை மானியமாகப் பெறலாம்.

இத்திட்டத்தின்கீழ் வாங்கப்படும் நிலங்களுக்கு முத்திரைத்தாள் மற்றும் பதிவுக் கட்டணத்தில் 100% விலக்கு அளிக்கப்படும், நிலம் மேம்பாட்டுத் திட்டம் (LDS) ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மக்களின் நிலங்களை விவசாயத்திற்குக் கிணறு தோண்டுதல், ஆழ்துளைக் கிணறு அமைத்தல் போன்றவைகள் ஏற்படுத்திக் கொள்ளலாம். இத்திட்டத்தில் பயன்பெற, விண்ணப்பதாரர்கள் ஆதிதிராவிடர் அல்லது பழங்குடி இனத்தைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும். விண்ணப்பதாரரின் நிலத்தில் போதிய நீர் ஆதாரம் உள்ளது எனப் புவியியல் வல்லுநரின் சான்று பெறப்படவேண்டும். நபார்டு வழிகாட்டுதலின்படி திட்டத் தொகை தேர்வுக்குழுவினரால் நிர்ணயம் செய்யப்படும். ஆதிதிராவிடர்களுக்குத் திட்டத் தொகையில் 30 சதவிகிதம் அல்லது ரூ.2.25 இலட்சம் இதில் எது குறைவோ அத்தொகை மானியமாகப் பெறலாம். மற்றும் பழங்குடியினர்களுக்கு திட்டத் தொகையில் 50 சதவிகிதம் அல்லது ரூ.3.75 இலட்சம் இதில் எது குறைவோ அத்தொகை மானியமாகப் பெறலாம், ஆதிதிராவிடர் விவசாயிகளுக்கான துரித மின் இணைப்புத் திட்டம் ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின விவசாயிகள் தங்களது நிலத்தில் ஆழ்துளைக் கிணறு, திறந்தவெளிக் கிணறு அமைத்து அதற்காக மின் வாரிய அலுவலகத்தில் மின் இணைப்பிற்காகப் பதிவு செய்து காத்திருப்பவர்களுக்கு தாட்கோ மூலம் 90 சதவிகிதம் மானியம், 10 சதவிகிதம் பயனாளியின் பங்குத் தொகையுடன் பதிவு மூப்பின்படி நிதி விடுவிக்கப்பட்டு துரித மின் இணைப்புப் பெறலாம்.

தொழில்முனைவோர் திட்டம் (EDP) ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின வகுப்பைச் சார்ந்தவர்கள் அவர்களுக்குத் தெரிந்த விருப்பமான முன் அனுபவம் உள்ள தொழில்புரிந்து வருவாய் ஈட்டிப் பயன்பெற்று வாழ்க்கையில் முன்னேறும் பொருட்டுத் தொழில் முனைவோர் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. வருவாய் ஈட்டக்கூடிய தொழில்களான டாடா ஏ.சி., ஆம்னி, வாகனங்கள், டூரிஸ்ட் வாகனங்கள், பயணியர் ஆட்டோ, பால் பண்ணை, கோழிப் பண்ணை, கலவை இயந்திரங்கள் தொழில்கள் போன்ற அனைத்துத் தொழில்களுக்கும் விண்ணப்பிக்கலாம். ஆதிதிராவிடர்களுக்குத் திட்டத் தொகையில் 30 சதவிகிதம் அல்லது ரூ.2.25 இலட்சம் இதில் எது குறைவோ அத்தொகை மானியமாகப் பெறலாம், பழங்குடியினர்களுக்குத் திட்டத் தொகையில் 50 சதவிகிதம் அல்லது ரூ.3.75 இலட்சம் இதில் எது குறைவோ அத்தொகை மானியமாகப் பெறலாம்.

இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்புத் திட்டம் (SEPY) படித்த வேலைவாய்ப்பற்ற அல்லது குறைவான சம்பளத்தில் பணிபுரியும் ஆதிதிராவிட இளைஞர்கள் தங்களுக்குத் தெரிந்த தொழிலில் மானியத்துடன் கடன் உதவி பெற்று வருவாய் ஈட்டிப் பயன்பெற்று வாழ்க்கையில் முன்னேற்றம் அடையும் பொருட்டு இளைஞர்களுக்கான சுயவேலைவாய்ப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. விண்ணப்பதாரர்கள் 18 வயது முடிந்தவராகவும், 45 வயதுக்கு உட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும். அவர்களுக்குத் தெரிந்த விருப்பமான, முன் அனுபவம் உள்ள தொழில்புரிந்து வருவாய் ஈட்டிப் பயன்பெற்று வாழ்க்கையில் முன்னேறும் பொருட்டு டாடா ஏ.சி., ஆம்னி, கனரக வாகனங்கள், டூரிஸ்ட் வாகனங்கள், பயணியர் ஆட்டோ, பால் பண்ணை, கோழிப் பண்ணை, கலவை இயந்திரங்கள், ஜெராக்ஸ் கடை, கம்ப்யூட்டர் நிலையம், ஹோட்டல், துரித உணவகம், டிஜிட்டல் ஸ்டுடியோ போன்ற தொழில்கள் செய்யலாம். ஆதிதிராவிடர்களுக்குத் திட்டத் தொகையில் 30 சதவிகிதம் அல்லது ரூ.2.25 இலட்சம் இதில் எது குறைவோ அத்தொகை மானியமாகப் பெறலாம். பழங்குடியினர்களுக்குத் திட்டத் தொகையில் 50 சதவிகிதம் அல்லது

ரூ.4 இலட்சம் இதில் எது குறைவோ அத்தொகை மானியமாகப் பெறலாம், இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்புச் சிறப்புத் திட்டம், மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கான பொருளாதார நிதித் திட்டம் எனப் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

இத்திட்டத்தின் மூலம் பயன்பெற்ற பயனாளி திருவண்ணாமலை மாவட்டம், அரடாப்பட்டு கிராமத்தைச் சேர்ந்த திரு. முனியன் அவர்கள் நம்மிடம் தெரிவித்ததாவது:

என் பெயர் முனியன், என்னுடைய ஊர் திருவண்ணாமலை மாவட்டம், அரடாப்பட்டு கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் இந்து ஆதிதிராவிடர் குடும்பத்தைச் சேர்ந்தவன். ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த நான், கூலிக்கு டிராக்டர் மூலம் உழவு ஓட்டுவது, கரும்புலோடு ஓட்டுவதும் செய்து வந்தேன். எனக்குச் சொந்தமாக 1 ஏக்கர் நிலம் உள்ளது. அந்த நிலத்தில் நான் நெல் மற்றும் மணிலா பயிர் செய்து வருகிறேன். டிராக்டர் வாங்க பணம் இல்லாததால் தாட்கோ மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களைப் பற்றி அறிந்து டிராக்டர் லோனுக்கு விண்ணப்பித்தேன். எனக்கு தாட்கோ துறை, HDFC வங்கி, மூலமாக டிராக்டர் வாங்க தாட்கோ மூலம் மானியத்துடன் கூடிய கடன் பெற்றேன். இதன் மூலம் எங்களுடைய குடும்பத்தின் வாழ்வாதாரம் முன்னேற்றம் அடைந்துள்ளது. இத்திட்டத்தைத் தந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அய்யா அவர்களுக்கு என் சார்பாகவும் எனது குடும்பத்தின் சார்பாகவும் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இத்திட்டத்தின் மூலம் பயன்பெற்ற பயனாளி திருவண்ணாமலை மாவட்டம், தண்டாரம்பட்டு வட்டம், கீழ்சிறுபாக்கம் கிராமத்தைச் சேர்ந்த திரு.தவமூர்த்தி அவர்கள் நம்மிடம் கூறும்போது,

என் பெயர் தவமூர்த்தி, என்னுடைய ஊர் தண்டாரம்பட்டு வட்டம், கீழ்சிறுபாக்கம் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் இந்து ஆதிதிராவிடர் குடும்பத்தைச் சேர்ந்தவன். ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த நான், மானியத்துடன் கூடிய டிராக்டர் வாங்குவதற்கு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள தாட்கோ அலுவலகத்தில் விண்ணப்பித்து இருந்தேன். மொத்த திட்டத் தொகை ரூ.7.57 இலட்சம் அதில் தாட்கோ மானியமாக ரூ.2.25 இலட்சம் எனக்கு வழங்கப்பட்டது. மீதமுள்ள தொகையினை தாட்கோ மூலம் மானியத்துடன் கூடிய கடன் பெற்று டிராக்டர் வாங்கினேன். இதன்மூலம் எங்களுடைய குடும்பத்தின் வாழ்வாதாரத்திற்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது. இத்திட்டத்தைத் தந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு என் சார்பாகவும் எனது குடும்பத்தின் சார்பாகவும் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தொகுப்பு:
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
திருவண்ணாமலை மாவட்டம்.

Published by D.MOHAN, I.A.S., on behalf of Information and Public Relations Department
Government of Tamil Nadu, Secretariat, Fort St. George, Chennai - 600 009 and Printed by: T. Suyambulingom at TAMILARASU PRESS,
Rajiv Gandhi Salai, Taramani, Chennai - 600 113. Editor : D.MOHAN, I.A.S.,